கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



அப்பா சொன்ன அறிவுரை

KALKI • 09.11.2008 • ரூ.10.00 • 96 பக்கங்கள்





இலங்கைப் பிரச்னை :

தடுமாறும் கட்சிகள்... தாக்குகிறார் தமிழருவி!



"பாதி பாம்பே ஜெயஸ்ரீ... மீதி சுனிதா சாரதி..!"

- இயக்குநர் சரண்

• குரு பெயர்ச்சிப் பலன்கள்!

DR. KAMAKSHI MEMORIAL HOSPITAL



Dr. T.G. Govindarajan
President - Founder -
Medical Director

தமிழகத்தில் இதுவே முதல் முறை

டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனை

கேன்சர் இன்ஸ்டிடியூட் (WIA) – உடன்

இணைந்து பெருமையுடன் அறிமுகம் செய்துள்ளது

தமிழ்நாட்டின் முதல் PET-CT



Discovery VCT64 SLICE PET-CT SCAN
Installed at CANCER INSTITUTE (WIA)
- Canal Bank Road Gandhi Nagar, Adyar
Chennai - 20
Cell : **93814 36899**
93814 36896

10% Special Discount On Sunday for Master & Executive Health Check-up

தமிழ் நாட்டில் முதல் PET CT Scan

இந்தியாவில் 4, 5 இடங்களில் மட்டுமே உள்ள இந்த ஸ்கேனிங் கருவியின் சிறப்பம்சங்கள்:

* கேன்சரை அறிகிறது. * கேன்சர் பரவியுள்ள மற்றும் முற்றியுள்ள நிலவரத்தை அறிகிறது. * கேன்சர் சிகிச்சைகான மருத்துவ திட்டமிடலுக்கு உதவுகிறது. * சிகிச்சைக்குபின் கேன்சர் மீண்டும் தோன்றுவதை அறிகிறது. * இதய தசைகளுக்கான இரத்த ஓட்டத்தை அறிகிறது. * மாரடைப்பு இதயத் தசைகளின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் விளைவுகளை அறிகிறது. * ஆஞ்சியோபிளாஸ்டி மற்றும் கரோனரி ஆர்டெரி பைபாஸ் சர்ஜரிகளின் மூலம் குணப்படுத்த இயலும் இதயத்தின் தசைப்பகுதிகளை அறிகிறது. (மையோ கார்டியல் பெரிஃபியூசன் ஸ்கேன் உதவியுடன்). * மனக்குழப்பம், நினைவிழத்தல், டியூமர் முதலான மூளையின் சீர்ற்ற தன்மையைக் கணிப்பதுடன் மத்திய நரம்புத் தொகுப்பில் உள்ள பாதிப்புகளையும் அறிகிறது. * நோயாளியின் மூளை மற்றும் இதயத்தின் செயல்பாடுகளை இயல்பான மனிதனோடு ஒப்பிட்டு பார்க்க உதவுகிறது.

DR. KAMAKSHI MEMORIAL HOSPITAL - SPECIALITIES AT A GLANCE

• Intensive Care Unit Cardiology & Cardio Thoracic Surgery • Neurology & Neuro Surgery • Trauma Care & Orthopaedics • Obstetrics & Gynaecology • ENT Surgery • Dermato Cosmetology • Pulmonology • Dentistry and Oral & Maxillofacial Surgery • Paediatrics • Gastroenterology • Transplant Surgery • Oncology • Transfusion Medicine • Nephrology • Urology • Vascular Surgery

இலவச ஆலோசனைக்கு: எஸ்.சுபாஷிணி - 93451 20265, 93810 30712

#1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Tel : +91-44-22469200 (30 Lines), 66300300 (30 Lines), Fax : 22463282
E-mail : info@drkamakshimemorialhospital.org
Website : www.drkamakshimemorialhospital.org

சினி சிப்ஸ்

கவியரசு கண்ணதாசனின் ஆத்மாவோடு தொடர்புகொண்டு ஒரு பாடலை எழுதி வாங்கியிருக்கின்றனர் 'இரா' படக் குழுவினர்! முதலில் எழுத மறுத்த கண்ணதாசன் ஆத்மா, பிறகு ஏழு அனாதை குழந்தைகளுக்கு உண்ண உணவு வாங்கிக் கொடுத்துவிட்டு வாருங்கள். பிறகு எழுதித் தருகிறேன் என்று சொன்னதாம். (ஃபீஸ் என்னப்பா கொடுத்தீங்க...)

எப்போதுமே ரசிகர் மன்றத்தைப் பற்றி கவலைப்படாத வைகை புயலு, விஜயகாந்துடனான மோதலுக்குப் பிறகு, ரசிகர் மன்றங்களைக் கட்டியெழுப்பும் வேளையில் மும்முரமாக இருக்கிறாராம். இனி வரும் படங்களில் இலை மறை காய் மறையாக பஞ்ச் டயலாக் வேறு இருக்குமாம். (புயலு மெய்யாலுமே அரசியலுக்கு வருதா அய்யோ... அய்யோ...)

பாடாலசிரியர்கள் போய் இயக்குநர்கள் பாட்டெழுதும் காலம் இது. இப்போ இயக்குநரையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, ஒரு தயாரிப்பாளர் பாட்டெழுத ஆரம்பித்து விட்டார். யார்? 'இன்னொருவன்' படத்தின் தயாரிப்பாளர் எஸ்.பி. சந்திரசேகர்தான். (அப்ப இயக்குநர், சொல்லாமலே தலையாட்டுவார்?)

- நியூஸ் பாய்

நீண்ட நாட்களுக்குப் பிறகு, கங்கை அமரன் 'புகைப்படம்' படத்தின் மூலம் இசையமைப்பாளராக ரீ-என்ட்ரி ஆகிறார். முதலில் 'வேண்டாம்' என மறுத்தவர், படத்தின் கதையைக் கேட்டப் பிறகு 'சரி' என்று தன் ஆர்மோனியத்தைத் தூசு தட்டியிருக்கிறார். (வெங்கட்பிரபு வாய்ப்புத் தருவாரா ஸார்?)

தன் இசையில் மட்டும் பாடிவந்த இசைஞானி... இப்போது யுவனின் இசையில் மட்டுமே பாடி வருவது அறிந்ததே! 'சிலம்பாட்டம்' படத்துக்காக ஸ்ரேயா கோஷலுடன் ஒரு பாடலைப் பாடியிருக்கிறார். இசை? வேற யாரு நம்ம யுவன் தான் (இதைத்தான் சொன்னாங்களோ... தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்னு...)



இலங்கைப் பிரச்னை

"அனைத்துக் கட்சி கூட்டம்

- தாக்குகிறார்



கொழுந்துவிட்டு எரியும் இலங்கைப் பிரச்னையில் மத்திய, மாநில அரசின் செயல்பாடுகள், கட்சிகளின் அணுகுமுறை ஆகியவை குறித்து, தமது அதிரடி கருத்துக்களை எடுத்துவைக்கிறார் தமிழருவி மணியன்.

கலைஞர் நிலைப்பாடு :

அனைத்துக் கட்சி கூட்டம், ஒரு பயனற்ற வீணான முயற்சி. ஆனால் தமிழ்நாட்டில் எல்லாப் பிரச்னைகளும், அரசியல் ஆதாயம் தேடுவதற்குப் பயன்படுகிற நிலையில், மற்ற தலைவர்களுடன் ஒப்பிடும்போது, கலைஞரின் நிலைப்பாட்டில், குறிப்பிடத்தக்க வித்தியாசம் இருக்கிறது. ஒருபுறம், கடுமையான புலி எதிர்ப்பாளர் ஜெயலலிதா; மற்றொருபுறம் புலி ஆதரவாளர்கள் வைகோ, ராமதாஸ், தொல். திருமாவளவன், நெடுமாறன். இந்த நிலையில், தம் நடவடிக்கைகள் மூலம், புலிகள் ஆதரவு நிலைப்பாடு உருவாகிவிடாமல் பார்த்துக்கொள்கிற முன்னெச்சரிக்கை கலைஞருக்குத் தேவையாக இருக்கிறது.

* வைகோ



புலிகளும், ஈழப் பிரச்னையும் ஒன்றோடொன்று பின்னிக்கிடக்கிற நிலையில், கலைஞரின் நிலை இருதலைக் கொள்ளி எறும்புதான். 'தம் ஆட்சியை தக்கவைத்துக் கொள்ளவேண்டும்; அதே சமயம் ஈழத்தமிழர் நலனுக்காகச் செயல்படுவது போன்ற தோற்றமும் சிதையாமல் இருக்க வேண்டும்' என்ற நோக்கத்தில் பிறந்ததுதான், சர்வ கட்சி கூட்டமும், அதன் தீர்மானங்களும். அதில் எடுக்கப்பட்ட முக்கியமான தீர்மானம், இலங்கையில்

போர் நிறுத்தம். ஆனால் அதைக் குறித்து, பிரதமரும், பிரணாப் முகர்ஜியும் வாயே திறக்கவில்லை. மருந்துகளும் உணவுப் பொருட்களும் மனிதாபிமான உதவி. தீர்வு என்பது சிங்களர்களுக்குச் சமமான உரிமையை தமிழர்களுக்குப் பெற்றுத் தருவதில்தான் இருக்கிறது. இந்தப் பாதையில் எள்முனை நடவடிக்கைகூட இல்லாத நிலையில், 'ராஜினாமா செய்ய வேண்டிய அவசியம் இல்லை' என்று கலைஞர் அறிவித்திருப்பது, ஈழப் பிரச்னையில் நியாயம் கற்பித்ததாக ஆகாது.

மத்திய அரசின் துரோகம் : புலிகளை அழிக்கிறோம் என்ற பெயரில், இலங்கை அரசு நடத்தும் இன ஒழிப்பு வேலைக்கு, மத்திய அரசு துணை நிற்கிறது. தமிழர்களுக்கு, மத்திய அரசு துணையாக இல்லை என்பதைவிட, ஈழத் தமிழர்களுக்குத் துரோகம் இழைத்திருக்கிறது என்பதே சரி. இலங்கை ராணுவத்துக்குப் பயிற்சி தளவாடம், ராடார் சாதனங்கள் கொடுத்தது மத்திய அரசின் தவறான நடவடிக்கை. எல்லாவற்றையும் அரசியல் ஆக்கும் தமிழ்நாட்டில், ஆறு கோடி மக்களையும் இணைத்து, ஒரே குரலில் பேசுவதற்கு நாதி

வேஸ்ட்!”

தமிழருவி மணியன்

* கருணாநிதி



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர் : **கதிர்பாரதி**

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் : 044 - 4343 8899

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்கள் :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 3,800/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இல்லை.

சீமான் - அமீர் - பாரதிராஜா :


இந்தப் பிரச்னையில் திரைப்படக் கலைஞர்கள் ஈடுபாடு ஆரோக்கியமானது அல்ல. அவர்களில் நூற்றுக்கு, தொண்ணூறு பேருக்கு எந்தச் சமூக பிரஞையும் கிடையாது. மக்களின் ரசனையை வளர்த்தெடுப்பதற்குப் பதிலாகக் கலாச்சார சீரழிவு மூலம் பாமரர்களை மிகவும் கீழே கொண்டுபோவது தான் இவர்கள் 'சேவை'. கலையை வளர்ப்பவர்கள் என்பதைவிட, காசு பார்ப்பவர்கள் என்பதே பொருத்தம். புலி ஆதரவு கலைஞரான பாரதிராஜா, கலைஞர் ஆட்சிக்கு வரும்போது தான் சிலிர்த்தெழுவார். ஜெ.ஆட்சியில், பெட்டிப் பாம்பாக மாறிவிடுவார்.



* பாரதிராஜா



* சீமான்



* அமீர்

காங்கிரஸ் திருந்தட்டும் :

இலங்கைப் பிரச்னையை, புலிகள் பிரச்னையாக காங்கிரஸ் பார்க்கக் கூடாது. புலிகள் - தமிழர்கள் என்று பிரித்துப் பார்த்துத் தீர்வு காண முன்வர வேண்டும். ராஜீவ் கொடூரக் கொலையை காங்கிரஸ்காரர்களால் (யாராலும் எளிதில்) மன்னிக்க முடியாதுதான். அதேசமயம் காங்கிரஸ்காரர்களுக்கு இன உணர்வும் மொழி உணர்வும், கிடையாது என்று பழி சேராமல் அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வைகோ வம்பு :

'இலங்கைப் பிரச்னையில் கலைஞரை விட, நான்தான் அதிக அக்கறை எடுத்துக்கொள்கிறேன்' என்று உலகம் நினைப்பதற்காக, புலிகள் ஆதரவு, பிரிவினை கோஷம் என்று பரபரப்பாகப் பேசி கலைஞரைச் சங்கடப்படுத்தி, அரசியல் ஆதாயம் தேடுகிறார் வைகோ. இவர் நேர்மையான அரசியல்வாதியாக இருந்தால், புலிகளின் ஆதரவாளரான இவர், கடும் எதிர்ப்பாளராக இருக்கும், ஜெ.வுடன் கூட்டணியில் இருக்கக் கூடாது.

புலிகளை அழிக்கிறோம் என்ற பெயரில் இலங்கை அரசு நடத்தும் இன ஒழிப்பு வேலைக்கு மத்திய அரசு துணைபோகிறது!

தீர்வு :

நமது நாட்டின் மாநிலங்கள் பெற்றிருப்பது போன்ற அதிகாரங்கள், இலங்கை கிழக்கு - வடக்கு மாகாணங்களுக்குத் தேவை. அவற்றை சிங்கள அரசு வழங்கினால், தனி ஈழம் தேவையில்லை. வல்லரசாக உருவாகிவிட்ட இந்தியா, சிங்களர்களையும் தமிழர்களையும் பேச்சு வார்த்தையில் ஈடுபட வைக்க முடியும். பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்படாவிடில், ஜனநாயக நாடாக தமிழ் ஈழம் மலர்வதற்கு, இந்திய அரசு உதவ வேண்டும். அப்படி உருவாகும் நாட்டில் சர்வாதிகாரியாக நடந்துகொள்ளும் பிரபாகரனுக்கு எந்த வாய்ப்பும் இருக்கக்கூடாது என்பதையும் இந்திய அரசு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

- ப்ரியன்


வசந்த் டிவி
யில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.
அமெரிக்காவில் சிகிச்சை பெற்ற
"புரூக்ளின் மருத்துவமனையில் புதைந்த உண்மைகள்"
உள்ளத்தை உருக்கும் உண்மைச்சம்பவங்கள்...
ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இரவு 10.30 மணிக்கு ஒளிபரப்பாகிறது. காணத்தவறாதீர்கள்!
SUN DIRECT சேனல் நம்பர் - 122 லும் காணுங்கள்
வசந்த் டிவி
உள்ளங்களில் மகிழ்ச்சி
VASANTH TV
எண்ணங்களின் எழுச்சி



வதைக்கும்

ராமசாமிக்கு, அடிக்கடி வாய் புண் வந்து ரொம்பவே தொல்லை செய்யும். ஆசையாக, சாம்பார் சாதம் ஒரு வாய் சாப்பிட்டாலே, 'ஆ, ஊ' என ஆர்ப்பாட்டம் பண்ணி விடுவார். வருஷத்தில மாதம் ஒருமுறை அல்லது இருமுறை இப்படி வாய் புண் வந்தால், விட்டுவிடலாம். ஆனால், அடிக்கடி மருத்துவரிடம் சென்றார் ராமன். வாய்புண் என்பது சாதாரண விஷயம்தானா... அல்லது கூர்ந்து கவனிக்கவேண்டிய அறிகுறியா...? அறிந்துகொள்ள சித்த மருத்துவர் வேல்விழியிடம் பேசினோம்.

''வாய் புண்ணை Stomatitis என சொல்வோம். உதடு, நாக்கு, கன்னத்தின் உட்புறம்... என வாயை ஒட்டிய பகுதியில் தோன்றக்கூடிய புண் அது. Mouth ulcer எனவும் சொல்வார்கள். அந்தக் காலத்துப் பெரியவர்களிடம் யாராவது வாயில் புண் என சொன்னால், 'வயித்துல புண் இருந்தால்தான் வாயில புண் வரும்' என சொல்லி விடுவார்கள். அது உண்மைதான். வாயில் புண் தோன்றுவதும் அது மறையாமல் நீடித்து இருப்பதும் எல்லாமே வயிற்றில் புண் என்பதன் அறிகுறி'' என்றவரிடம் ''வாய் புண் ஏற்பட என்ன காரணம்'' என்று கேட்டால்...

''சரியாகப் பல் துலக்காமல் விட்டுவிடுவது, போதிய சத்துக்கள் நிறைந்த ஆகாரத்தை எடுத்துக்கொள்ளாமல் இருப்பது, அளவுக்கதிகமாக இனிப்பு வகைகளைச் சாப்பிடுவது, புகையிலை மற்றும் வெற்றிலை சுண்ணாம்பை அடிக்கடி மெல்லுவது, உடம்பு சூடு மற்றும் மனஅழுத்தம்தான் காரணம்'' என்கிறார்.

''இன்றைய காலக்கட்டத்தில், பெற்றோர்கள் இருவருமே வேலைக்குச் செல்லும் கட்டாயத்தில் இருப்பதால், கீரை சமைத்துச் சாப்பிடும் பழக்கம் என்பது முற்றிலுமாகப் பல குடும்பங்களில் குறைந்துவிட்டது. இதனால் பல குழந்தைகள் கீரையா... அப்படீன்னா என்ன? என கேட்கக்கூடிய ஓர் அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். வாரம் ஒரு முறையேனும் அகத்திக்

கீரை, மணத்தக்காளி கீரை, பசலைக் கீரை அல்லது வெந்தயக் கீரையைச் சமையலில் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால், இந்தப் புண் வருவதற்கான வாய்ப்பே வராது. எங்களிடம் வாய் புண்ணுக்கென வருபவர்களுக்கு நாங்கள் பரிந்துரைக்கும் ஒரே அருமருந்து கீரைகள்தான்'' என்கிறார்.



* சித்த மருத்துவர் வேல்விழி

''கண்ணுக்குத் தெரியாத பல கிருமிகள் நமது வாய்க்குள் ஒட்டி இருக்கும். அதனால் லேசாக வாய் புண் ஏற்பட்டாலும், வெந்நீரில் உப்பைப் போட்டு வாயைக் கொப்பளிப்பது நல்ல பலனைக் கொடுக்கும். வேலைபளு காரணமாக அடிக்கடி தலைவலியால் அவதிபடுபவர்கள், அளவுக்கதிகமாக ஆன்டி பயாடிக்ஸ் எடுத்துக்கொள்கிறார்கள். வலியை விரட்ட இவர்கள் எடுத்துக்கொள்ளும் இந்த மாத்திரைகள், வேறு விதமான வியாதிகளுக்கு வலிய அழைப்பு விடுப்பதுபோல அமைந்துவிடுகிறது. அதில் ஒரு வியாதிதான் இந்த வாய்புண். கடைகளில் விற்கப்படும் நொறுக்குத் தீனிகளில் சேர்க்கப்படும் கலரிங் ஏஜெண்ட்டுகள்கூட வாய்புண்ணை வரவழைத்துவிடும். சுவைக்காகச் சேர்க்கப்படும் எத்தனையோ ரசாயனப் பொருட்கள் வாய் புண்ணை உருவாக்கிவிடும். அதேப்போல steroidகளை அதிகம் பயன்படுத்துபவர்கள், மஞ்சள் காமாலை, டைபாய்ட் போன்ற கடுமையான நோயிலிருந்து குணமடைந்து கொண்டிருப்பவர்கள்... என வயது வித்தியாசம் பார்க்காமல் வாய் புண் வந்து ஒட்டிக் கொள்ளும்.

வாய் புண்!

ஆந்திர மாநிலத்தவர்கள் எப்பொழுதும் புகையிலையை மென்றுகொண்டே இருப்பார்கள். அதனால் அவர்களுக்கு ஏற்படும் வாய் புண்ணைக் குணப்படுத்தவே முடியாது. அது பல சமயங்களில், வாய் புற்று நோயாகவே மாறி விட கூடிய அபாயம் நிறைந்தது. நீடித்து நிற்கும் வாய் புண்ணை ஒருபோதும் அலட்சியப் படுத்தவே கூடாது'' என்கிறார் சித்த மருத்துவர் வேல்விழி.


- நளினி சம்பத்குமார்

2 ஆயிரத்தில் ஒருவன்

சேவைகளின் தலைநகரம்!

தாமஸ் ஃப்ரீட்மேன், நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையின் தலைமை நிருபராக இருந்தவர். இவர் 'உலகம் தட்டையானது' (World is Flat) என்றொரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதில், மாறி வரும் உலகச் சூழலில் இந்தியா பெற்றிருக்கும்போது சொல்கிறார்: 'மகனே ஆங்கிலத்திலும், கணிதத்திலும், நன்கு படித்துத் தேற வேண்டும். அப்படியில்லாவிட்டால், உனக்குண்டான வேலையை, இந்தியர்களோ, சீனர்களோ நகர்த்திக்கொண்டு போய்விடுவார்கள்.'

1905ம் வருடத்திலேயே மகான் அரவிந்தர், 'அடுத்த யுகசந்தியில் உலகத்துக்கே இந்தியா ஜெகத்குருவாய் இருக்கும்' என்று சொல்லியிருக்கிறார் என்று குறிப்பிடுகிறார்'' ஃப்ரீட்மேன். பஞ்சாங்கப்படி யுகசந்தி என்பது 2012 முதல் 2025க்குள் வருவதாகச் சொல்கிறார்கள். கோடிக்கணக்கான இளைஞர் சக்தியைத் தன்னகத்தே வைத்திருக்கும்



* தாமஸ் ஃப்ரீட்மேன்

கும் தவிர்க்க முடியாத, முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார் ஃப்ரீட்மேன். என் சிறு வயதுகளில், அம்மா எனக்கு சூப் கொடுக்கும்போது, 'மிக தூரத்தில் இருக்கிற இந்தியா, சீனா என்ற இரு தேசங்களிலும் பெரும்பாலோருக்குச் சாப்பிட உணவு கிடைப்பதில்லை; பட்டினியால் பலர் செத்து மடிகிறார்கள்' என்று சொல்வார். இப்போது என் மனைவி, என் மகனுக்கு சூப் கொடுக்

இந்தியா, 'சேவைகளின் தலைநகரமாக' இப்போது உருவாகிறது.

'**இ**து புலம்பெயர்ச்சி காலம்' என்றும் சொல்கிறார் ஃப்ரீட்மேன். பொருட்கள், செல்வம், மக்கள் வணிக செய்முறைகள் போன்றவை புலம்பெயர்வது இந்தக் கால கட்டத்தில் தவிர்க்க முடியாது. குறிப்பாக வணிக செய்முறைகளில் புலம்பெயர்வால்,

நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் அவை பற்றிய பார்வை மாறிக்கொண்டே வருகிறது. வேலைக்கான முதல் கதவைத் திறக்க வேண்டுமென்றால், நமது தகுதிக்கு ஏற்ற நிறுவனங்களை அடையாளம் காண வேண்டும்.

முன்பு, கார் தொழிற்சாலை என்றால், ஒரே இடத்தில் சகல பாகங்களையும் உற்பத்திசெய்து கார் உருவாக்குவார்கள். இப்போது உலகின் பல பகுதிகளில் செய்யப்படும் பாகங்களைத் தருவித்து, ஓர் இடத்தில் இணைத்து, காரை சாலைக்கு அனுப்பி வருகிறார்கள். உலக வங்கியின் தலைமையகம் அமெரிக்காவிலும், கிளை அலுவலகங்கள் பல்வேறு நாடுகளிலும் உள்ளன. உலக வங்கியில் வேலைசெய்யும் அனைவருக்கும் சம்பளப் பட்டியல் தயார் செய்வது, சென்னையிலுள்ள உலக வங்கி அலுவலகக் கிளையில்தான்! நைஜீரியாவில், ஊழியர் ஒருவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் சென்னையில் உள்ள மனிதவள சேவை நிறுவனம், ''விதிகளின் எந்த பிரிவுபடி நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று ஆலோசனை கொடுக்கிறது. உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், கருவிகள், ஆகியவற்றின் டிசைன் மாற்றம், திருத்தம் போன்றவற்றுக்கும் அவுட்ஸோர்ஸிங் செய்யப்படுகிறது.



'மாஃபா' பாண்டியராஜன்

'நம்மில் பலர் பி.பி.ஓ. என்றால் ஏதோ கால் சென்டர், டெலிபோனில் பேசிக் கொண்டிருக்க வேண்டும்' என்று நினைக்கிறோம். அது தவறு. பி.பி.ஓ. ஒவ்வொரு துறைக்கும் வித்தியாசமான செயல்பாடுகள் கொண்டது. இதில் கே.பி.ஓ. எனப்படும் அறிவுசார்ந்த அவுட்ஸோர்ஸிங் கொஞ்சம் உயர்நிலையைச் சார்ந்தது. குறிப்பிட்ட நுகர்வோர், பொருளை மார்க்கெட் செய்ய விரும்பும் நிறுவனம், சூப்பர் மார்க்கெட்டுகளில் மக்கள், எந்தெந்தப் பொருட்கள் வாங்குகிறார்கள்; அவர்கள் எந்த வயது பிரிவினர்... போன்ற பல தகவல்களைப் பெற்று ஆய்ந்து, அலசி, புதிதாக வரும் பொருளுக்கு மார்க்கெட் எப்படி இருக்கும் என்று அலசுவது கே.பி.ஓ.க்கள் செய்யும் ஒரு பணி. நிறுவனங்கள் பற்றிய பார்வை மாறி வருவதால், நாம் இவற்றையெல்லாம் புரிந்துகொள்வது அவசியம். இல்லையென்றால் தவறான கதவைத் தட்டிக் கொண்டிருப்போம்.

* ஸ்ரீஅரவிந்தர்



இரண்டாவது உலகப் போர் முடிந்தவுடன், உலகத்தில் 49 நாடுகளே இருந்தன. இன்று 201 நாடுகள் இருக்கின்றன. 1945ல், 'ஃபார்சூன் 500' நிறுவனமாக உருவாக 2000 கோடி

பாண்டி'S BLOG

வேலைவாய்ப்பில் 'எரிசக்தி துறை' முதலிடம் பெறுவதாக சென்ற இதழில் சொல்லியிருந்தேன். அது தவறு. ஹாஸ்பிடாலிட்டி எனப்படும் ஹோட்டல் மற்றும் ரிசார்ட்ஸ் தொழிலில், இந்த வருடம் முடிவதற்குள், சுமார் நாலே கால் லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு இருக்கும் நிலையில் அந்தத் துறைக்கே முதலிடம். என்னைப் பார்ப்பவர்கள், ''சென்செக்ஸ் இப்படி வேகமாகச் சரிந்துகொண்டிருக்கிறதே... இதனால் வேலை வாய்ப்புகள் போய்விடுமா?'' என்று கேட்கிறார்கள்.

பங்கு மார்க்கெட்டில் புள்ளிகள் சரிவதால், வேலை வாய்ப்புக்கு எந்த ஆபத்தும் இல்லை. நமது நாட்டைப் பொறுத்தமட்டில் இரண்டு விதமான அந்நிய முதலீடுகள் இருக்கின்றன. ஒன்று நேரடியான முதலீடு (FDI); மற்றொன்று நிறுவனங்களின் முதலீடு (FII). உதாரணமாக ஸ்ரீபெரும்புதூரில் துவங்கப்பட்டிருக்கும் நோக்கியா தொழிற்சாலை, நேரடியான முதலீடு; திருப்பி எடுத்துக்கொண்டு போகாதபடி, தொழிற்சாலைகளாக உருமாறும் முதலீடு. நிறுவனங்களின் முதலீடு என்றால் வெளிநாட்டு முதலீட்டு வங்கிகள், நிறுவனங்கள், நமது பங்குமார்க்கெட்டில் முதலீடு செய்வது. அந்த நிறுவனங்களுக்கு லாபம் ஒன்றே குறியாததால், பெரும்பாலும் அவர்கள் முதலீடு யூகமுதலீடாகவே இருக்கும். பல்வேறு நிறுவனங்களில் போடப்பட்டுள்ள தங்கள் பங்குகளை விற்றும், வாங்கியும் வியாபாரம் செய்பவை அந்த முதலீட்டு வங்கிகள்.

இப்போது சென்செக்ஸ் 21,000 புள்ளியிலிருந்து 9000 புள்ளி வரை [இன்னும் கீழே போகலாம்] இறங்கியதற்குக் காரணம், நமது பங்குமார்க்கெட்டில் யூக முதலீட்டில் ஈடுபட்டிருந்த அமெரிக்க முதலீட்டு வங்கிகளும், நிறுவனங்களும், தங்கள் நாட்டு நிதி நெருக்கடியைத் தீர்க்கும் நோக்கில், முதலீடு செய்திருந்த பங்குகளை விற்றுவிட்டு, பணத்தைத் திரட்டுவதுதான்.

ஐந்து வருடம் முன்பு, சென்செக்ஸ் 4000 புள்ளி இருந்தபோதே ஒன்பது லட்சம் வேலை வாய்ப்புகள் இருந்தன. இப்போது பத்தரை லட்சம் வாய்ப்புகள் காத்திருப்பதாக கணிக்கப்பட்டிருக்கிறது. எனவே, சென்செக்ஸ் என்னதான் இறங்கினாலும் வேலை வாய்ப்பு பாதிக்கப்படாது.

உலக அளவில், பொருளாதார வளர்ச்சி விகிதம் என்பது சராசரியாக இரண்டு சதவிகிதம் என்பது மதிப்பீடு. அதே சமயம் இந்தியப் பொருளாதார வளர்ச்சி விகிதம் ஏழரை சதவிகிதமாக இருக்கும் என்பது கணிப்பு. இந்த நிலைமையில் நமது நாட்டின் மொத்த உற்பத்தி (GDP) ஒரு சதவிகிதம் உயர்ந்தால்கூட, ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கூடும். ஆனால், மக்கள் தொகை பெருக்க வேகத்தோடு ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி விகிதாசாரம் குறைவுதான்.

பற்று வரவு இருந்தால் போதும். ஆனால் இன்று 70,000 கோடி பற்று வரவு இருந்தால்தான், இந்தக் குழுவில் சேர்த்துக் கொள்வார்கள்.

இன்று நாடுகள் வலிமையிழந்து நிறுவனங்கள் வலிமை பெற்று வருகின்றன. 144 நாடுகளின் வரவு செலவுக் கூட்டுத் தொகையைவிட, அதிகமாக பற்று வரவு செய்துவருகிறது அமெரிக்காவில் உள்ள சங்கிலித் தொடர் சூப்பர் மார்க்கெட் வால்மார்ட். இன்று உலக அளவில் பார்த்தால் 1000 நிறுவனங்கள், 'எங்களைப் பொறுத்தமட்டில் சூரியன் மறைவதேயில்லை' என்று சொல்லும்படியாக, உலகின் எல்லா பகுதிகளிலும் கிளைகளோடு செயல்படுகின்றன. இதில் ஏழு இந்திய நிறுவனங்களும் அடக்கம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

(வெளிச்சம் வீசும்)

எழுத்தாக்கம் : ஸ்ரீநி



உ

ஸ்ரீ மகாமாரியம்மன் துணை

நாகை மாவட்டம் மயிலாடுதுறை தாலுக்கா கிழாய் வட்டம், மணல்மேடு அருகில் புத்தமங்கலம் என வழங்கும் சதுர்வேதமங்கலத்தில் எழுந்தருளியிருக்கும்

அருள்மிகு மகாமாரியம்மன் ஆலய

கும்பாபிஷேக கைங்கர்யப் பத்திரிகை

சோழ வளநாட்டில் முருகக் கடவுளின் திருத்தலமாகிய வைத்தீஸ்வரன்கோயிலுக்கு மேல்திசையிலும், ஜீவநதியாகிய காவிரி நதிக்கு வடதிசையிலும், வடரெங்கம் ஷேத்திரத்திற்கும் புண்ணிய நதியாகிய கொள்ளிட ஆற்றுக்கும் தென்திசையிலும், அமைந்துள்ள புத்தமங்கலம் என வழங்கும் சதுர்வேதமங்கலத்தில் எழுந்தருளியிருக்கும் **அருள்மிகு மகாமாரியம்மன்** ஆலயத்தை மெய்யன்பர்களும், பக்தர்களும், கிராமவாசிகளும் நல்முயற்சியால் திருப்பணி செய்து, நாளது ஐப்பசி மாதம் 25ம் நாள் திங்கட் கிழமை (நவம்பர் 10) மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் 09.07.08ல் இந்த கிராமத்துக்கு விஜயம் செய்து திருப்பணியைப் பார்வையிட்டு அருளாசி வழங்கினார்கள். கும்பாபிஷேகத்தையும் முன்னின்று நடத்தி வைக்கிறார்கள். பக்தர்கள் பெருந்திரளாக கும்பாபிஷேக வைபவத்தில் கலந்து கொண்டும் பங்கேற்றும் அருள்மிகு மகாமாரியம்மனின் திருவருளைப் பெற்றுய்யுமாறு பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,

கிராமவாசிகள் மற்றும் பக்தர்கள்

புத்தமங்கலம்

தொடர்புக்கு முகவரி :

வன்னிய சக்கரவர்த்தி,

புத்தமங்கலம், கிழாய் (அ), 609 202, (வழி) மயிலாடுதுறை.

போன் : 04364-254345, செல் : 9345469161

தேவையில்லையென விசியெறியும் ஒரு பொருள் பணத்தையும், கலைஞன் என்ற அந்தஸ்தையும், உலகளாவிய பெருமையும் பெற்றுத் தர முடியுமா என்ன?

முடிந்திருக்கிறது. சமையலுக்குப் பயன் படுத்திவிட்டுக் குப்பையில் வீசும் தேங்காய் சிரட்டைகள் தேசிய அந்தஸ்தைத் தந்திருக்கிறது. அந்த அந்தஸ்துக்குரியவர் ஜெய் குருஸ் - சாமான்ய விஷயத்தைச் சாதனையாக்கிய கைவினைக் கலைஞன். நீரை சேர்த்து வைத்த கொட்டாங்குச்சி இவரின் மேஜிக்கால் நகையை பொத்திவைக்கும் பெட்டகமாக மாறுகிறது. ஒரு நாளைக்கு 5000 கொட்டாங்குச்சிகள் கலைபெட்டகமாகப் பரிணாமம் பெறுகிறது.



இந்தக் கொட்டாங்குச்சி நகைப்பெட்டின் ஆதி புராணத்தை இந்தச் சிரட்டைச் சிற்பியிடம் கேட்டபோது...

''அறுபத்து நான்கு கலைகளைப் பட்டியலிடுகிறது தமிழ் மரபு. கலை கலைக்காக, கலை மக்களுக்காக என்று இரு பிரிவுகள் காலந்தொட்டு இருந்தாலும் மக்களிடம் பரவலாகச் சென்றடைய கலை வடிவங்கள் காலத்தில் நிற்பதில்லை. அக்கலையை வியாபாரமாக்கி வெற்றிப் பெறுவது சாமான்ய விஷயமல்ல. அதில் சாதிக்க வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் - இது கலைஞனுக்கும் பொருந்தும்.

1999-ல் அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதாவால் சிறந்த கைவினைக் கலைஞராகப் பாராட்டப் பெற்ற என் குடும்பம், பாரம்பரியமிக்க கைவினை கலைக் குடும்பம். இந்த கலைவிழுதுக்குக் காரணமான ஆணிவேர், பாட்டனார் ஜார்ஜ் சமாதான வில்வராயர்தான். ஆமை ஓட்டைப் பதப்படுத்தி நகைப் பெட்டியாக வடிவமைக்கும் திறன்பெற்ற கலைஞர்.

கடல் ஆமையைப் பாதுகாக்கும் பொருட்டு, அரசு ஆமைபிடிக்க தடைவிதித்த பின், என் தாயார் பனை ஓலை, பனங்கொட்டை இவற்றைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்களைத் தயாரித்தார். அவருக்கு உதவியாக இருந்தபோது ஆமை ஓட்டின் சாயலிலிருந்த, குப்பையில் வீசிவிடும் சிரட்டையை, தாத்தாவை போல நகைப் பெட்டியாக மாற்றினால் என்ன என்று தோன்றியது.



கொஞ்சம் முயற்சியும் சிற்சில பரிசோதனை யுக்திகளையும் கடந்து, இன்று தேங்காய்ச் சிரட்டையை நகைப் பெட்டி கைவினைப் பொருளாக மாற்றினேன்.

இன்று இந்தச் சிரட்டைகள் எனக்கு கலைஞன் அந்தஸ்தைத் தந்திருக்கிறது. இந்தியக் கலைப் பொருள் வாரியத்தின் சார்பில் அனைத்து மாநிலத்திலும் நடக்கும், கலை பொருள் கண்காட்சியில் எங்களது கலைப் பொருட்கள் தவறாமல் இடம்பெறுகின்றன.

கொட்டாங்குச்சியில் கலைவண்ணம்!







* ஜெயகுருஸ்



300 ஆண்டுகள் கிடந்தாலும் வண்ணமும் பளபளப்பும் மாறாத வகையில் இயற்கை வண்ணத்தைக் கையாள்கிறோம்.

டெல்லியில் நடந்த 'சார்க்' மாநாட்டில் கலந்துகொண்ட விருந்தினர்களுக்கு எங்களது சிரட்டை நகைப் பெட்டியை நினைவு பரிசாக வழங்கினார்கள். அந்த விழாவில் ஹரியானா ஆளுநரும் முதல்வரும் எனக்கு 'காலஸ்ரீ' என்ற பட்டம் அளித்தது, நெஞ்சைவிட்டு நீங்கா நினைவுகள்'' என்று சொல்லும் ஜெயகுருஸ், இப்பணியை இன்னும் பலருக்கும் பயிற்றுவிக்க, சிரட்டைக் கலையைத் திசையெல்லாம் பரப்ப சிஷ்யர்களைத் தேடுகிறார். இனி ஒவ்வொரு வீட்டிலும் சிரட்டையை வீச இயலாதவாறு, ஜெயகுருஸ் நினைவு வந்துபோவது தவிர்க்கமுடியாததுதான்.

– த.இ.தாகூர்



கல்கி



2008 நவம்பர் 9
ஸர்வதாரி ஐப்பசி 24
மலர் : 67
இதழ் : 15


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


சொன்னதைச் செய்வாரா ராஜபட்சய!

தமிழகத் தலைவர்கள், அவரவர் சௌகரியத்துக்குப் பேசி வரும் அரைகுறை உண்மைகளால் ஈழத் தமிழர்களின் துயரம் அதிகரித்துள்ளது! பல்வேறு தலைவர்களும் உணர்ச்சிமிகுதியால் தனி ஈழப் போராட்டத்தை ஆதரித்துப் பேசப் போக, மத்திய அரசை மிரட்ட ஆரம்பிக்க, அந்தக் குரல்களால் பலம்பெற்ற விடுதலைப் புலிகள், கொழும்புவிலும் மன்னாரிலும் விமானத்தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலைச் சகித்துக்கொண்டு இலங்கை அரசு சும்மா இராது. பன்மடங்கு வீரியத்துடன் திருப்பித் தாக்கும். அந்தத் தாக்குதலில் திரும்பவும் அதிகம் பலியாகப் போகிறவர்கள் அப்பாவித் தமிழர்களே.

ராஜபட்சய இந்திய நாளிதழுக்கு அளித்துள்ள பேட்டியில், வடக்கு - கிழக்குப் பிராந்திய தமிழர் பகுதிகளுக்கு, படிப்படியாக அதிகாரமும் அந்தஸ்தும் வழங்க ஒரு திட்டத்தை விவரித்துள்ளார். இது வெளியான அதே தினத்தில் புலிகள் தலைநகரைத் தாக்கியிருப்பதால், இந்தத் திட்டம் செயலாவதற்கான சாத்தியக் கூறுகளும் சேர்ந்தே தாக்கப்பட்டுள்ளன.

ராஜபட்சய விவரித்துள்ள திட்டத்துக்கு, தமிழினத்தை வெறுக்கும் சிங்கள வெறியர்களின் ஆதரவு கிடைப்பது சுலபமல்ல என்பதனால், அதனை நடைமுறைப்படுத்துவதில் ஏற்கெனவே சிக்கல். போதாத தற்கு, புலிகளின் தற்போதைய விமானத் தாக்குதலும் சேர்ந்து





கொள்கிறபோது, ஈழத் தமிழர்களுக்கு விமோசனமே இல்லை என்கிற நிலைமைதான் உருவாகிறது.

இந்தச் சூழலில், ஆக்கபூர்வமான செயல்பாடாகத் தெரிவது, தமிழக முதல்வரின் நிதி திரட்டும் முயற்சி மட்டுமே. நிதித் தொகையையோ அதன் மூலம் பெறக்கூடிய உதவியையோ நேரடியாக இலங்கைத் தமிழர்களுக்குக் கொண்டுசேர்க்கும் வழி முறையை, அனைத்துத் தலைவர்களும் இணைந்து பொறுமையாக வகுக்க வேண்டும்.

''அப்பாவித் தமிழர் மீது இலங்கை அரசு விமானத் தாக்குதல் நடத்துவதற்கு இந்திய அரசு உதவாது'' என்று கூறி, தொழில் நுட்ப உதவியையும், ராணுவ உதவியையும், ராணுவப் பயிற்சி அளிக்கும் உதவியையும் மத்திய அரசு நிறுத்த வேண்டும்.

அதேபோல், தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் விடுக்கும் விடுதலைப்புலிகள் ஆதரவுக் குரலும், தனி ஈழ ஆதரவுக் குரலும் அபாயகரமானவை. இதனைக் கண்டனம் செய்யாமலிருப்பதும் அபாயகரமானது!

இலங்கைத் தமிழர்கள், சிங்களவர்களுக்குச் சமமாக உரிமைகள் பெற வேண்டும்; அவர்களுடைய துயரம் தீர வேண்டும் என்பதில் இரு கருத்தில்லை. ஆனால், இது வன்முறையாலோ அதற்குத் துணை போகும் தமிழக அரசியலாலோ ஒருபோதும் நிகழாது. தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் ஒருங்கிணைந்து, விடுதலைப்புலிகளை ஆயுதம் துறந்து பேச்சுவார்த்தைக்கு வரும்படி வலியுறுத்த வேண்டும். மத்திய அரசிடம், இலங்கைக்கு ராணுவ உதவி அளிப்பதை நிறுத்தச் சொல்ல வேண்டும். ராஜபட்சயவின் சொல் செயலுருப் பெறும் என்று உத்தரவாதம் பெற வேண்டும். இவை மூன்றும் ஒரு சேர நடக்க வேண்டும். இதில் தமிழக கட்சிகளுக்கு அரசியல் ஆதாயம் இராது; ஆனால், ஈழத் தமிழர்களுக்கு நிச்சயம் நல்லது நடக்கும். ○

இப்படிக்கு எதிர்வீடு!

''நிறைய புதுமுக இயக்குநர்கள், அருமையான கதையோட கோடம்பாக்கத்தைச் சுற்றி வந்துகிட்டிருக்கோம். சரியான வாய்ப்பும், வழிகாட்டுதலும் அமைஞ்சா, எங்கள் வாழ்க்கையில மட்டுமில்லை; தமிழ்ச் சினிமாவிலும் நியாயமான மாற்றங்கள் இருக்கும். அதற்கான அடித்தளம்தான் 'கார்த்திக் அனிதா' திரைப்படம். நம்பிக்கை மிளிர பேசுகிறார் புதுமுக இயக்குநர் ஸ்ரீஹரி. சுந்தர் சி.யின் உதவியாளர். படத்தைப் பற்றிப் பேசினார்...

'' 'கார்த்திக் அனிதா' என்ற தலைப்பு மட்டுமல்ல. கதையும் வித்தியாசமானது. எதிரெதிர் வீட்டில் வசிக்கும் இளசுகளுக்குள், சப்தமின்றி முகிழ்க்கும் காதலின் வாசத்தைப் பதிவுசெய்யும் படம். குத்துப் பாட்டு, டபுள் மீனிங், சண்டைக்காட்சி போன்றவை கிடையாது. இவைதான் தமிழ்ச் சினிமாவின் தரத்தைக் கீழ்நோக்கி இழுக்கும் சக்திகள். இந்தப் படம் குடும்பத்தினரோடு உட்கார்ந்து பார்க்கும், தரமான படமாக உருவாகி வருகிறது. கல்லூரியில் படிக்கும் இளைஞர்களின் வாழ்க்கையை நெருக்கமாகப் பதிவுசெய்திருக்கும் இப்படத்தைப் பார்க்கும்போது, ஒவ்வொருவருக்கும் நினைவுகள் பின்னோக்கி நீச்சலடிக்கும் என்பது உறுதி. நம் பக்கத்து வீட்டுப் பையன் போல படுஇயல்பாக அறிமுகமாகிறார் ரத்தன். கதைக்குத் தேவையான நடிப்பின் மூலம் கதாநாயகி மஞ்சு அழுத்தமாகத் தடம் பதித்திருக்கிறார்'' என்றவரிடம், ''நீங்கள் இசையமைப்பாளர்... உட்பட அனைவருமே புதுசாய் இருக்கிறீர்களே... என்றால்'' ''எல்லோரும் ஒருகாலத்துல புதுமுகமா அறிமுகமானவங்கதானே. 'சுப்ரமணியபுரம்' படத்தில் ஏறக்குறைய எல்லோரும் புதுமுகம்தான். அந்தப் படம் ஜெயிக்கலையா. ஒரு படத்துக்கு வெற்றி முக்கியம்தான். அதே நேரத்துல வெற்றி மட்டும் ஒரு படத்தை மக்கள்கிட்ட கொண்டு போய் சேர்த்துடாது!'' என்கிறார்.



- கண்மணி

சில பேரைப் பார்த்திருப்பீர்கள்... வயசு ஒன்றும் அதிகமாயிருக்காது... ஆனால் நடக்கும் போது ஒருவித வேதனையோடு காலை இழுத்து இழுத்து நடப்பார்கள்... இவர்கள் சையாட்டிகா... என்ற நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

- டாக்டர் பானுமதி

சென்னை, தி.நகரில் "ஸன் ரைஸ் ஹெர்பல் க்ளினிக்" என்ற பெயரில் மூலிகை மருத்துவம்

ஸன்ரைஸ்

ஹெர்பல் க்ளினிக்

மூலிகை மருத்துவம்

மூட்டுவலி முற்றிலும் நீங்க...



- ஆன்மிக மருத்துவம் செய்து வரும் டாக்டர் ஆர். பானுமதி.

"சையாட்டிகா" என்பது தொடை நரம்பு பாதிக்கப்பட்டதால் ஏற்படும் ஒருவிதமான வாதம். இந்த வாதம் ஏற்பட்டவர்களுக்கு முழங்கால் வலி மற்றும் வீக்கம், பாதத்தில் எரிச்சல் இருக்கும். தகுந்த ஆயில், மூலிகை ஒத்தடம், பிளட்சர்க்குலேஷன் செய்வதன் மூலமும் மூலிகை மருந்து மூலம் இதை குணம் செய்யலாம்.

மூட்டுவலி ஏற்பட முக்கிய காரணம் அகித உடல்எடை, வாதம் அதிகமாகி மூட்டுகளில் உள்ள கால்சியம் பசை உலர்வதால் வருவதே முக்கிய காரணம்.

முதலில் உடல் எடையை ஆயில் மசாஜ் மூலம் குறைத்து, வலி, தேய்மானம் எப்பேர்ப்பட்ட மூட்டு, நரம்பு பிரச்சனைகளுக்கும் மூலிகை மருந்து மூலம் சரி செய்கிறோம்.

ஆயுர்வேதம் மருத்துவத்துக்கு முறைபடி பயிற்சி எப்படி பெற்றீர்கள்?

என் மாமனார் மகான் காரை சித்தர் அருளால், அவர் எழுதிய கனக வைப்பு புத்தகத்தில் மூலிகை வைப்பு பகுதி ஆராய்ந்து பாரம்பரிய வைத்தியமுறைபடியும், சித்தா படித்தும் "உச்சி முதல் பாதம் வரை" அனைத்து நோய்களுக்கும் சீனியர் டாக்டர்கள் கூட்டு முயற்சியுடன் கோயம்புத்தூர், சென்னையில் வைத்தியம் செய்கிறோம்.

இது இயற்கை வைத்தியமா? என்று கேட்டால்... ஆன்மீக முறைப்படி இது இயற்கை வைத்தியமே என்று சிரிக்கிறார்கள். கூடவே உச்சி முதல் பாதம் வரை 108 சிட்டிகை வைத்தியம், சர்க்கரைக்கு பை... பை... பை... மகான் காரைசித்தர் எழுதிய கனகவைப்பு போன்ற நூல்களை எழுதியதோடல்லாமல் தலை பராமரிப்பு, முக பராமரிப்பு, பெண்களுக்கான அனைத்து வகை பிரச்சனைகள், கிட்னி பிரச்சனை போன்ற அனைத்து - பிரச்சனைக்கு மருந்து மற்றும் "Ceragem" மிஷின் மூலம் **எங்கள் கிளினிக்கில் சிகிச்சை அளிக்கிறோம்.** நம்பிக்கையோடு வாருங்கள்! என்கிறார்.

சென்னை தி.நகர், 10, மன்னார் தெரு,
செல்: 92824 27772, 6534 1646
கோயம்புத்தூர் : செல்: 9994327016,

Advt.

குரு பெயர்ச்சிப்

மேஷம்

மேஷ ராசிக்காரர்களே, உங்கள் ராசிக்கு குருபகவான் ஒன்பதாம் இடத்திலிருந்து பத்தாவது இடத்துக்குப் பெயர்ச்சி ஆகிறார். பத்தாமிடம் என்பது ஜீவன ஸ்தானம், கர்ம ஸ்தானம்; ஆதலால், உத்தியோகத்தில் இடம் மாற்றத்தை ஏற்படுத்துவார். சிலருக்கு இருக்கும் வேலையிலிருந்து நல்ல வேலைக்குப் போகக்கூடிய யோகத்தை அளிப்பார். சிலருக்குக் கடல் கடந்து செல்லும் யோகத்தை அளிப்பார். பொருளாதார விஷயங்களில் நல்ல முன்னேற்றம் அளிப்பார். கல்வி வளத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் சிக்கலைப் போக்குவார். சுக ஸ்தானத்தைப் பார்வையிடுதல்

ரிஷபம்

ரிஷப ராசிக்கார்களே, உங்கள் ராசிக்கு குருபகவான் எட்டாம் இடத்திலிருந்து ஒன்பதாமிடம் என்று சொல்லக்கூடிய மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார். ஒன்பதாம் இடம் என்பது பாக்கியஸ்தானம். கடந்த வருடம் ஏற்பட்ட இன்னல்களுக்கு விடுதலை கிடைக்கச் செய்வார். தந்தை மூலம் ஆதாயத்தை அளிப்பார். தாராளமாகப் பண வசதிகள் அளிப்பார். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். எதிர்ப்பு, தொல்லைகள் விலகும். நீண்ட காலம் தடைபட்டு வந்த காரியங்கள், நல்ல நிலையில் நிறைவேறும். பெயர் புகழ் வந்து சேரும். மனத்தில் தைரியம், தன்னம்பிக்கை மிகுந்து காணப்படும். உடன்பிறப்புகளால் நற்பலனே ஏற்படும்.

மிதுனம்

மிதுன ராசிக்கார்களே, குருபகவான், இந்த வருடம் ஏழாம் இடத்திலிருந்து எட்டாமிடத்துக்கு பெயர்ச்சி ஆகிறார். எட்டாமிடம் என்றவுடன் பயப்படத் தேவை இல்லை. நல்லவன் எட்டில் இருந்தால் கிட்டிடும் ராஜயோகம் என்று புலிப் பாணி ஸ்லோகம் சொல்கிறது. ஆதலால் நல்லவான குருபகவான், எட்டாம் இடத்துக்கு வரும்போது கெடுதல் இல்லை. இருந்தாலும் கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருப்பது நல்லது. எங்கு சென்றாலும் கைப்பொருள் மீது கவனம் தேவை. அறிமுகம் இல்லாத நபர்களுக்கு ஜாமீன் போடக் கூடாது. கல்வியில் அக்கறை எடுத்துப் படித்து வருதல் நலம். வியாபாரத்தில் சற்று

கடகம்

கடக ராசிகாரரகளே, உங்கள் ராசிக்கு இந்த வருடம் குருபகவான் ஆறாம் இடத்திலிருந்து ஏழாம் இடத்துக்கு பெயர்ச்சி ஆகிறார். ஏழாமிடம் என்பது களத்திர ஸ்தானம். இது நல்ல சுபமான பலனை அளிக்கும். கடந்த வருடத்தில் ஏற்பட்ட கடன் தொல்லைகள், சூரியனைக் கண்ட பனி போல விலகிச் செல்லும். நீண்ட காலம் தடைபட்ட திருமணத்தை நடத்தி வைப்பார். பிரிந்து வாழ்ந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து வாழ்வார்கள். உடல் நிலையில் இருந்து வந்த தொல்லைகள் தீரும். கடன் சுமை தீரும். மனைவி

பலன்கள்

தஞ்சை பரத்வாஜ்

(06.12.2008 முதல் 16.12.2009 வரை)

ஆரோக்கியம். தாயின் உடல்நிலையில் முன்னேற்றம் இருக்கும். குருபகவானின் ஒன்பதாம் பார்வை, ரோக ஸ்தானத்தைப் பார்ப்பதால் வியாதிகள் தீரும். எதிர்ப்பு தொல்லைகள் விலகும். வராத நிலையில் வந்து சேரும். போட்டியில் வெற்றி கிட்டும். விளையாட்டுத் துறைகளில் உள்ளவர்கள் ஜொலிப் பார்கள். சனிக்கிழமைதோறும் சனி பகவானை வழிபட்டு வருதல் நற் பலனை அளிக்கும். அதைத் தவிர செவ்வாய், வெள்ளிகிழமை களில், நவகிரக வழிபாடு செய்து வர சங்கடங்கள் தீரும்.



குருபகவான் ஒன்பதாம் பார்வையாகப் பூர்வபுண்ணிய ஸ்தானத்தைப் பார்ப்பதால் பூர்வீகச் சொத்துகள் வந்து சேரும். மனமகிழ்ச்சி ஏற்படும். நண்பர், உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். கலைஞர்கள், அச்சுத்துறை, பத்திரிகை துறை களில் ஈடுபட்டுள்ளோருக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு நற்பலன் மிகுதியாகக் காணப்படும். சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபட்டு வருதல் நற்பலனை அதிகரிக்கும்.



மந்தமான போக்கு காணப்படும். புதிய தொழில் முயற்சியைச் சற்றுத் தள்ளிப் போடவும். எதிலும் அகலக் கால் வைக் காமல் இருப்பது நற்பலனை அளிக்கும். எட்டாம் இடத்தில் குரு இருந்து, ஐந்தாவது பார்வை ஆக விரைய ஸ்தானத்தைப் பார்வையிடுவதால் சுப விரையம் உண்டாகும். வியாழக் கிழமை தோறும் தெட்சிணாமூர்த்தி சுவாமியை வழிபாடு செய்து வரவும். செவ்வாய், வெள்ளிதோறும் ராகு/கேது வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.



வழியில் சுப நிகழ்ச்சிகள் ஏற்படும். வியாபாரத்தில் நல்ல வருவாய் பெருகும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சினிமா கலைஞர்களுக்கு நல்ல பொற்காலம். நல்ல வாய்ப்புகள் தேடி வரும். மன நிறைவான ஆண்டாகும். செவ்வாய், வெள்ளிதோறும் நவ கிரஹ வழிபாடு செய்துவருதல் நல்லது. சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயர் தரிசனம் நற்பலனை அளிக்கும்.



சிம்மம்




சிம்ம ராசிக்காரர்களே, குருபகவான் இதுவரை உங்கள் ராசிக்கு ஐந்தாம் இடத்தில் சஞ்சரித்தார். 6.12.2008 முதல் ஆறாம் இடத்துக்குச் சஞ்சாரம் செய்யப் போகிறார். ஆறாமிடம் என்பது சத்ரு, ரோக, கடன் ஸ்தானம். ஆகையால், எதிலும் அவசரப்படாமல் நிதானத்துடன் செயல்படவும். யாருக்கும் ஜாமீன் போடக் கூடாது. கொடுக்கல் வாங்கலில் கவனமுடன் செயல்படுவது நல்லது. கொடுத்ததைக் கேட்டால் அடுத்தது பகை வந்து சேரும். மறைமுக எதிரிகளால் தொல்லை உருவாகலாம். நண்பர், உறவினர்களைவிட்டு விலகிச் செல்ல நேரிடும். வழக்கு இழுபறியாகும். கலைஞர்களுக்கு ஏற்றம் மிகுந்து இருக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிட்டும். கமிஷன் தொழில் செய்பவர்களுக்கு நல்ல வருமானம் கிட்டும். வியாழன்தோறும் குரு பகவானுக்குப் பூ வைத்து வழிபட்டு வருதல் நற்பலனைத் தரும். சனிக்கிழமைதோறும் சனீஸ்வர பகவானை வழிபட்டு வருதல் நலம்.

கன்னி

கன்னி ராசிக்காரர்களே, உங்களுக்கு குரு பகவான் தற்பொது நான்கில் இருந்து ஐந்தாம் இடத்துக்குப் பெயர்ச்சி ஆகிறார். ஐந்தாமிடம் என்பது பூர்வபுண்ணிய ஸ்தானம். கடந்த வருஷம் ஏற்பட்ட இன்னல்களிலிருந்து விடுதலை கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியம் கைகூடும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். பூர்வீகச் சொத்துக்கள் வந்து சேரும். தாயின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். வீடு வாங்கும் யோகம் வந்து சேரும். கடன் தொல்லை தீரும். குடும்ப பெண்களுக்கு நல்ல பெயர் கிட்டும். சமூக சேவைகளில் விருதுகள் கிட்டும். கலைஞர்களுக்கு உற்சாகம் கூடும். ஏற்றுமதி தொழில் செய்பவர்களுக்கு, நல்ல ஆதாயம் கிட்டும். மனக் குழப்பம் தீரும். வருவாய் மிகுதியாகும். தந்தை வழியில் ஆதாயம் கிட்டும். தொழில் ஸ்தானத்தை குரு பார்ப்பதால் வியாபாரத்தில் நல்ல வருவாயும், புதிய தொழில் துவங்கும் யோகமும் கிட்டும். குழந்தைகளால் மன சந்தோஷம் கிட்டும். செலவுகள் சுபமானதாக இருக்கும். ராகு/கேது வழிபாடு செய்து வர நன்மைகள் அதிகரிக்கும்.



(மற்ற ராசிகள் அடுத்த வாரம்)



உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு
தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் ஸின்த்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. ஸின்த்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே ஸின்த்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.



மேனிப் பராமரிப்பு என்றென்றும்

Orchard 8 GCPMSOCN

நெட்டை மனசு!

போட்டிக் கதை 12

''மே... மே... மே...'' மே மாத வெயிலின் தாக்கத்தால் மேய்ச்சலுக்கு வந்த செம்மறி ஆடுகள், தாகத்தில் கத்தின.

காளிங்கன், தொலைவில் தெரிந்த பம்ப்புசெட்டை நோக்கி ஆடுகளை ஓட்டிச் சென்றான்.

ஆடுகள் முண்டியடித்துக்கொண்டு ஓடி, வரப்பின் மீது வரிசையாக மண்டியிட்டு, தாகத்தைத் தணித்துக் கொண்டன.

தூக்குச் சட்டியில் கொண்டுவந்த கேப்பங்கூழை தொட்டியிலிருந்த நீரால் கரைத்த காளிங்கன், நறுக்கிய மாங்காயைக் கடித்துக்கொண்டு பசியாற்றிக் கொண்டான்.

''யாருதுலே ஆடு? வந்தனா காலை ஒடிச்சிப்புடுவேன்'' பக்கத்துக் கழனியிலிருந்து நிலத்தின் உரிமையாளர் சத்தம் போட, ஆடுகளை விரட்டிக் கொண்டு சானான் தோப்பை அடைந்தான்.

'கள்' இறக்கும் சானாருக்கு சொந்தமான நிலம் என்பதால், அதற்கு சானான் தோப்பு என்று பெயர்.

அங்கே குள்ளநரிகள் அதிகமென்பதால் ஆடுகளை வேப்பமர நிழலில் விட்டு மல்லாந்து படுத்த காளிங்கன், இமைகள் மூடாமல் இயற்கையழகை ரசிக்கலானான்.

உயர்ந்த பனைமரமும், அதைவிடச் சற்றுத் தாழ்ந்த பனையும், இரண்டையும் சுற்றி இரண்டு மூன்று குட்டையான கன்றுகளும் பார்ப்பதற்கு, தாய், தந்தையர் பிள்ளைகளுடன் ஃபோட்டோவுக்கு போஸ் கொடுத்து நிற்பதைப் போல் உணர்ந்தான்.

காரைச் செடிகளும், சூரைமுட்புதர்களும் சூழ்ந்துள்ள பனையின் மேல் அணில்கள் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன.

எங்கிருந்தோ வந்த குயில், நடுக் குருத்தின் மேல் அமர்ந்து, ''கூ.... கூ....'' என்று கீதம் பாடியது. கீதத்தின் எதிரொலி இசையாக மாறியது.

'நானும் ஒரு அணிலாவோ, இல்ல குருவியாவோ பொறந்திருக்கலாம், போயும் போயும் மனுஷனா பொறந்துட்டேன்.' மனத்துக்குள் ஏக்கம் திரண்டது.

''பனைமரமே! வீணா நேரத்தைக் கழிக்கற வெட்டியான சோம்பேறிகளின் புகலிடமான ஆலமரமும், அரசமரமும் உனக்கு ஈடாகாது. இது உன்னை கவனித்தவர்க்கு மட்டுமே புரியும்.''

''எலே... காளிங்கா.. என்னடா ஆச்சு? தனியா படுத்து பெணாத்துறே...'' அருகில் தோலில் தொரட்டுக்கம்பை வைத்தபடி

வெள்ளாடு ஓட்டிவந்த ஒரு பெரியவர் கேட்டார்.

''ஒண்ணுமில்லேண்ணே... இந்தப் பனைமரங்கதான் எத்தனை ஜீவராசிகளுக்கு ஒத்தாசை பண்ணுது பாருங்க. மனுஷ பயல்களுக்கு நுங்கு கொடுக்குது; குடிச போட ஓலை கொடுக்குது; பதனி கொடுக்குது; பதனியிலிருந்து வைத்தியத்துக்கு ஒதவற பனைவெல்லத்தைக் கொடுக்குது'' என்று பனைக்குப் புகழாரம் சூட்டிக் கொண்டிருக்க,

''எலே... மடப்பயலே அது கொடுத்தூட்டுதான்லே இருக்கு. இப்ப, உம்ம ஆடு எங்கப் போச்சின்னு போயி பாருலே. எதாச்சும் நரிகிரி கடிச்சிடப் போவுது'' பெரியவர் கூறியதும், பதறி எழுந்தவன் விரித்துப் போட்டிருந்த துண்டை உதறி, தோளில் போட்டபடி ஓடினான்.

''எலே திருட்டுப்பசங்களா... இம்புட்டு நாளா லீவுல ஊரைச் சுத்துனது பத்தாதுனு, பள்ளிக்கூடத்துக்குப் போவாம இங்க வந்து பனம்பழம் பொறுக்கறீங்களா?''

பள்ளிச் சீருடையுடன் சுற்றிக்கொண்டிருந்த சிறுவர்களை அதட்டினான் காளிங்கன்.

''யோவ்... காளி, வேணும்னா நீயும் பொறுக்கித் தின்னேன்.''

சிறுவர்கள் சருகைக் கொளுத்திப் பனம்



ந.நந்தகோபால்

பழத்தைச் சுட அதன் மணம் அவனின் மனத்தை இழுக்க, ''பசங்களா எனக்கும் ஒண்ணு கொடுங்கடா'' என்று கேட்டான் காளிங்கன்.

''அப்படி வா வழிக்கு. சும்மா... அலட்டிக்கினீங்க'' என்றபடியே, காளிங்கனுக்கு ஒன்றைக் கொடுத்துவிட்டு, மற்றவற்றைப் புத்தகப் பையில் போட்டுக்கொண்டு நடையைக் கட்டினர்.

ஆகஸ்ட் மாதம் ஒருநாள் மாலை. மண்புகையை கிளப்பிக்கொண்டு தெருவில் ஓடிய ஆடுகளைப் பட்டியில் அடைத்துவிட்டு, துண்டில் கட்டி வந்த பனங்கொட்டைகளைத் தன் மனைவியிடம் நீட்டினான்.

''எதுக்கு இத மூட்டைக் கட்டிக் கொண்டு வந்தீக?''

''அடியே இந்தக் கொட்டைகள தோட்டத்துல பொதச்சு வையி. மரமான பிறவு ரொம்பப் பலன் கொடுக்கும்.''

''உமக்கு என்ன பைத்தியமா?''

''எதுக்குடி அப்படிச் சொல்லுத?''


''அது வளர்றதுக்குள்ள வச்சவக செத்துப் போய்டுவாகனு உமக்குத் தெரியாதா?'' என்றதும் காளிங்கன் பலமாகச் சிரித்தான்.

''ஏ... புள்ள நீ சொல்லுறது நூத்துக்கு நூறு உண்மதெ. எதுக்கு அப்படி சொல்லுதாக தெரியுமா? பனைமரம் வளர்ந்து காய் வக்கறதுக்குள்ள நம்ம வயசும் வளர்ந்து முடிஞ்சு போகும். அம்புட்டு மெதுவா வருஷக் கணக்கா வளரும். அதான் அதோட அர்த்தம். அது தெரியாம வைச்சவக செத்துப் போவாகனு மனசைக் கொழப்பிக்காதே.''

''சரி... சரி உம்ம இஷ்டப்படியே செய்யறேன். ஆனா, ஒண்ணு இதுல பாதிய கெழங்கானதும் தோண்டியெடுத்து உப்புப் போட்டு அவிச்சுடுவேன்'' என்றாள்.

இரண்டு மாதங்கள் சென்றவுடன் காளிங்கனின்

"நாய்க்கரே, சானார்தோப்புல மரத்தயெல்லாம் வெட்டுற மாதிரி தெரியுதே" என்று எதிர்ப்பட்டவரிடம் கேட்டான்.



''தங்க நகை பேர்லதான் கடன் கொடுக்க முடியும்...உங்க பெண்டாட்டி 'தங்கமுத்து' பேர்ல எல்லாம் கடன் கொடுக்க முடியாது...!''

– வரத. சண்முக சுந்தர வடிவேலு



மகன்கள் இருவரும், முளைவிட்ட பனங்கொட்டைகளைத் தோண்டி எடுத்து அரிவாளால் பிளந்து கொண்டிருந்தனர்.

''எலே... பசங்களா, என்னலே செய்தீக?''

''அப்பா இந்த கொட்டை, உள்ள இருக்கற மஞ்சக்கரு சூப்பரா இருக்குப்பா'' பிளக்கப்பட்ட ஒரு பாதி கொட்டையில் ஆள்காட்டி விரலைவிட்டு மஞ்சரியைத் தோண்டியபடி கூறினான் மூத்த மகன்.

''அடப்பாவிகளா! உங்கம்மாவே பரவாயில்ல போலிருக்கே.''

டிசம்பர் மாதம் கார்த்திகை தீபத் திருநாளுக்கு முந்தின நாள். ஊரார் பலர் சானான் தோப்பிலிருந்த ஆண் பனைகளில் ஏறி, கொத்துக் கொத்தாய்க் காய்ந்துகிடந்த பனைமரப் பூக்களை (வண்ணாம்பூ) ஒடித்துப் பைகளில் போட்டுக் கொண்டிருந்தனர். காளிங்கனும் அவன் பங்குக்குப் பூக்களை மூட்டை கட்டிக் கொண்டு வீட்டை அடைந்தான்.

அன்று மாலை, இலேசான குளிரைப் பொருட்படுத்தாமல் தோட்டத்தில் சிறிய தொரு குழிதோண்டி, கொண்டு வந்த பூக்களைக் குழியில் அடுக்கி, சிறிது மண்ணெண்ணெய் விட்டு எரியவைத்தனர். நன்றாக எரிந்து நெருப்பானதும் பூசணி இலைகளை அதன் மேல் போட்டு மண்ணைத் தள்ளி மூடினர்.

மறுநாள் காலை அதைத் தோண்டியெடுத்து அவனது பிள்ளைகள், அரைத்து மாவாக்கினர். அன்று மாலை ஆடுகளைப் பட்டியில் அடைத்துவிட்டு, கையோடு கொண்டுவந்த இரண்டு ஓலைகளின் மட்டைகளுடன், நான்கு விரடை உயரமுள்ள வீட்டு மண் திண்ணையில் அமர்ந்தான். அவனது மகன்கள் மகிழ்ச்சியோடு அவன் எதிரே அமர்ந்தனர்.

காட்டன் துணியை நீட்டாகக் கிழித்த காளிங்கன், அரைத்து வைத்திருந்த கரிமாவை வைத்து, பாய் சுருட்டுவதைப் போல் சுருட்டி, துணிக் கயிற்றால் கட்டினான். ஓலைமட்டையின் அடிமுனையை மூன்றாகப் பிளந்து, கரிமாவு கருளை பிளவில் வைத்து முனையைக் கயிறால் இறுக்கிக் கட்டினான். ஓலை இருந்த மேல் முனையில் கையில் பிடித்து சுற்றுவதற்கு வசதியாக நீண்ட கயிற்றை கட்டி மகன்களிடம் கொடுத்தான்.

தெருவில் வீடுகள்தோறும் அகல் விளக்குகள் பிரகாசமாய் ஜொலித்துக் கொண்டிருக்க, மாவளியைக் கொண்டு வந்த சிறுவர்கள் அதில் நெருப்புத் துண்

''ஆபரேசன்ல ஒரு சின்னக் கோளாறு நடந்து போச்சு!''
''நான் உயிரோடு இருக்கறதைப் பார்த்தாலே தெரிகிறது டாக்டர்...?''
- அம்பை தேவா



டைப் போட்டு கரிமாவைக் கணக்க வைத்துச் சுற்றி மகிழ்ந்தனர்.

பிப்ரவரி மாதத்தில் வெளியூரிலிருந்து வந்த சானான்கள் பனைமரங்களைக் குத்தகைக்கு எடுத்து குடிசையமைத்துக் கொண்டு, மரங்கள்தோறும் பாளை சீவி குட்டிசட்டிகளைக் கட்டிக் கொண்டிருந்தனர்.

ஒருவழியாக சானான் தோப்பு பனைமரங்கள் ஓய்வுபெறும் மாதமான 'மே' மாதம் வந்து சேர்ந்தது. சானான்களின் கண்களிலிருந்து தப்பித்த பாளைகள் குலை தள்ளின.

ஒருநாள், காலை உணவை முடித்துக் கொண்டு ஆடுகளை ஓட்டி வந்தவன், தொலைவில் இருந்த சானான் தோப்பு பனைமரங்கள், ஒவ்வொன்றாகச் சாய்ந்து கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றான்.

''நாய்க்கரே, சானார்தோப்புல மரத்தயெல்லாம் வெட்டுற மாதிரி தெரியுதே'' எதிர்ப்பட்டவரிடம் கேட்டான்.

''விஷயம் தெரியாதா உனக்கு? இங்க உள்ள நாப்பது ஏக்கர் நெலத்தையும் பேக்டரி கட்றதுக்காக சேர்மன் வாங்கிட்டார்.''


மனமுடைந்தவனாய் ஆடுகளை விரட்டிக் கொண்டு சானான் தோப்பை அடைந்தான். இயற்கையின் விரோதிகளான மரவெட்டிகள் பனைமரத்தை அறுத்துச் சாய்க்க 'தொப்'பென்ற சத்தத்துடன் கீழே விழுந்தது. ஓலைகளில் இருந்த அணில்கள் நாலாபுறமும் பதறியடித்துக் கொண்டு சிதறி ஓடின.

காரிலிருந்து தமது பரிவாரங்களுடன் இறங்கிய சேர்மன், வேலையைப் பார்வையிட வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தார். அப்பொழுது பனஞ்செடி ஒன்று காலில் சிக்கித் தடுமாறி நின்றவர்,

''எலே.. இந்த எதுக்கு விட்டு வச்சிருக்கீஹ, மொதல்ல கடப்பார கொண்டு வந்து தோண்டி எறிங்கலே'' என்று எரிச்சலடைந்தவராய் கூற, அப்பொழுதே அதுவும் பிடுங்கப்பட்டது.

''யாருதுப்பா ஆடு? வழிலயே நிக்குது. பாரு வந்து ஓரமா ஓட்டுப்பா'' என்று ஒருவர் கூற,

''சோ... சொ...ட்ரு...ட்ரு'' என்று வழியில் நின்று கொண்டிருந்த ஆடுகளின் முதுகில் கம்பால் தட்டி, மரங்களின் வேர்களைப் பிடுங்க வந்த புல்டோஸருக்கு வழியை விட்டான். ●



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை. பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம். சென்னை - 63. போன் : 22760612, 22762299
City Office No.7, முதல் மாடி. வேலு தெரு. மேற்கு மாம்பலம்.
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 19 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற, மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ. 1,000/-
• மதிய உணவு	ரூ. 2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ. 1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ. 12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ. 2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் /வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

ஆனந்த தாண்டவம்!

"ஜெர்மனியில் ஆனந்த் என்னைத் தோற்கடிக்கட்டும், அப்போது நான் மனப் பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். 'ஆனந்த் தான் உலகச் சாம்பியன்' என்று" சென்ற ஆண்டு ஆனந்திடம் தோற்ற கிராம்னிக் கர்ஜித்தார். அதற்குப் பதிலடியாக இந்த முறை ஆனந்த தாண்டவம் ஆடிவிட்டார் விஸ்வநாதன் ஆனந்த்.

கிரிக்கெட்டுக்கு மட்டும்தான் இந்தியாவில் மதிப்பளிக்கப்படுகிறது என்றொரு குற்றச்சாட்டு ஒன்று உண்டு. ஆனால், ஆனந்துக்கு அந்தக் குறை இல்லை. இந்திய அரசு எவ்வளவு பெரிய விருதாக இருந்தாலும், முதலில் ஆனந்துக்கு வழங்கிவிட்டுத்தான் சச்சின் டெண்டுல்கருக்கு அடுத்தப்படியாக வழங்கும். 39 வயதாகும் ஆனந்த் வாழ்க்கை முழுக்கவே பல சுவாரஸ்யமான சம்பவங்கள். அவற்றில் முக்கியமான இரண்டு, அவருடைய ரயில் பயணமும் பெண் பார்க்கும் படலமும்.

ஆனந்த் அப்போது இளைஞர். கனவை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த சமயம் அது. ஒருமுறை ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தபோது, அருகே அமர்ந்திருந்த பெரியவர் ஆனந்திடம் பேச்சுக் கொடுத்தார்.

"என்னப்பா செய்றே?"

"நான் செஸ் பிளேயர் சார்."

"ஓ, செஸ் விளையாடுவியா, வெரி குட். வேலைக்குப் போறியா; இல்லை படிக்கிறியா?"

"இல்லை சார், நான் செஸ்தான் விளையாடறேன். முழு நேரமும்."

அவர், ஆனந்த்தை உற்றுப் பார்த்தார். "அப்பா, பிஸினஸ் ஏதாவது பண்றாரா?"

"இல்லையில்லை. நான் செஸ்..."

"தம்பி, ஒண்ணு சொல்றேன், கேட்டுக்கோ. நீ செஸ்ஸை மட்டும் நம்பி வாழ்றது சரியில்லை. அதுக்கு நீ விஸ்வநாதன் ஆனந்த் மாதிரி பிரமாதமா விளையாடப் பழகணும். ஆனா, உன்னைப் பார்த்தா அப்படியெல்லாம் சாதிப்பாய்னு தோணலை. பார்த்துக்கப்பா" என்றார் ஆனந்திடமே.

"சொல்லிவிட்டுக் கிளம்பினார் அந்தப் பெரியவர்.

திருமணத்தின்போது ரசிக்கத்தக்க ஒரு சம்பவம் நடந்தது.

அருணா, ஒரு பரதநாட்டியக் கலைஞர். ஜாதகப் பொருத்தம் எல்லாம் சுபிட்சமாக அமைய, பெண் பார்க்கும் படலம் ஏற்பாடானது. "இன்னொரு காஃபி கொடுக்கட்டுமா" ஆனந்த் காஃபி குடித்து தம்ளரைக் கீழே வைத்தபோது, அருணாவின் அம்மா கேட்டார்.

"காஃபி உங்க வீட்டுல ரொம்ப நல்லாயிருக்கு. அதனால இன்னொன்னு குடிக்கறதுல எனக்கு எந்தச் சங்கடமும் இல்லை" என்றார் ஆனந்த். பொதுவாக காஃபி குடிக்கும் பழக்கம் இல்லாதவர் ஆனந்த். செஸ் போட்டி நடக்கும் இடங்

ச.ந.கண்ணன்



பையனையே கட்டிக்கோ. இவ்வளவு சமர்த்தான பையனை நான் பார்த்ததே இல்லை'' என்றார். இன்றைக்கும் அருணா தம் தாயைக் கிண்டல் அடிப்பதுண்டு. ''இன்னொரு கப் காஃபிக்காக என்னைக் கட்டிக்கொடுத்துட்டே இல்லை.''

பி.கு. : சென்ற முறை உலகச் சாம்பியன் ஆனதற்காக ஆசியன் செஸ் ஃபெடரேஷன் ஆனந்துக்கு பத்து லட்சம் கொடுத்தது. தமிழக முதல்வர் கருணாநிதி, ஆனந்தின் சாதனையை மெச்சி அவருக்கு இருபத்தைந்து லட்சம் கொடுத்தார். மேலும் ஆனந்துக்கு தெற்காசிய விளையாட்டு விடுதியில் உள்ள உயர்தர வீடு ஒன்றும் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் கருணாநிதி தலைமையில் ஆனந்துக்கு ஒரு பாராட்டு விழாவும் நடந்தது. இங்கே ஒரு நெருடல் என்னவென்றால் அரசு

களில் காஃபிக்கென்று டோக்கன் கொடுப்பார்கள். அது அத்தனையையும் தன்னோடு வருபவர் யாராக இருந்தாலும் மொத்த டோக்கன்களையும் கொடுத்துவிடுவார் ஆனந்த். ஆனால், அன்றைக்கு என்னவோ ஆனந்துக்கு காஃபி தேனாக இனித்தது.

அருணாவின் அம்மாவுக்கு புல்லரித்து விட்டது. உடனே அருணாவிடம் சென்று, ''என்ன செய்வியோ தெரியாது. இந்தப்

விதிமுறையின்படி தமிழக அரசு ஆனந்துக்கு 25 லட்சம் அளித்தது தவறு. அரசிடமிருந்து பண முடிப்பு பெறுபவர் கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழ்நாட்டில் வசித்திருக்க வேண்டும். ஆனால் 1995 முதல் ஆனந்தின் முகவரி ஸ்பெயினுக்கு மாறி விட்டது. இந்தியா சார்பாக ஆனந்த் விளையாடுவதால் அரசு தன் விதிகளைத் தளர்த்தியிருக்கக்கூடும்! ●

ஹாஸ்பிடல் எத்திக்ஸ்

ஜி.எஸ்.எஸ்.



'மாஸ்டர் செக்கப்' - ஒவ்வொரு வீட்டிலும் அறிமுகமாகிவிட்ட வார்த்தைகள் இவை.

வேகமான வாழ்க்கை, அதிகமாகிவிட்ட அலுவலக நேரம், குறைந்து வரும் பொறுமை, நிறைந்து தளும்பும் குடும்பப் பிரச்னைகள்... எல்லாமாகச் சேர்ந்து, அதிக ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், இதயக் கோளாறுகள் என்று கிளைகள் விரித்துப் பயமுறுத்தும் காலம் இது.

எனவே, வருமுன் காப்பதுதான் நல்லது என்கிற கோணத்தில், ''என்னது, மாஸ்டர் செக்கப்பே செய்துக்கலையா? கட்டாயம் செஞ்சுக்குங்க'' என்கிறார் டாக்டர். பொதுவாக நாற்பது வயதைத் தாண்டியவர்களுக்கு இது தேவை என்பார்கள். இப்போதெல்லாம் முப்பது வயதுக்காரர்களுக்குகூட, எதுக்கும் நல்லது என்று மாஸ்டர் செக்கப்புக்குப் பரிந்துரைக்கப்படுகிறார்கள். மருத்துவரால் மட்டுமல்ல, அவரது உறவினர்களாலும்தான்.

இது தொடர்பான ஓர் அக்கிரமத்தை, நமக்குத் தெரிந்த நம்பகமான ஒரு டாக்டர் நம்மிடம் பகிர்ந்துகொண்டார்.

மாஸ்டர் செக்கப் தொடர்பான டாக்டர்களின் அணுகுமுறையை இரண்டாகப்



மெடிக்கல் மீட்டிங்!

பிரிக்கலாம். ஒன்று மீட்டிங்குக்கு முன், இரண்டு மீட்டிங்குக்கு பின்.

மாஸ்டர் செக்கப் முடிந்த சற்றுநேரத்தில், மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் சோதனைகளைச் செய்து கொண்டவரிடம் கொஞ்சம் பேச்சுவார்த்தை நடத்துவார்.

''உங்க தினசரி வாழ்க்கையிலே உங்களுக்கு எந்தச் சிக்கலும் இல்லையே?''

''ஒண்ணுமில்லே. ஆனால், இப்பல்லாம் ரெண்டுமாடி ஏறினால் மூச்சு வாங்குது டாக்டர்.''

''ரொம்பவும் அதிகமாகவா? கொஞ்ச நேரத்திலே இது சரியாயிடுதா? அப்போது உங்க இதயத்திலே வலி உண்டாகுதா?''

வந்தவர் வேகமாக இல்லை என்பது போல் தலையாட்டுகிறார். ''கொஞ்ச நேரம் மூச்சு வாங்கி பிறகு சரியாயிடுது. இதயத்திலே எல்லாம் எந்த வலியும் இல்லே.''

''நீங்க கவலைப்பட எதுவும் இல்லே. இரத்த அழுத்தம் நார்மலாக இருக்கு. சுகரும் கிடையாது. ஈ.சி.ஜி. யும் நார்மல்னு சொல்லுது. அதனாலே மாடி ஏறினதும் மூச்சு வாங்குவது என்பது பெரிய விஷயம் இல்லே. வயது ஆக ஆக இது சகஜம்தான். மற்றபடி வேறு ஏதாவது பிரச்னை வந்தால், வந்து பாருங்க. இப்போதைக்கு யு ஆர் பர்ஃபெக்ட்லி ஆல் ரைட். போயிட்டு வாங்க.''

இது மீட்டிங்கிற்கு முந்தைய காட்சி.

அதென்ன மீட்டிங்? பார்ப்போம்! பெரும்பாலான பிரபல மருத்துவமனைகளில், வாரம் ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை மீட்டிங் நடக்கும். மருத்துவமனையின் உரிமையாளர், பெரும்பாலும் வரும் மருத்துவர்தான் நடுநாயகமாக அமர்ந்திருப்பார். அவர் தனக்கு எதிரே உள்ள இளம் டாக்டரை கோபத்துடன் பார்ப்பார்.

''என்ன டாக்டர், தொடர்ந்து இங்கே ப்ராக்டிஸ் செய்ற ஐடியா இருக்கா இல்லையா?'' என்று கேட்பார். மருத்துவப் படிப்பை இப்போதுதான் அல்லது சில ஆண்டுகளுக்கு முன்தான் முடித்திருக்க கூடிய அந்த இளம் டாக்டர் ''நாம் என்ன தப்பு செய்தோம்?'' என்று பரிதவிப்

பார். (அவர் தப்பு செய்யாததுதான் தப்பு என அடுத்ததாகத் தெரியவரும்).

''நம்ம ஆஸ்பிடலிலே போன வாரம் நூறு பேருக்கு மாஸ்டர் செக்கப் நடந்திருக்கு. ரிப்போர்ட் எழுதிக் கொடுத்தது நீங்கதானே? வெறும் நாலு பேருக்குதான் ட்ரெட்மில் செய்யச் சொல்லியிருக்கீங்க. அஞ்சேஅஞ்சு பேருக்கு எக்கோ. என்ன நினைச்சுக்கிட்டிருக்கீங்க? கோடிக்கணக்கிலே மெஷின்களை வாங்கிப் போட்டிருக்கிற நான் வயத்திலே ஈரத் துணியைக் கட்டிக்கவா?''

''நான் என்ன செய்யணும்னு சொல்லுங்க டாக்டர்'' என்று பவ்யமாகக் கேட்பார் ஜூனியர். சொல்லப்படும்.

அதற்கு பிறகு நிலைமையே மாறி விடும்

''ஈ.சி.ஜி. நார்மல்னு வந்திருக்கே. ரொம்ப சந்தோஷமா இருக்கு டாக்டர்''

''படியேறினா மூச்சு வாங்குதா?''

''அவ்வளவா இல்லே. கொஞ்சம் கொஞ்சம்''

''இதயத்திலே ஏதாவது கோளாறு இருந்தா கூட இப்படி ஆகலாம்''


''ஆனா ஈ.சி.ஜி. நார்மலா இருக்கே டாக்டர்''

''அதை முழுசுமா நம்ப முடியாதுங்க. அதனால ஒரு ட்ரெட்மில் டெஸ்ட் செய்துக்குங்க. அதான் ஸ்ட்ரெஸ் ஈ.சி.ஜி.''

''அவசியமா டாக்டர்?'' தயங்கித் தயங்கிக் கேட்பார் வந்தவர்.

''அந்த டெஸ்ட்டைச் செய்துக்கிட்டு ஒண்ணுமில்லேன்னு வந்துட்டா நிம்மதியா இருக்கலாம். மத்தபடி உங்களுக்கு ஏதாவது இதயக்கோளாறு இருந்து, அதைத் தெரிஞ்சுக்காமல் சிகிக்சை இல்லாம போய் ஏதாவது விபரீதமானா, அப்புறம் என்னைக் குறைசொல்லக் கூடாது. சிலதையெல்லாம் முற்றவிட்டால் அப்புறம் வருத்தப் படணும்..''

அதற்கு மேல் அப்பீல் ஏது? இப்படி பத்து பேருக்கு ரெண்டு ட்ரெட்மில் சோதனையும், எக்கோ சோதனையும் நடத்தப்படும்.



நடு நடுவே அதே மருத்துவ மனையைச் சேர்ந்த பிற சிறப்பு மருத்துவர்களிடமும் இவர்கள் பரிந்துரைக்கப் படுவார்கள். ''அப்பப்போ தலைவலின் நீங்களே, எங்க நியூராலஜிஸ்ட்டைப் பார்த்துடுங்க. என்னது, முந்தியை விட யூரின் போக ஒரு பத்து நொடிகள் அதிகமாகுதா? இப்போ எங்க யூராலஜிஸ்ட்டை கன்சல்ட் பண்ணிட்டுப் போயிடுங்க.''

இப்படி ஸ்பெஷலிஸ்டுகளிடம் ஆலோசனைக்குத் தள்ளிவிடுவார்கள். (அதற்கு மேல் இவர்கள் பார்த்துக் கொள்ளமாட்டார்களா என்ன?)

'எதுக்காக, செக்கப் எல்லாம்? எந்த வியாதியும் இல்லே டெஸ்ட் செய்துகிட்டா எதாவது ஒரு வியாதின்னு சொல்லுவாங்க. சந்தோஷம் போயிடும்' என்பவர்கள் முட்டாள்தனமான அணுகுமுறையைக் கொண்டவர்களா? சுரண்டலிலிருந்து தப்பித்த பாக்கியவான்களா?


(தொடரும்)

கணக்கு

பண விஷயத்தில் பெரும்பாலும் நாம் கணக்காகவே இருக்கிறோம். இதை நமக்கு யாரும் சொல்லித்தர வேண்டிய தில்லை. ஒரு வஸ்துவுக்கு அதன் விலையைவிட ஒரு பைசா அதிகம் கொடுப்போமா? மாட்டோம். பணத்தில் கணக்காக இருப்பது உண்மை. ஆனாலும் பணத்தைக் கொடுத்துப் பல வஸ்துக் களை வாங்குகிறோமே, அவற்றில்தான் இத்தனை வஸ்துக்கள் நமக்குப் போதும் என்று, கணக்காக இருக்க மாட்டேன் என் கிறோம். நாம் நிம்மதியாக உயிர் வாழ் வதற்குச் சொற்ப வஸ்துக்கள் போதும். இந்த வஸ்துக்களுக்குத் தேவைப்படும் பணத்தை மட்டுமே நாம் சம்பாதனம் செய்வதென்றால், இப்போது போல் பறக்கவே வேண்டாம் - தேசம் விட்டு, கண்டம் விட்டு, எங்கெங்கோ போய் ஆசாரங்களை விட வேண்டாம். அநா வசியமான வஸ்துக்களுக்காகவே கணக்கில்லாமல் சம்பாதிக்க வேண்டி யிருக்கிறது. அதற்காக, ஆத்ம விசாரத்துக்கும் ஈஸ்வர தியானத்துக் கும் பரோபகாரத்துக்கும் செலவிட வேண்டிய காலத்தை எல்லாமும், கணக்கில்லாமல் விரயம் செய்ய வேண்டியிருக்கிறது. இரண்டு தினு சில் கால விரயம்: முதலில் சம் பாதிப்பதில் கால விரயம்; அப்புறம் வேண்டாத வஸ்துக்களைத் தேடித் தேடிப் போவதில் கால விரயம். நிகர விளைவாகவோ ஆத்ம சாந்தியைக் குலைத்துக் கொள்கிறோம். திருப் தியே இல்லாமல் ஆசை வேகத் திலும், பல சந்தர்ப்பங்களில் ஆசை நிறைவேறாத ஏமாற்றத்திலும் அவஸ் தைப் படுகிறோம்.

நாம் உயிர் வாழ இந்த வஸ்து அவசியம் தானா என்று பார்த்து, கணக்காகச் செலவு செய்வதே உண்மையில் 'கணக்காயிருப் பதாகும்.'. வேண்டாத வஸ்துக்களுக்குப் பேரம் பண்ணி, சாமர்த்தியமாக விலை பேசி அதற்கு ஒரு பைசாகூட அதிகம் கொடுக்கவில்லை என்பதால் கணக்கா யிருந்ததாகாது.


- ஜகத்குரு காஞ்சிகாமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



அருள்வாக்கு

உயிர்க்கொல்லி தேவதை!

- கதிர்பாரதி -



உயிர் பிடித்தெழும் நாட்களின்
பிடரி பற்றி
உலுக்கியெடுக்கின்றன
நீ ஊட்டி வளர்த்தனுப்பும்
ஞாபகங்கள்

சிறகு முளைத்துப்
பறக்க யத்தனிக்கும்
பொழுதுகளைச் செரித்துத் தீர்க்க
பசி விரித்து விடைத்தலைகிறதுன்
பருவம்

செழிக்கத் துவங்கும்
என் வெள்ளாமையின்
கழுத்தறுக்க
கருக்கேந்தி நகர்கிறது
அஹிம்சை புனைந்த
பார்வை



ஏறி இறங்கும்
ஏக்கப் பெருமூச்சுகளில்
தீய்ந்தழிகின்றன
உன் அர்த்தங்கள்
உமிழ்ந்துவிட்டுப் போன
கனவு பிம்பங்கள்

நீ நிகழ்ந்து முடிகிற
கணங்களின்
கடைசிப் புள்ளியில்
அதிரத் தொடங்கும் மனசு
காரணங்களை வெறித்தபடி
ஊசலாட்டம் போடுகிறது
கேள்விக்குறியில்

கொஞ்சம் சிதைக்க
மிஞ்சியதை எரிக்க
உதிர்ந்து விழும்
உயிரின் சாம்பல்
உன் பிரசாதமெனில்...
நீ
உயிர்க் கொல்லி
தேவதை!

'மோதி விளையாடு' படத்தின் மூலம் மீண்டும் சினிமா இயக்கத்தில் விளையாட வந்துவிட்டார் இயக்குநர் சரண். மலேசியா, இந்தியா என... மாறிமாறிப் பறந்து கொண்டிருந்தவரை ஒரு மதியவேளையில் சந்தித்தோம்....

அதென்ன 'மோதி விளையாடு'?

''வாழ்க்கையில் எதிர்பாராமல் வீழ்ச்சியைச் சந்திக்கும் ஒருவன், அந்தத் தடைக்கல்லையே படிக்கல்லாக மாற்றிக் கொண்டு, மீண்டும் வெற்றி பெறுகிற கதை. அதனால் பவர்ஃபுல் டைட்டிலாக வைக்க விரும்பினேன். எனவே, 'மோதி விளையாடு!' ''

கதை என்ன?

''கதையை நான் விரிவா சொல்ல விரும்பலை. படம் வெளியாவதற் குள்ளே, அதை வெச்சு ஒரு மெகா சீரியலே எடுத்துட வாய்ப்பிருக்கு. அண் மையில் ஓர் ஆங்கிலப் படம் பார்த்தேன். அதில் ஒரு காட்சியில் இடம் பெற்றிருந்த பின்னணி இசை, என்னை மிகவும் கவர்ந் தது. அந்தச் சாயலில் ஒரு பின்னணி இசையை, என் படத்தில் ஒரு குறிப்பிட்ட காட்சிக்குப் பயன்படுத்தினால் ஸீன் விறு விறுப்பாக இருக்கும் என்று நான் நினைத் தேன். ஆனால், சமீபத்தில் ஒரு டீ.வி. சீரியலில் அந்தப் பின்னணி இசை பிட்டை அப்படியே பயன்படுத்தி இருக்கிறார்கள். எனவே, ரகசியம் காப்பது நல்லது.''

வினய்யை ஹீரோவாக்கினது ஏன்?

'' 'உன்னாலே உன்னாலே' படத்தின் பாடல்களை வாயை ஒரு மாதிரியாகக் குவித்து வைத்துக்கொண்டு, என் பெண் சஞ்சனா பாடுவதைக் கவனித்தேன். 'வாயை ஏன் அப்படி வைச்சுக்கிட்டுப் பாடறே?' என்று அவளைக் கேட்டபோது, 'வினய் அப்படித்தான் வாயை வெச்சுக் கிட்டுப் பாடுவார்' என்றாள். நானும் அந்தப் பாட்டைக் கவனித்தபோது, அவரது ஸ்டைல் வித்தியாசமாக இருப்பதைப் பார்த்தேன். கதைக்கு அவர் பொருத்தமாக இருப்பார் என்று தோன்றியது. படத்துக்கு ஹீரோவாக்கினேன்.''

அப்போ ஹீரோயின் செலக்ஷன் உங்க குட்டிப் பையனா?

''(சிரித்துவிட்டு) இல்லை இல்லை. பழனி படத்துல வரும் ஒரு பாட்டில், தன் கைப்பையிலிருந்து கத்தியை எடுத்து, ஹீரோவுக்குக் காட்டி மிரட்டும்விதமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, மறுபடியும் கத்தியை மறைத்து வைத்துக்கொள்வார் காஜல் அகர்வால். சில விநாடிகளுக்குள் இப்படி முகபாவம் காட்டியது என்னை ஆச்சரியப்படுத்தியது. அவரை ஹீரோயி னாக நடிக்க வைக்கலாம் என்று விசாரித்த போது, 'தெலுங்கில் ரொம்ப பிஸி' என்று செய்தி வந்தது. ஆனால், ஒரு மாடல் கோ-ஆர்டினேட்டர் மூலம் அணுகிய

"பாதி பாம்பே ஜெயஸ்ரீ... மீதி சுனிதா சாரதி..!"

- இயக்குநர் சரண்

போது, என்னை நேரில் சந்தித்து, 'ஸாரி! இப்போதைக்கு கால்ஷீட் இல்லை' என்று சொல்வதற்காக வந்தார். அவரிடம் கதை சொன்னதும், 'நான் எக்காரணம் கொண்டும் இந்தப் படத்தை மிஸ் பண்ண விரும்பவில்லை. உங்களுக்குத் தேவையான கால்ஷீட்டை, எப்படியாவது அட்ஜஸ்ட் செய்து கொடுக்கிறேன். ப்ளீஸ் வேறு யாரையும் இந்த கேரக்டருக்கு புக் பண்ணி விடாதீர்கள்' என்று சொன்னார்.''



'சரண்-பரத்வாஜ்' டீம் இந்தப் படத்தில் இல்லையே?

''எந்த ஒரு மனிதனும், ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தன்னைத்தானே விமர்சனம் செய்து கொள்ள வேண்டும். பத்து வருடங்களுக்கு ஒருமுறை சில பழைய விஷயங்களுக்குப் பதிலாக புதிய விஷயங்களை முயற்சி செய்து பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் நிகழ்ந்த தற்காலிகப் பிரிவுதான் இது. அதனால்தான், பரத்வாஜுக்குப் பதிலாக நம் ஊர் இசையமைப்பாளர்கள் வேறு யாரையும் பயன்படுத்திக்கொள்ள என் மனசாட்சி இடம் தரவில்லை. படத்தின் தயாரிப்பாளரான டாக்டர் முரளி மனோகர்தான் 'கலோனியல் கசின்ஸ்' ஹரிஹரன்-லெஸ்லி இரட்டையரை இசையமைக்கச் செய்யலாம் என்று ஐடியா கொடுத்தார்.''

* இயக்குநர் சரண்



மேற்கத்திய இசையில் ஊறிய அவர்கள், நம் தமிழ்ப் படங்களுக்கு ஒத்துவருவார்களா?

''கலோனியல் கசின்ஸ் கொடுத்த அவர்களின் பாணி, மேற்கத்திய மற்றும் இந்திய (கர்நாடக மற்றும் இந்துஸ்தானி) இசைகளின் ஃப்யூஷன். அதற்கு இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. அவர்களும் அதைப் புரிந்துகொண்டு, நிறைய ஹோம்-வொர்க் செய்திருக்கிறார்கள்.

ஒரே பாட்டு. ஆனால் கதாநாயகி அதை இரண்டு குரல்களில் பாடுவது போல சிச்சுவேஷன். இதற்கு அவர்கள் அற்புதமாக ஒரு டியூன் போட்டு, பாம்பே ஜெயஸ்ரீ, சுனிதா சாரதி இரண்டு பேரையும் பாடச் செய்திருக்கிறார்கள். 'பாதி காதல்; பாதி முத்தம்' என்ற வைரமுத்துவின் அந்தப் பாடல் பெரிய அளவில் ஹிட் ஆகும். அந்தப் பாட்டைக் கேட்கிறபோது, மைலாப்பூரில் புறப்பட்டு, நியூயார்க் செல்வது போன்ற உணர்வு ஏற்படும்.''



கலாபவன் மணிக்கு இதிலும் வில்லன் ரோலா?

''அவர் மலையாளத்தில் படுபிஸி. ஒரு மாதத்துக்கு ஒரு நாள்தான் அவரால் ஒதுக்க முடிகிறது. அவருக்கு ஜெமினி படத்தில் ஒரு மாறுபட்ட அடையாளம் கொடுத்ததற்காக, நட்பு மற்றும் மரியாதை அடிப்படையில் மிகவும் கஷ்டப்பட்டு தேதிகளை அட்ஜஸ்ட் செய்து நடித்துக் கொடுக்கிறார். ஒரு கருப்பு அம்பானி மாதிரியான கேரக்டர் அவருக்கு.''

உங்கள் புரொடக்ஷன் நிறுவனத்தில் ஏன் தயாரிக்கவில்லை?

''நான் சொந்தமாக புரொடக்ஷன் கம்பெனி ஆரம்பித்த பின், தயாரித்து, இயக்கிய படம் 'வட்டாரம்' மட்டும்தான். மற்றவை அனைத்தும் வெளி தயாரிப்பாளர்களுக்காக இயக்கியவை. நான் சில பிரச்னைகளைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது, மெட்ரோ ஃபிலிம்ஸ் டாக்டர் முரளி மனோகரின் சகோதரர் ஜெயகுமார், முழு பக்கபலமாக நின்று தைரியமூட்டினார். சினிமாவைப் பொறுத்தவரை எங்கள் இருவரது சிந்தனையும் ஒன்று. எனவே, அவர்களுக்காக ஒரு படம் இயக்க நான் முன் வந்தேன்.''

கமலுடனான பிரச்னை சரியாகிவிட்டதா?

''கமலின் திறமைகளுக்கு நான் நல்ல ரசிகன். ஆனாலும், எனக்குண்டான நியாயங்கள் அப்படியேதான் இருக்கு. அதை இந்தத் திரையுலகம் காப்பாற்றவில்லை. பெரியவங்க செஞ்சா பெருமாள் செஞ்ச மாதிரி என்ற போக்குதான் இங்கு நிலவுகிறது. என் பக்கத்தில் சில தவறுகள் இருக்கலாம். ஆனால், இருதரப்பையும் ஆராய்ந்து, நியாயம் கிடைக்க வழிசெய்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் என் பாதி பிரச்னைகள் வராமலே போயிருக்கும். இப்போது கமல் படத்தைப் பார்க்கிறபோது, ரசித்துப் பார்க்கும் அளவுக்கு என் மனது பக்குவப்பட்டு விட்டது.''

– எஸ். சந்திரமௌலி

எல்.கே. அத்வானி

எழுதிய

என் தேசம்
என் வாழ்க்கை

நூல் வெளியீட்டு விழா

12 - 11 - 2008 - புதன்கிழமை

- மாலை 6 - 00 மணிக்கு

நாரத கான சபா, சென்னை - 18

பங்கேற்பவர்கள்

ஸ்வாமி தயானந்த சரஸ்வதி

எல்.கே.அத்வானி

Air Chief Marshal கிருஷ்ணஸ்வாமி

சோ

பத்மா சுப்ரமணியம்

'அல்லயன்ஸ்' ஸ்ரீநிவாஸன்

சிறப்பு சலுகை

புத்தகத்தின் விலை ரூ. 600/-

12- 11- 2008 - வரை முன் பணம் செலுத்தி பதிவு செய்பவர்களுக்கும்;

வெளியீட்டு விழாவில் வாங்குபவர்களுக்கும் ரூ.450/- மட்டும்

(தபால் செலவு தனி)

அல்லயன்ஸ் (நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

(ப. எண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மைலாப்பூர் - 600 004

தொலைபேசி 24641314 www.alliancebook.com email: srinivasan@alliancebook.com

ஆஃபிஸ்

குவிந்திருக்கிற ஃபைல்களின் நடுவே ஏதோ ஒன்று எட்டிப் பார்த்த மாதிரி தெரிந்தது. அசைவை உணர்ந்து 'பாம்பு' பயத்தில் துள்ளிக் குதித்து, பின் வாங்கிய சுகுணா, கிச்சென்று அலறியது கேட்டதும்

''என்ன மேடம்?''

''இங்கே ஏதோ அசையுது.''

''நம்ம ஆஃபீஸ்ல ஏதோ வேலை நடக்குதுன்னு சந்தோஷப்படுவீங்களா... அதை விட்டுட்டு.''

''அய்யோ... பாம்பு மாதிரி...''

அவ்வளவுதான். முன் எச்சரிக்கையாய் சிலர் வாசல் பக்கம் போய்விட, ஒரே ஒரு தைரியசாலி மட்டும் சீட்டில் இருந்தார்.

''கணேசன் ஸார்... ஹியர்ஃபோனை காதுல மாட்டுங்க'' என்று வாசல் பக்கமிருந்து குரல் கேட்டது. சூழ்நிலை புரிந்ததும் அவரும் ஓடி வந்துவிட்டார்.

''அட்டெண்டரைக் கூப்பிடுங்க.''

''ஏன் ஸார், அவர் மட்டும் மனுஷன் இல்லியா?''

இதற்குள் அந்த ஜீவனே பொறுமையிழந்து வெளியே வந்தது. இத்தனை ஒல்லியாய், ஒரு பூனையை இதுவரை பார்த்ததே இல்லை. முழ நீளத்துக்கு ஒல்லி உடம்பு, குச்சியாய் கால்கள், கண்களில் உயிர் ஒட்டிக்கொண்டிருந்தது.

''எப்ப ஜாயின் பண்ணார்?'' என்று மலையாள அம்மணி கேட்க பூனையின் பூர்வோத்தர அலசல் ஆரம்பித்தது.

''நேத்துவரைக்கும் பார்க்கலியே.''

டெஸ்பாட்ச் கொண்டு வந்த அட்டெண்டர் சொன்னார்.

''அட, இது இங்கே வந்திருச்சா...? மேல பார்ச்சேஸ்ல இல்ல இருந்திச்சு.''

''அக்கவுண்ட்ஸ்ல என்ன வேலை?''

''டி.ஏ. கிளெய்ம் கொடுக்க வந்திருக்கும்.''

''ஆன் டியூட்டி போயே இளைச்சிருச்சு.''

பாம்பு இல்லை, பூனை என்று தெரிந்ததும் மாமூல் லக...லக... ஆரம்பித்துவிட்டது. டீ நேரம் என்பதால், கொண்டு வந்து வைத்த டீயை சாசரில் ஊற்றிக் கீழே வைத்தார் ஒருவர்.

''ஏன் ஸார் டீ பிடிக்கலியா?''

அதன் ஒல்லி உடம்பைப் பார்த்து, தைராய்டு பிரச்னையில் இருந்த குமரவேலும் சந்திரிகாவும் பெருமூச்சு விட்டார்கள்.

''இந்தப் பூனை எலி பிடிக்காதா?''

''இந்த உடம்போட அது ஓடறதுக்குள்ள எலி ரெண்டு மாடி தாண்டிரும்... பாரு மூச்சு கூட விட முடியல...''

தேநீரை முகர்ந்துவிட்டு, நிராகரித்து நகர ஆரம்பித்தது.

''நீ கொண்டு வர டீ அதுக்குக்கூட பிடிக்கல...'' என்று அட்டெண்டரைக் கலாய்த்தார்கள்.

இரண்டு மூன்று நாட்களுக்குள் அதன் வொர்க் அலோகேஷன் புரிந்துவிட்டது. ஒன்பதரை மணிவரை, எங்கே இருக்கிறது என்று முதலில் தெரியவில்லை. அப்புறம்தான் தெரிந்தது. பிறந்த வீடான பர்ச்சேஸில்



பூனை!

ரிஷபன்

ஒன்பதரை மணி வரை. பிறகு மெல்லப் படியிறங்கி அக்கவுண்டஸில் எல்லா செக்ஷனுக்கும் போய்விட்டு கடைசியில் எங்கள் பகுதி.

காலையில் கொண்டு வரும் டிஃபனில் ஒரு பகுதியை எடுத்துவைத்துவிட்டுச் சாப்பிடுவார்கள். நான்கு வீட்டு டிஃபனில் அது எதை ஒதுக்குகிறதோ, அதில் உப்பு உறைப்பு குறைவாய் இருப்பதை எந்த ஈகோவும் இல்லாமல் அந்தந்த மேடம் ஒத்துக்கொண்டு 'ஸாரி' கேட்பார்கள்.

''அவர் எதைப் போட்டாலும் ஒண்ணும் சொல்ல மாட்டார்.''

''அவ்வளவு அனுசரிச்சுப் போவாரா.''

''நீங்க வேற... எதுவும் கண்டுபிடிக்கத் தெரியாது.''

இவர்களின் பலத்த சிரிப்பு பூனையை எதுவும் செய்யாது.

இந்த பூனை வந்தபிறகு ஃபைல்களை எலி கடிப்பது நின்றுபோனாலும், எங்களுக்குப் பிரச்னையானது. எந்த ஃபைலைக் கேட்டாலும் 'எலி கடிச்சுருச்சு' என்கிற நிர்வாக ரீதியான பதிலைத் தர முடியவில்லை இப்போது. தன் ஒல்லி உடம்பை நீட்டி எம்பி லீவு போட்டிருந்தா, ஆஃபீசர் இருக்கையில் அது அமர முயற்சித்த ஐந்து, பத்து நிமிட சாகசங்கள், அந்தநேரம் எங்களிடம் வீடியோ காமிரா இல்லையே என்று ஏங்க வைத்துவிட்டது.

''பூனைக்குப் பேர் வைக்கலியே'' என்று ஒருவர் வருத்தப்பட்டார்.

''ஆஃபீஸ் பூனைன்னுதானே சொல்றோம்.''

''சமயத்துல அதை யாருக்குச் சொல்றோம்னு குழப்பமாவுது.''

''ஒல்லியா இருக்கே... நம்ரன்னு வைக்கலாமா?'' என்று நம்ரன் ரசிகர் கேட்டார்.

''சேச்சே... அவங்களுக்குக் கல்யாணம் ஆயிருச்சு. வேற யோசிங்க.''

எங்கள் கவலை எதனாலும் பாதிப்படையாமல் 'ஆஃபீஸ் பூனை' கால்களுக்கிடையே நுழைந்து, அடுத்த செக்ஷனுக்குள் போய்க் கொண்டிருந்தது நிரந்தர அலுவலர் மாதிரி! ◯





அப்பா

ராதிகா

நேற்று காலை, என் மகள் என்னிடம் வந்தாள். யாரையோ பற்றி புகார் சொன்னாள். அதன் சாரம் இப்படித்தான் இருந்தது. 'அவங்க அப்படிச் சொன்னாங்க, இவங்க இப்படிச் சொன்னாங்க, எனக்கு மனசு தாங்கலை' என்கிற மாதிரி இருந்தது அவளுடைய பேச்சு. நான் அப்போது எதுவுமே பதில் சொல்லவில்லை.

அரைமணி நேரம் கழித்து, அவளுக்கு ஃபோன் செய்தேன். 'மத்தவங்க சொல்றதை, காதுலேயே வாங்கிக்கக் கூடாது. நம்மைப் பத்திச் சொல்ல அவங்க யார்? இன்னொரு தடவை நீ இப்படிச் சொன்னேன்னா, என்கிட்ட எந்த ரியாக்ஷனும் இருக்காது. நெவர் வேஸ்ட் யுவர் டைம்' என்று சொன்னேன். வம்புப் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுத்தால், அதிலேயே மூழ்கிக் காணாமல்போய்விடுவோம்.

அவள் சிறு வயதிலிருந்தே, பள்ளியில் நடக்கும் ஓட்டப் பந்தயத்தில் முதலாவதாக வருபவள். ஒரே ஒருமுறை இரண்டாவதாக வந்து விட்டாள். எப்போதும் முதல் ஆளாகத்தான் வரவேண்டும் என்று சொல்ல மாட்டேன். இரண்டாவதாக வந்தால், அதற்காகக் கவலைப்படவும் மாட்டேன். இது என் பாலிஸி. ஆனால், அவளுக்கு மனது தாங்கவில்லை. என்னிடம் வந்து புலம்பினாள்.

''நீ ஏன் செகண்ட்டா வந்தேன்னு யோசனை பண்ணிப் பார்'' என்றேன்.

''ஏன்?''



✱ படம் : ஸ்ரீஹரி

''நீ ஓடுறப்போ, யார் பின்னாடி வர்றாங்கன்னு, ரெண்டு தடவை திரும்பிப் பார்த்தே இல்லியா?''

''ஆமா.''

''அதுனாலதான் நீ செகண்ட்டா வந்தே!''

ஓடிக்கொண்டே இருக்கவேண்டும். எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஓட வேண்டும். நான் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன்.

வேண்டும். அந்த எண்ணம் ஒன்றுதான் இன்றுவரை என்னை இயக்கிக்கொண்டிருக்கிறது.

என் தந்தை எனக்கு ஓர் அறிவுரை சொன்னார்: 'எங்க போறதா இருந்தாலும் சரியான நேரத்துக்குப் போ! எதைச் செஞ்சாலும் முழு மனசோட செய்!', இந்த ஒன்றைத்தான், நான் அட்சரம்பிசகாமல் கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறேன். அப்படிச் செய்தபிறகு செய்த வேலையில், வெற்றி அடைந்தாலும் சந்தோஷப்பட மாட்டேன்; தோல்வி அடைந்தாலும் கவலைப்பட மாட்டேன்.

வாழ்க்கையில் நாம் எது செய்தாலும், 'இது சரியாக வரும்' என்று யாராலும் உறுதியாகச் சொல்ல

சொன்ன அறிவுரை!


எம்.ஆர். ராதா

எடுத்தவுடனே கடலில் தூக்கிப்போட்டு நீச்சல் கற்றுக்கொள்ளச் சொன்ன கதைதான் என்னுடையது. நான் சினிமாவுக்கு வந்ததுமே, எனக்கான தனித்துவம் வந்துவிடவில்லை. உண்மையில் அதற்கு நான் முயற்சிகூடச் செய்யவில்லை.

என் அம்மா அடிக்கடி சொல்வது போல, 'இந்தக் கணம் வரைக்கும் எனக்கு லட்சியமே கிடையாது. 'இப்படி ஆகணும்; உயரத்துக்குப் போகணும்' என்று நான் எப்போதுமே நினைத்ததில்லை. எதைச் செய்தாலும் சரியாகச் செய்ய

முடியாது. நீங்கள் செய்யும் தவறுகளில் இருந்து, கற்றுக்கொள்கிறீர்கள். கற்றுக்கொண்ட பிறகு தவறு நடக்காமல் தவிர்த்து விடுகிறீர்கள்.

தெலுங்கில் நான் நடித்த முதல் படம்

'நியாயம் காவலி.' சிரஞ்சீவியோடு நடித்தேன். அந்தப் படம் சூப்பர் ஹிட். அதற்குப் பிறகு, நிறைய படங்கள். அந்த நேரத்தில்தான் எனக்குள் ஒரு சீரியஸ்னஸ் வந்து உட்கார்ந்து கொண்டது. நான் என் துறையைப் புரிந்துகொண்டேன்; அதை மனமார ஏற்றுக்கொண்டேன். மொழிப் பிரச்னை இருந்தது, இல்லையா? அதை முதலில் சரி பண்ணவேண்டும் என்று தீர்மானித்தேன். தெலுங்கு மொழியைக் கற்றுக் கொள்வதில் கவனம் செலுத்தினேன்.

அப்போதெல்லாம் தமிழில் ஹிட்டான எல்லாப் படங்களையும் தெலுங்கில் எடுத்துக்கொண்டிருந்தார்கள். 'அந்த ஏழு நாட்கள்' படத்தை எடுத்தபோது, அதில் நான் நடித்தேன். பிறகு மறுபடியும் தமிழுக்கு வந்தேன்.

ஆனால், சவால்கள் நிறைந்தது வாழ்க்கை. அதை நாம் எப்படி எதிர்கொள்கிறோம் என்பதில்தான், ஒவ்வொருவருடைய தனித்தன்மையும் இருக்கிறது. நான் சவால்களிலிருந்து கற்றுக்கொண்டேன். மெல்ல, மெல்ல மேலே வந்தேன்.

எனக்கு முதல் குழந்தை, ரேயானி பிறந்திருந்த சமயம் அது. பாரதிராஜா சார் வடிவில், வாழ்க்கை என்னை இன்னொரு கட்டத்துக்கு அழைத்தது.

''நீ என்ன செய்வியோ தெரியாது. 'கிழக்கு சீமையிலே'ன்னு ஒரு படம் எடுக்கறேன். அதுல நீ நடிக்கறே'' என்று சொன்னார்.

''இப்பத்தான் குழந்தை பிறந்திருக்கு.

"கிழக்குச் சீமையிலே படத்தின் மூலம், பாரதிராஜா வடிவில் வாழ்க்கை என்னை இன்னொரு கட்டத்துக்கு அழைத்தது!"

அப்போதுதான் 'ஓ இவங்க நல்லா பண்றாங்களே!' என்கிற பெயர் எனக்குக் கிடைத்தது. அதற்குக் காரணமும் இருந்தது. முதலில் என்னிடம் இருந்த விளையாட்டுத்தனம் அப்போது இல்லை. 'நத்திங் ஹேப்பண்ட் ஓவர் நைட்' என்று சொல்வார்கள் இல்லையா? அதுபோல, எனக்கு எதுவுமே எளிதாகக் கிடைத்துவிடவில்லை. முதல் படமான 'கிழக்கே போகும் ரயில்' தவிர. அதற்குப் பிறகு ஒவ்வோர் அடியாக முன்னேறித்தான் நான் வரவேண்டியிருந்தது. அதைப் போராட்டம் என்று நான் சொல்ல மாட்டேன். ஏனென்றால், எல்லோருடைய வாழ்க்கையிலும் அது இருக்கிறது. அதை வெற்றிகொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை.

வெயிட் வேற போட்டிருக்கேன். வேணாம் ஸார்'' என்றேன் நான்.

''இல்ல, இல்ல. நீ ஒண்ணும் பெருசா வெயிட் போட்டுடலை. அந்த ரோலுக்கு இது போதும்.''

''எங்க சார் ஷூட்டிங்?''

''வத்தலக்குண்டு.''

''வெளியூருக்கெல்லாம் வரலை சார். ரொம்பக் கஷ்டம்'' என்று சொன்னேன்.

நானோ கைக்குழந்தையை வைத்திருப்பவள். அதற்கு நேரத்துக்குப் பால் கொடுக்கவேண்டும். பார்த்துக்கொள்ள வேண்டும். சரியான நேரத்துக்கு ஷூட்டிங்குக்குப் போகமுடியாது. என்ன செய்வது?

''நீ எதுக்கும் கவலைப்படாதே! எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன்''

என்று சொல்லிவிட்டார் இயக்குநர். அதற்குப் பிறகு என்னால் மறுக்கமுடிய வில்லை. சொன்னபடி எல்லா உதவிகளும் செய்தார். அதன் பிறகு என் நடிப்பு மீதான பார்வை மற்றவர்களுக்கு மாறியது.

சமீபத்தில் யாரோ, நான் பத்திரிகை களுக்குக் கொடுத்த பழைய பேட்டிகள், என்னைப் பற்றிய செய்திகள் எல்லாவற் றையும் எடுத்துக் கொடுத்தார்கள். பத்திரி கைகள், என்னைப் பற்றி என் னென்னவோ எழுதியிருந்தன. 'இதுக்கு மேல நடிக்க மாட்டாங்க', 'கல்யாணம் ஆயிடுச்சு அவ்வளவுதான்', 'இனிமே அக்கா வேஷத்துல நடிப்பாங்க.' ஆனால், நான் இதையெல்லாம் மீறி, திருமணமான பிறகும், குழந்தை பிறந்த பிறகும்கூட மறுபடியும் ஒரு ஹீரோயினாகத் திரைக்கு வந்தேன்.

'கிழக்குச் சீமையிலே' படத்தில் நடித்த பிறகு, எனக்கு நிறைய வாய்ப்புகளும் வந்தன. ஆனால், வீட்டில் தனியாகக் குழந்தையை விட்டுப்போவது பெரிய மனப் போராட்டமாக இருந்தது.

குழந்தையை வெளியில் தூக்கிக் கொண்டு போகவும் பயமாக இருக்கும். யாரிடமாவது விட்டு விட்டுப் போவதற் கும் பயமாக இருக்கும். அப்போது நான் நடிக்க ஒப்புக்கொண்ட எல்லாப் படத் தயாரிப்பாளர்களிடமும், 'இத்தனை மணிக்குத்தான் வருவேன். இத்தனை மணிக்குப் போய்விடுவேன்' என்று ஒப்பந்தம் போட்டுக் கொண்டுதான் நடித்தேன். ஆனால், அடுத்தவர் களிடம் காசும் வாங்கிக்கொண்டு அவர்களைச் சிரமப்படுத்து வதும் தவறுதானே! என்னு டைய தொழிலைச் சரியாகச் செய்யவேண்டும். அதில் நிலைத்து நிற்கவேண்டும். முடியுமா? முடியும் என்று சொன்னது என் உள் மனது. அதற்கு ஒரு வழியும் பிறந்தது!



* கிழக்குச் சீமையிலே படத்தில்....



* பாரதி ராஜா...

(ரயில் வரும்)

எழுத்து வடிவம் : **பாலு சத்யா**

"**கா**ய்கறிகளோ, சமையல் பதார்த்தங்களோ கெட்டுப் போகாமல் இருக்க என்ன செய்வோம்? ஃப்ரிஜில் வைப்போம். அது இனி தேவையில்லை. மண்பானை மட்டும் போதும்" என்கின்றனர் காரைக்கால் வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானிகள். அதுவும் 'குளிர்பதன மண்பானை!' சற்று விளக்கமாகவே பேசுகிறார் காரைக்கால் வேளாண் அறிவியல் மையத்தின் மனையியல் துறை உதவிப் பயிற்றுநர் லதா.

"கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் நான் படித்தபோது, குளிர் பதன மண் பானை செயல்பாடுகள் ஒரு பாடமாக இருந்தது. கோடைகாலங்களில் கிராமங்களில் மட்டுமல்ல, நகரங்களில்கூட கோடை காலத் தண்ணீர்ப் பந்தல்களில் மண் பானைத் தண்ணீர் தவறாமல் இடம்பிடிக்கிறது. ஆனால், குளிர்பதன மண் பானை மட்டும், நம் மக்களிடையே ஏன் புழக்கத்தில் இல்லை என யோசித்தேன். அதன் பின்னரே, வேளாண் அறிவியல் மைய உதவியோடு இதனை வடிவமைத்தோம். வாய் அகலம் உடைய பெரிய மண் குடுவை, தண்ணீர் ஊற்ற வேண்டி, அதன் பக்கவாட்டில் இரண்டு இஞ்ச் அகலத்துக்கு மண் குழாய், பெரிய மண் குடுவையின் உட்புற அடித்தளத்தில் ஒரு இஞ்ச் உயரத்துக்கு ஆற்று மணல், பெரிய மண் குடுவையில் உள்ளே, சிறிய மண் குடுவை. அதன் இரண்டுக்குமான இடைவெளிப் பகுதியில் தண்ணீர். சிறிய மண் குடுவையின் உள்ளே, பொருட்களை வைத்து மண் பானை மூடி கொண்டு மூடிவிட வேண்டும். இதுவே ஜனதா குளிர்பதன மண் பானை!" எனக் கூறுகிறார் .

✸ வசந்தா





"ஜனதா மண் பானையை ஆறு மாசமா பயன்படுத்தி வர்றோம். ஃப்ரிஜ்ல ஒரு பொருளை வெச்சு எடுத்தா, அதனோட குளிர் தன்மை மாறினதுக்குப் பிறகுதான் அதைப் பயன்படுத்த வேணும். ஆனா, இந்த ஜனதா குளிர்பதன மண்பானை

அப்படியில்லை. எந்தப் பொருளை வெச்சாலும், அதனோட தன்மை மாறாம அப்படியே இருக்குது. ஃப்ரிஜ்ல எக்கச்சக்கமா கண்டது கடையதெ அடைச்க வைப்போம். அதுபோல இதுல அடைக்க முடியாது. மத்தபடி இதுக்கு கரெண்ட் தேவையில்லை. கீரை, பால், தயிர் ஒருநாள் கெடாம இருக்கும். காய்கறிகள் மூன்று நாள் பசுமை மாறாம இருக்கும். இட்லி, தோசை மாவு புளிக்காம மூன்று நாள் தாங்கும். வெற்றிலை மற்றும்



ஃப்ரிட்ஜ் மண்பானை!

கறிவேப்பிலை ஒரு வாரம் அப்படியே இருக்கும். இதுல வெச்சு எடுத்து உணவுக்குப் பயன்படுத்துற பொருட்களால, உடலுக்கு எந்தக் கெடுதியும் கெடையாது!'' என்கிறார் காரைக்கால் முப்பைத்தங்குடி கிராமத்தின் பி. வசந்தா.

''மின்சாரம் தேவையில்லை என்பது இதனுடைய முக்கியமான ப்ளஸ் பாயின்ட். மிகவும் எளிமையானது. சுகாதாரமானது. ஒரு ஜனதா குளிர்பதன மண் பானை




* லதா

அறுநூறு ரூபாய்க்குக் கிடைக்கிறது. அதிகப் பொருட்கள் வைக்க வேண்டுவோர், இரண்டு குளிர் பதன மண் பானை வாங்கிக் கொள்ளலாம். ஏழைகளுக்கு என்றில்லை, எல்லோர்க்கும் ஆனது இந்த ஜனதா குளிர் பதன மண் பானை!'' எனக் கூறுகிறார் லதா.

செய்தியும், சித்திரங்களும்:

ஸ்ரீரங்கம் திருநாவு



“ஹாய்...
செல்



'ஹாய் ஹாய் செல்லம்ஸ்' என்று ஹாயாக, செல்லம்மாள் கல்லூரிப் பக்கம் நாம் சென்றபோது, சீரான சிரிப்புடன் சிறப்பாக வரவேற்றனர்...

''சொல்லுங்க செல்லங்களா உங்களுக்குக் கல்லூரியிலேயே யாரை ரொம்பப் பிடிக்கும்?'' என கேட்டதும், ''சொல்லிடலாமா... சொல்லிடலாமா என கேட்டுக்கொண்டே, எங்க ஒட்டுமொத்த வோட்டும் மோஹனா மாம்க்குத்தான்'' என்றனர். இந்தச் சந்தோஷ மழையில் நனைந்தபடி வந்து நின்று ஃபோட்டோவுக்கு ஒரு போஸ் கொடுத்துவிட்டுச் சென்றார் எக்னாமிக்ஸ் பேராசிரியை மோஹனா.

''நாங்க எவ்வளவு லூட்டி அடிச்சாலும், அவங்க எங்களைத் திட்டவே மாட்டாங்க. இவங்க கிளாஸுக்கு நாங்க போய் உட்கார்ந்துக்கும்போது, ஏதோ பிக்னிக் போற ஃபீலிங்ஸ்ல இருப்போம். அப்படி ஒரு ஜாலியோ ஜாலி'' என கோரிஸைத்தார்கள் ஹேமா, மாலதி, உமா, மைதிலி மற்றும் ஷாந்தி தேவி குழுவினர்.

''ஹாய்... சின்னக் குயில் கூவிக்கிட்டே வருது பார்'' என அவர்கள் காட்டிய திசையில் சிரித்தபடி வந்து நின்றார் ஷ்யாமளா, 'செல்லம்மாளின் சின்னக் குயில்.' ''இவ பாடாத பாட்டு இல்ல... ஏறாத மேடை இல்ல'' என புகழுரைத்த சரண்யாவைத் தொடர்ந்து, ''போன வாரம் அப்படித்தாங்க, இவ மேடைல ஏறி, 'நாக்கு முக்க'ன்னு பாட

ஆரம்பிக்கக் கூட்டத்தோட கூட்டமா கேட்டுக்கிட்டு இருந்த கரப்பாம்பூச்சி ரெண்டு, டபால்ன்னு செத்துப் போச்சு... ஏன்னு சொல்லுங்க பார்ப்போம்'' என ஒரு பரிதாப



பார்வையோடு கேள்விக்கணையை வீசினார் கனிமொழி, ''ஏன்னா அதுதான் 'ஹிட்' பாட்டாச்சேன்னு'' அவரே பதில் சொல்ல ''அட்றாட்றா'' என எல்லாருமாகச் சேர்ந்து நாக்க மொக்கினார்கள்.

''ஹரிஹரன், ஷங்கர் மஹாதேவன், எஸ்.பி.பி., சுஜாதா, மாலதி லக்ஷ்மண் என பலரோடவும் சேர்ந்து பாடியிருக்கேனாக்கும். பல டீ.வி. சானல் ஷோஸ்லேயும் பாடியிருக்கேன்'' என இனிமையாகப் பேசினார் ஷ்யாமளாதேவி.

''இங்க வாடா; இங்க வா... நீங்க போய் மெரீனா பிச்ச க்ளீன் பண்ண மேட்டர எல்லாம் எடுத்து விடுடா'' என ஷ்யாமளா யாரையோ 'டா' போட்டுக் கூப்பிட, ''இது என்ன செல்லம்மாள் எப்போ கோ எட்டாக மாறியது'' என நாம் முழிக்க, ''நாங்க ஒருத்தருக்கு ஒருத்தர் வாடா, போடான்னுதான் கூப்பிட்டுப்போம்'' என்று விளக்கவுரை அளித்தார் கல்லூரியின் சேர்மென் சீதா. ''அட ஆமாங்க, நாங்க ஒரு 150 கல்லூரி பெண்கள் மொத்தமா ஒன்னுசேர்ந்து மெரீனா பீச்சை அழகுபடுத்தினோம். மெரீனா அழகா இருக்குன்னா அதுக்குக் காரணமே நாங்கதான். அங்கங்க கிடந்த பிளாஸ்டிக் குப்பைகளைத் தூக்கிப் போட்டு சும்மா பூந்து மெரீனா மணல்ல விளையாடிட்டோம்ல'' என்றார், ''ஏய் அந்த காந்தி மேட்டர் அத விட்டுட்டியேப்பா'' என ஒரு தோழி நினைவுறுத்த, ''ஆமாமா மாசம் மாசம் கடைசி வெள்ளிக்கிழமை, எங்கள காந்தி மண்டபத்துல பார்க்கலாம். காந்திக்கு அங்க போய்த்தான் அஞ்சலி செலுத்தறோம்'' என்றார்.

''நாங்க சூடிதார் போட்ட கண்ணகிகள். எந்த வம்பு தும்புக்கும் போகவே மாட்டோம். எதுவாயிருந்தாலும் பேசியே தீர்த்துப்போம். இப்படி ஏகப்பட்ட ப்ளஸ் பாயிண்டுகளை உள்ளடக்கியது எங்க காலேஜ்'' என பட்பட்டென உற்சாகப் பட்டியலிட்டவர்களுக்கு ஒரு ப்ரியமான பிரியாவிடை கொடுத்துவிட்டு வந்தோம்.

- நளினி சம்பத்குமார்

படங்கள் : **குமார்**

த.கி.நீலகண்டன்

விஷாபஹரணர்

தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து, பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுக்க முனைந்த கதை எல்லோருக்கும் தெரிந்த கதை. பாற்கடலில் இருந்து கிடைத்த ஐஸ்வர்யங்கள் எவை என்று தெரியுமா? ஐராவதம் என்று பெயர் கொண்ட வெள்ளை யானை, உச்சைசிரவம் என்று பெயர் கொண்ட பறக்கும் குதிரை, கேட்டதைக் கொடுக்கும் பசுவான காமதேனு, நினைத்ததை வழங்கும் கற்பக மரம், ஒளிவெள்ளம் பாய்ச்சும் கௌஸ்துப மணி, அழகும் பொலிவும் மிக்க அரம்பையர்கள், தண்ணொளி வழங்கும் சந்திரன், அஷ்ட ஐஸ்வர்யங்களையும் தன் இருப்பிடமாகக் கொண்ட மகாலக்ஷ்மி, சர்வரோக நிவாரணமூர்த்தியான தன்வந்திரி என்னும் மருத்துவர், இறவாத் தன்மையை அருளும் அமுதம்... ஆகியவை இதில் இந்திரன் அடைந்த பங்கு அதிகம். ஐராவதம், உச்சைச்சிரவம், கற்பகத்தரு, காமதேனு, அரம்பையர்கள் ஆகிய அனைத்தையும் இந்திரன் அடைந்தான். மகாலக்ஷ்மியும் கௌஸ்துபமணியும் திருமாலின் மார்பை அலங்கரித்தனர். இறவாத்தன்மை தரும் அமுதத்தை, மகாவிஷ்ணு மோகினி வடிவம் எடுத்து தேவர்களுக்குப் பகிர்ந்தளித்தார். ஆனால், இந்த ஐஸ்வர்யங்களை எல்லாம் முந்திக்கொண்டு பாற்கடலில் எழுந்தது ஆலகாலம் என்னும் கொடிய விஷமே! நல்லதைப் பங்குபோட்டுக் கொள்ள 'நான் நீ' என்று போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள்.

தீயதைப் பங்குபோட்டுக் கொள்ள யார்தான் முன்வருவார்? ஆலகாலவிஷம் தோன்றியதும், அதன் வீச்சைத் தாங்க மாட்டாமல் எல்லோரும் பாற்கடலைக் கடைவதை விட்டுவிட்டுத் தலைதெறிக்க நாலாபுறமும் சிதறி ஓடினார்களாம்! அந்த விஷத்தின் வெம்மையினால்தான் திருமாலின் மேனியே கரிந்து போயிற்றாம். எல்லோரும் போய் சிவபெருமானிடம் தஞ்சம் புகுந்தார்கள். அவர் தம் அணுக்கத் தொண்டரான சுந்தரரை அனுப்பி விஷத்தையெல்லாம் திரட்டி எடுத்து வரச் சொன்னார். தயிர் கடையும்போது திரளும் வெண்ணெயை உருட்டி எடுப்பது போல, அவரும் விஷத்தையெல்லாம்





திரட்டி ஒரு பெரிய நாவற்பழ அளவுக்கு உருட்டி பெருமானிடம் கொண்டு தந்தார். தேவர்களையும் அசுரர்களையும் காக்கத் திருவுளம் கொண்ட பெருமான், அந்த விஷத்தை ஏற்று விழுங்கி விட்டார்!

இந்த அண்டத்து உயிர்கள் எல்லாம் பெருமானின் திருவயிற்றுக்குள் அடக்கம் என்பதால், பெருமான் விழுங்கிய விஷம் அந்த உயிர்த்திரளை வாட்டி அழிக்காதிருக்க, அம்பிகை ஓடிவந்து பெருமானின் கழுத்தைப் பிடித்தார் என்றும், அதனால் விஷம் அவரது கழுத்திலேயே தங்கிவிட்டதாகவும் புராணம் கூறுகிறது.

நல்லதைப் பிறருக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, தீயதைத் தமதாக்கிக் கொண்டவர் இந்த விடமுண்ட கண்டன்!

பெருமான் விஷமருந்திய இந்த புராண வரலாறு மக்களிடையே பெரு வியப்பைத் தோற்றுவித்த ஒரு நிகழ்ச்சி. கவிஞர்கள் இந்தப் பரபரப்பான நிகழ்ச்சியைப் பாட்டிலே எழுதி வைத்தார்கள்; மகான்கள் தாங்கள் செய்த ஸ்தோத்திரங்களில் இந்தச் சம்பவத்தைப் பெரிதும் போற்றினார்கள்; வாக்கேயக்காரர்கள் தாங்கள் இயற்றிய இசை, உருப்படிகளில் இந்தக் கதையை விரிவாக வர்ணனை செய்தார்கள்; கலைஞர்கள் தங்கள் பங்குக்கு இதை ஓவியமாகவும் சிற்பமாகவும் சிலையாகவும் வடித்து வைத்தார்கள்.

பெருமான் விஷமருந்திய கோலத்தைச் சித்திரிக்கும் வித்தியாசமான செப்புப் படிவம் ஒன்று சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் இருக்கிறது. மிகத் தொன்மையான செப்புப் படிமம் இது. கி.பி. பத்தாம் நூற்றாண்டில் இது வடிக்கப்பட்டிருக்கலாம் என்று அருங்காட்சியகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. படிமக் கலையின் பரிணாம வளர்ச்சியை ஆராயும் அறிஞர்கள் இந்த அபூர்வமான செப்புச் சிலையை ஆதாரமாகக் கொண்டு மற்ற சிலைகளை ஆராய்ந்திருக்கிறார்கள்.

'விஷாபஹரணர்' என்று வழங்கப் பெறும் இந்த வடிவத்தில், பெருமான் சதுரமான உயர்ந்த பீடத்தில் இடதுகாலை மடித்து வலது காலைத் தொங்க விட்டவாறு கம்பீரமாக அமர்ந்த கோலத்தில் காட்சி அளிக்கிறார். மேல் இரண்டு கரங்களில் மானும் மழுவும் விளங்குகின்றன. இடதுகீழ்க்கரத்தில் 'புஸ்'ஸென்று சீறிப் படம் எடுத்தாடும் ஒரு பாம்பைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறார். வலதுகரத்தின் உள்ளங்கையில் விஷத்தைத் திரட்டி உருட்டி விழுங்கத் தயாராக வைத்திருக்கிறார். விறைப்பான முதுகுத்தண்டும், நிமிர்ந்து விரிந்து பரந்த மார்பும், திரண்ட தோள்களும், எடுப்பான நீள்வட்ட முகமும்,

தீர்க்கமான நாசியும், தியானத்தில் ஆழ்ந்தது போன்ற கண்களும் பெருமானது மனவுறுதியைக் காட்டுகின்றன. வழக்கமான புன்முறுவலை இதழ்களில் காணோம். அவற்றில் இறுக்கமே புலப்படுகிறது. பரபரப்பான சூழ்நிலைக்கு ஏற்றவாறு உள்ள முகத்தோற்றம்!

அழகிய ஜடாமகுடம் சிரசை அலங்கரிக்கிறது. அதில் ஒருபுறம் ஊமத்தைப் பூவையும் மறுபுறம் சந்திர கலையையும் தரித்திருக்கிறார். கேயூரம் என்னும் ஆபரணம் மகுடத்தையும் தோள்களையும் அலங்கரிக்கிறது. கைகளில் வலயங்கள், கால்களில் தண்டை, நேர்த்தியான கலையழகு பொருந்திய உதரபந்தனம் ஆகியவை தரித்து, மார்பில் முப்புரிநூல் விளங்க வீற்றிருக்கும் அழகிய கலைவடிவம் இது. இவரது பின்னழகும் அதீத கலையுணர்வுடன் அமைந்துள்ளது. சடையில் இருந்து சுருள் சுருளாக அலைபிரிந்து தோளிலும் முதுகிலும் படர்ந்திருக்கும் கேசம்; ஜடாமகுடத்தின் பின்புறத்தில் உள்ள 'சிரஸ் சக்கரம்' என்னும் ஆபரணம் என்று மிகுந்த அக்கறையும் பொறுமையும் உள்ள கலைஞனின் கைவண்ணம் இவ்வடிவத்தில் பொலிகிறது!



ஒரு கிண்ணத்தில் விஷத்தை ஏந்திக் குடிக்கும் கோலத்தில் வடநாட்டுப்பாணி ஓவியங்களைப் பார்த்திருக்கிறோம். விஷத்தை உண்டு மயங்கிய நிலையில் கிடந்த கோலமாக சுதை வடிவம் ஒன்று, சுருட்டப்பள்ளியில் இருப்பதும் பலருக்குத் தெரியும். நீலகண்டேசுவரர் என்ற திருநாமத்துடன் விளங்கும் தலங்களும் பல உண்டு. ஆனால் 'விஷாபஹரணர்' (விஷ அபஹரணரர்) என்ற பெயர் கொண்ட இந்த வடிவம் எந்தக் கோயிலிலும் இன்று காணக்கிடைப்பதாகத் தெரியவில்லை!

நல்லதைப் பிறருக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, தீயதைத் தமதாக்கிக் கொண்டவர் இந்த விடமுண்ட கண்டன்!

(பெருகும்)

ஹீரோ இமேஜ் தகர்ந்து, வில்லன் ரேஞ்சுக்கு மாட்டிக் கொண்டு தவிக்கிறார், பாப் இசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன்.

'ஆளை விடுங்கப்பா' என்று, குழந்தைகளோடு லாஸ் வேகாஸ் நகரில் ஒரு வீடு பிடித்துத் தங்கி விட்டார் ஜாக்சன்.

கொடுமை கொடுமையென்று கோயிலுக்குப் போனால், அங்கேயும் கொடுமை வந்து டான்ஸ் ஆடி வரவேற்ற கதைதான்.



✱ பிரிட்னி ஸ்பியர்ஸ்...

அவர் தங்கியிருக்கும் வீட்டுக்கு எதிரே குழந்தைகள் பள்ளிக்கூடம்.

மைக்கேல் ஜாக்சனின் மீது, ஏற்கெனவே இருந்த வழக்குகள் பெற்றோர்களின் ஞாபகத்தில் வந்து தொலைக்க, எல்லோருமாய் சேர்ந்து, ஜாக்சனுக்கு 'பேக்-அப்' சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.

நகைச்சுவை என்ற பெயரில் சகலத்தையும் கிண்டலடிப்பவர்கள், கொஞ்சம் கவனமாகத்தான் இருக்க வேண்டும்.

எம்.டி.வி. நடத்திய விருது வழங்கும் விழாவில் 'ஹாலிவுட்டின் விவேக்' ரஸ்ஸல் ப்ராண்ட் உற்சாகம் பொங்க, அதிபர் புஷ்ஷை 'கௌபாய்' என்றும், பிரிட்னி ஸ்பியர்ஸை 'பெண் ஏசுகிறிஸ்து' என்றும் செல்லமாய்ச் சீண்டினார்.

சும்மா விடுவார்களா என்ன?

உடனே கொலை மிரட்டல்.

ஆனால் அதற்கெல்லாம் கலங்கி விடுபவரா ரஸ்ஸல் ப்ராண்ட்?

'நீங்கள் யாரையாவது கொல்ல வேண்டுமென்றால் முன்கூட்டியே சொல்லாதீர்கள். அவர்கள் உஷாராகி விடுவார்கள்' என்று பதில் சொல்லியிருக்கிறார்.

நம்ம ஊர் குஷ்புவுக்கெல்லாம் அண்ணனாய் இருப்பார் போலிருக்கிறது...

சிலருக்குச் சில விஷயங்கள் மட்டும் எப்போதுமே நினைவில் நிற்காது. இந்த 'செலக்டிவ் அம்னீஷியா'வை, கஷ்டப்பட்டுச் சமாளித்து விடலாம். ஆனால், மறந்தே ஆகவேண்டிய சில விஷயங்கள் மூளையின் ஞாபகக்கிடங்கில் புகுந்து கொண்டு, போகவே மாட்டேன் என்று அடம்பிடித்தால் என்ன செய்வது?

பட்ட அவமானங்கள், அனுபவித்த துயரங்கள், அச்சமூட்டும் முகங்கள் இவையெல்லாம் அடிக்கடி நினைவில் வந்து கொண்டேயிருந்

தால்...

கவலைப்படாதீர்கள்!


ஜியார்ஜியா மருத்துவக் கல்லூரியின் 'மூளையின் செயல்பாடுகளைக் கண்டறியும் நிறுவனத்'தில் மோசமான நினைவுகளை மூளையிலிருந்து அகற்றும் புதிய வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மனித மூளையின் நினைவுத் திறனில் முக்கியப் பங்காற்றும் CAMK-II என்ற புரதத்தை மூளையில் செலுத்தி, அச்சமூட்டும் நினைவுகளை ஓட ஓட விரட்டியடிக்க முடியும் என்று உறுதி கூறுகிறார் இந்த ஆராய்ச்சிக் குழுவின் தலைவரான ஜோ ட்சியேன்.

அப்படியே வாழ்வின் மகிழ்ச்சியான தருணங்கள் அடிக்கடி நினைவில் வருவதற்கும், ஏதாவது புது டெக்னாலஜியைக் கண்டுபிடித்தால் ரொம்ப நல்லது.



✱ ஜாக்சன்



✱ புஷ்



✱ ஞானேந்திரா

ஞானேந்திராவுக்கு கரண்ட் கட்!

உலகின் எந்த 'முன்னாள்' ஆட்சியாளருக்கும் நிகழாத அத்தனை கொடுமைகளையும் ஒன்றாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார், நேபாளத்தின் முன்னாள் மன்னர் ஞானேந்திரா.

2005ல் அவர் அதிகாரம் இழந்த பிறகு இன்றுவரை, அவரும் அவரது உறவினர்களும் பயன்படுத்திய மின்சாரத்துக்கான கட்டணத்தை உடனே செலுத்துமாறு உத்தரவிட்டிருக்கிறது நேபாளத்தின் மின்சாரத் துறை.

கால அவகாசம் பதினைந்து நாட்கள். கட்டத் தவறினால் லைன்மேன் வந்து ஃப்யூஸைப் பிடுங்கிக்கொண்டு போய் விடுவாராம்.

ஏற்கெனவேதான் ஃப்யூஸ்கேரியரைப் பிடுங்கியாகிவிட்டதே. இன்னமுமா?

– ஸாந்த்

அதிர்ஷ்டகவசம்!

ஆச்சரியத்தினால் பிரமித்துப் போய்விட்டேன். தலை கிறுகிறுவென்று சுழன்றது. மெதுவாகச் சமாளித்துக் கொண்டு மறுபடியும் உற்றுப் பார்த்தேன். இராமசாமிதான், சந்தேகமில்லை. எனக்கு மண்டை வெடித்துவிடும் போலிருந்தது.

சென்னை கடற்கரைச் சாலையில் வழக்கம்போல சாலையோரமாக வரிசையாய் மோட்டார் வண்டிகள் நின்றுகொண்டிருந்தன. சாதாரணமாக நான் அவ் வண்டிகளைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. ஆனால், இன்று தற்செயலாக அந்த வண்டிகளில் ஒன்றினுள்ளே என் பார்வை சென்றது. அங்கு இருந்தது யார் என்று நினைக்கிறீர்கள்? என் பழைய நண்பன் இராமசாமிதான்!



மன்னிக்க வேண்டும். என் பழைய நண்பன் இராமசாமியை மோட்டாரில் கண்டதில் என்ன அதிசயம் என்று உங்களுக்குத் தெரிந்திருக்க முடியாதல்லவா?

அவனுடைய நடை, உடை, பாவனைகள் அவ்வாறு இருந்தன. காதில் டால் வீசிய வைரக் கடுக்கன் ஜோடி இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறைவில்லை. 'நேவி புளூ' சட்டை மட்டும் அறுபது ரூபாயிருக்கும். இவற்றுக்கேற்ப மற்றவையும். என்ன விந்தை! முகத்தில் களைகூட அல்லவா மாறிவிட்டது? கடைசியாக, நான் அவனைப் பார்த்தபோது முகத்திலே தரித்திரதேவி தாண்டவமாடிக் கொண்டிருந்தாள். ஒரு 'கப்' காப்பிக்கென்று என்னிடம் ஒன்றே காலணா கடன் வாங்கிக்கொண்டு போனான். இப்போது அவன் முகத்திலே அதிர்ஷ்டலக்ஷ்மி.

''அடே ராமு! கடைசியில் உனக்கு அதிர்ஷ்டம் அடித்துவிட்டதா என்ன?'' என்று கேட்டேன்.

''ஆமாண்டா கிட்டு! அதிர்ஷ்டமென்றால் சாமான்ய அதிர்ஷ்டமன்று. பெரும் புயற்காற்றைப் போல் அடித்துவிட்டது!'' என்றான்.

''உன்னைப் பார்த்தால் அப்படித்தான் காண்கிறது. ஆனால், நீ உண்மையிலேயே நீதானா? இல்லை வேறு யாராவதா? நிஜத்தைச் சொல்'' என்றேன்.

''சந்தேகமேயில்லை. நான் நானேதான். இது என்னுடைய சொந்த மோட்டார் வண்டிதான். 9,000

ரூபாய் கொடுத்து வாங்கினேன். மயிலாப்பூரில் 60,000 ரூபாய்க்குப் பங்களாவும் 2 லட்சம் ரூபாய் ரொக்கமும் இருக்கிறது.''

''கொஞ்சம் பொறு; கொஞ்சம் பொறு. சற்றே என் மூளை சரியான நிலைமைக்கு வரட்டும்'' என்று சொல்லி, என் நெற்றியை இரண்டு முறை பிடித்து விட்டேன். பிறகு சிறிது நிதானித்து, ''ஆமாம், உனக்கெப்படித்தான் அதிர்ஷ்டம் வந்தது? புதையல் கிதையல் எடுத்தாயா? இரகசியம் எதுவுமில்லாவிடில் சொல்லு'' என்றேன்.

நல்லது. இந்தச் சந்தர்ப்பத்தில் இராமசாமியின் பழைய கதையைப் பற்றி உங்களுக்குச் சிறிது கூற வேண்டும். நானும் இராமசாமியும் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். அந்த நாளிலிருந்து அவனுக்கு 'துரதிர்ஷ்ட ராமு' என்ற பட்டப் பெயர் வழங்கலாயிற்று. ஐந்தாவது வகுப்பில் என்னுடன் சேர்ந்து படித்த அவன், நான் பி.ஏ. பரீட்சையில் தேறிய போது, ஸ்கூல் ஃபைனல் பரீட்சைக்கு மூன்றாவது தடவையாகப் போனான்.

ராமுவிடம் ஒரு பெரிய விசேஷமென்னவென்றால், எவ்வளவுதான் தோல்வியுற்றாலும் அவன் உற்சாகம் மட்டும் குன்றுவதில்லை.

1921-ம் வருஷத்தில் சீமை ஜவுளி வியாபாரம் தொடங்கினான். எல்லாரும் அப்போது பித்துப் பிடித்தவர்கள் போல துணிகளைக் கொளுத்தி வந்தார்கள். நான்கூட அந்த வருஷத்தில், மூன்றே வருஷம் உபயோகப்படுத்திய புத்தம்புதிய கினாஸ் கோமல் ஒன்றை நெருப்பில் போடவில்லையா? இந்தச் சூழலில் சீமைத் துணியை யார் வாங்கப் போகிறார்கள்? ஆகவே, வருஷக் கடைசியில் கணக்குப் பார்த்தபோது 1,200 ரூபாய் நஷ்டமாகியிருந்தது. பிறகு கொஞ்ச காலம் ராமுவைக் காணவேயில்லை.

ஆறு மாதத்துக்குப் பிறகு மறுபடியும் அவன் செய்த யோசனை, கட்டாயம் அவனுக்கு அதிர்ஷ்டம் கொண்டு வரப் போகிறதென்று நான்கூட நினைத்துவிட்டேன்.

இங்கிருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள அல்லிப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த ஏரியில் ஒரு பெரும் பகுதியை அவன் விலைக்கு வாங்கினான், அவனுடைய மனைவியின் பெயரால் இருந்த கொஞ்சம் சொத்தை விற்று. சென்னைப் பட்டினத்திலேயே மத்திய



வகுப்பைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் குடியிருக்க இடமில்லாமல் மிகவும் திண்டாடுகிறார்களென்றும், நாளடைவில் ஜனங்கள் பட்டணத்துக்குச் சுற்றுப் புறங்களிலே வீடு கட்டிக் கொண்டு வசிக்கத் தொடங்குவார்களென்றும் அவன் எதிர்பார்த்து இந்தக் காரியம் செய்தான். அவன் எதிர்பார்த்தபடிதான் நடந்தது. ஆனால், அதிர்ஷ்டந்தான் மறுபடியும் குறுக்கே நின்றது. எப்படியோ மாம்பலத்தின் மீது எல்லாருக்கும் மோகம் விழுந்து விடவே, அல்லிப்பாக்கத்தைத் திரும்பிப் பார்ப்பார் இல்லை.

சென்னைப் பட்டினத்தில் மோட்டார் பஸ் விடும் யோசனை முதல்முதலில் ராமு மூளையில் உதயமாயிற்று. ஆனால், அவனைப் பிடித்த துரதிர்ஷ்டம் மட்டும் விடவில்லை. ராமுவைப் பார்த்து மோட்டார் பஸ் வாங்கி விட்டவர்கள் அந்தக் காலத்தில் பதினாயிரம், இருபதினாயிரம் சம்பாதித்துவிட்டார்கள். ஆனால், ராமுவின் மோட்டார் பஸ், வாங்கிய இரண்டாவது மாதத்திலேயே குடை கவிழ்ந்து, தான் உடைந்ததோடில்லாமல் ஒரு பெண் பிள்ளைக்கும் ஒரு குழந்தைக்கும் எமனாய் முடிந்தது. பின்னர் அந்த மூதேவியின் முகத்திலேயே விழிப்பதில்லை என்று ராமு தீர்மானித்துவிட்டேன்.

மேற்படி இழவுச் செய்தியை என்னிடம் சொல்லி விட்டுத்தான், பாவம் துரதிர்ஷ்ட ராமு ஒரு கப் காப்பிக்கென்று ஒன்றே காலணா வாங்கிக்கொண்டு போனான். அதை அவன் வழக்கம்போல் 'கடன்' என்று கேட்டானாயினும், அவனிடம் திரும்பி வாங்கிக் கொள்ளும் எண்ணமே எனக்கு இல்லை. அப்படிப் போனவன் சொந்த மோட்டார் வண்டியில் வந்து கடற்கரையில் காற்று வாங்கியதைக் கண்டபோது, நான் ஆரம்பித்த கதையை எந்த இடத்தில் விட்டேனென்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா? ஆமாம், 'அதிர்ஷ்டம் எந்த வழியாக வந்தது. புதையல் ஏதேனும் அகப்பட்டதா?' என்று ராமுவைக் கேட்டேன்.

''புதையலுமில்லை; ஒன்றுமில்லை. நான் சொன்னால் நம்ப மாட்டாய்!?'' என்றான் ராமு.

தன் உட்சட்டையின் பொத்தான்களை அவிழ்த்தான். கழுத்தில் ஒரு மெல்லிய கறுப்புக் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டிருந்த எண் கோண வடிவமான ஒரு வெள்ளித் தகட்டைக் காட்டினான். அதிலே ஏதோ எழுத்துக்கள் கிறுக்கப்பட்டிருந்தன.



''சார்...உங்க பையன் என் வேலைக்கு உலை வைச்சுடுவான் போலிருக்கே...''

''ஏன்...சார்...?''

''ஏற்காடு குளிரும்; 'ஆற்காடு' புழுங்கும்னு எழுதறான் சார்...''

- சி.பி.ஸ்ரீதர்



கதவுகளை அடை
கனத்த பூட்டால் பூட்டு
சாவியை மறை
சின்னத் துவாரங்கள்
வழியாய்
மீறிக் கசியும்
விடுதலை

-அன்பாதவன்



''இது என்ன?''

''இதுதான் மகாசக்தி அதிர்ஷ்ட கவசம்.''

''சரி, அப்புறம்?''

''இந்தக் கவசத்தின் மூலமாகத்தான் எனக்கு அதிர்ஷ்டம் வந்தது.''

நான் கொல்லென்று சிரித்தேன். ''கதை விடாதே!'' என்றேன்.

''பார்த்தாயா? நீ நம்ப மாட்டாய் என்று நான் சொன்னேனல்லவா? ஆயினும் உண்மை அதுதான்.''

''இதோ பார், ராமு. என்னைப் பைத்தியக்காரன் என்று எண்ணாதே. இந்தக் காலத்தில் இந்த மாதிரி 'உடான்'ஸை யார்தான் நம்புவார்கள்? உண்மையைச் சொல்.''

''சத்தியமாகச் சொல்கிறேன். இந்தக் கவசம்தான் எனக்கு அதிர்ஷ்டம் கொண்டு வந்தது.''

''எப்படி? எப்படி?''

''மகாசக்தி அதிர்ஷ்ட கவசத்தைப் பற்றி நீ ஏற்கெனவே கேள்விப்பட்டதே கிடையாதோ?''

''கேள்விப்படாமலென்ன? பத்திரிகையில் பெரிய பெரிய விளம்பரங்கள்கூடப் பார்த்திருக்கிறேன். ஆனால், மறுபடியும் பழைய கதைக்கே வருகிறாயே?''

''அவசரப்படாதே. அந்த மகாசக்தி அதிர்ஷ்ட கவசம்தான் நான் அணிந்திருப்பது. அதைச் செய்பவனும் நான்தான். மாதம் 5,000 கவசங்களுக்குக் குறையாமல் விற்கிறேன். பர்மா, சிங்கப்பூர், தென் அமெரிக்கா, கம்போடியா, செட்டால் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் என் கவசத்துக்கு ஆர்டர் வருகின்றது. விளம்பரச் செலவுகளெல்லாம் போக, மாதம் எனக்கு 4,000 ரூபாய் கிடைக்கிறது. கிட்டு! நீயும் ஒரு கவசம் வாங்கி இதன் சக்தியைச் சோதித்துப் பார்க்கலாமே? விலை இரண்டே ரூபாய்தான். ஒன்று வி.பி.பி.யில் அனுப்பி வைக்கட்டுமா?'' என்று சொல்லிக்கொண்டே, ராமு மோட்டாரைச் செலுத்தத் தொடங்கினான்.

அதிர்ஷ்டம் அடித்தாலும் இப்படியல்லவா அடிக்க வேண்டும்?

- ஆனந்த விகடன்,
13.04.1929

"மின்துறை அமைச்சர் வாழ்க'ன்னு பேனர் எல்லாம் கட்டி கோஷம் போட்டுக்கிட்டுப் போறாங்களே. அதெல்லாம் யாரு?"

"ஜெனரேட்டர், யூ.பி.எஸ் கடை வைச்சிருக்கிறவங்கதான்...!"

- சீர்காழி வி.ரேவதி





"உடம்பு இளைக்க நாங்க என்ன பண்ணணும்?"

"தினமும் ஒருத்தரை ஒருத்தர் பத்துத் தடவை சுத்தி வாங்க போதும்."

- சாயம் வெ. ராஜாராமன்

பொன்



"அந்தக் காலத்துல படங்கள் 'பிச்சுக்கிட்டு' ஓடும். இப்ப அப்படி இல்லையே என்?"

"அந்தக் காலத்துல ஓலை கொட்டகை இருந்திச்சு! இப்ப இல்லை. அதான் காரணம்!"

- தூத்துக்குடி வி.சகிதா முருகன்

விளைந்த மூளை



"பொட்டல் திடலா கிடந்த இந்த நிலத்தை என் மூளையைப் பயன்படுத்தி பொன் விளையும் பூமியா மாத்தியிருக்கேன் பாருங்க!"

"இந்த மண்ணைப் பாராட்டறதா... உங்க மூளையைப் பாராட்டறதான்னு தெரியலை போங்க!"

- சீர்காழி வி. ரேவதி



"திருடன் அமெச்சூர்னு எப்படிச் சொல்றே?"

"துப்பாக்கியைக் காட்டி குத்திடு வேன்னு சொல்றானே...!"

- நெ. இராமன்



"எந்த சீரியல் பார்த்தாலும் என் கணவர் கலங்க மாட் டார்...!"

"அடடே... ஆச்சரியமா இருக்கே?"

"ஆனா எங்க கல்யாண கேசட்டைப் பார்த்தா தேம்பித் தேம்பி அழுதுடுவாரு...!"

- நெ. இராமன்

இண்டர்வியூ

இண்டர்வியூவுக்கு வந்தவர்களில் யாரை செலக்ட் பண்ணுவது? என்று ரொம்பத்தான் குழம்பிப்போனார், அந்த கம்பெனியின் எம்.டி. ராமனாதன்.

பின்னே? இண்டர்வியூவுக்கு வந்த இருபது பேர்களும் எந்தக் குறைபாடுமின்றி, நன்றாகவே இண்டர்வியூ செய்தார்கள். கேள்வியை எப்படி மாற்றிக் கேட்டாலும், பதில் வந்தது. ஒரே ஓர் இடம்தான் இருக்கு. எந்தக் காரணத்தை வெச்சு, பத்தொன்பது பேரைக் கழிச்சுக் கட்டுவது? சட்டென்று மின்னல் வெட்டியதைப் போல, ஓர் ஐடியா வந்தது.

இண்டர்காமில் ரகசியமாகக் கூப்பிட்டு, மெயின் ஸ்விட்ச்சை 'ஆஃப்' செய்யச் சொன்னார். அந்த ஏ.ஸி. ஹாலில் வியர்த்து. வியர்த்துப்போன இருபது பேரில் ஒவ்வொருவராக வெளியில் செல்லத் தொடங்கினர். ஒரே ஓர் இளைஞன் மட்டும், ஏ.ஸி. ஹாலின் கதவு, ஜன்னல்களை காற்றோட்டமாக இருக்கும் வகையில் திறந்துவிட்டு, அங்கேயே அமர்ந்திருந்தான்.

இவனைப் போன்ற பொறுமைசாலிதான் வேண்டும் என்று ராமனாதன் முடிவு செய்தான். ○

சிலந்தி



நிழல் ஓவியம் பத்திரிகையிலிருந்து இன்றும் எனது கதை திரும்பி வந்தது. அவமானம், நண்பர்கள் மத்தியிலும், மனைவியிடமும். போஸ்டல் டிபார்ட்மெண்ட் "உன்னாலதான் ஊருக்குள்ளயே இருக்குது என்றார்கள்.

மின்னல்

குறுவை ஆர்.தேவிகா

எழுதுவதை விட்டுவிடலாமோ என எண்ணியபோது, கூரை வீட்டின் தாழ்வாரத்தில் சிலந்தி ஒன்று வலை பின்னியது. திடீரென காற்று அடிக்கவும், வலை அறுந்தது. காற்று நின்றவுடன் மீண்டும் வலை பின்னத் தொடங்கியது. மீண்டும், காற்று வலை அறுந்தது. காற்று தொடர்ந்து அடிக்கவும் வலை பின்னல் நின்றது. சரி... இனிமே வலை பின்னாது என நான் நினைத்தபோது, காற்று நின்றவுடன் வலை பின்னல் முயற்சியைத் தொடர்ந்தது. காற்று வரும் என எதிர்பார்த்தேன். வரவில்லை; இப்போது முழு வலையையும் பின்னி முடித்தது. வலைக்குள் பூச்சி வந்து மாட்டியதும் பிடித்துச் சாப்பிட்டது. எனது மண்டையில் பளீரென பல்பு எரிந்தது. உற்சாகத்தோடு பேனாவையும் பேப்பரையும் எடுத்தேன். ○



து.சுஹைல் ரஹ்மான்

கோபியின் வீட்டில்...

''என்னை ஸின்சியரா லவ் பண்றேன்னு சொல்ல உனக்கு எப்படி மனசு வந்தது லதா? நீ என் நண்பன் கோபிக்கு மட்டுமல்ல; எனக்கும் தங்கை போலத்தான். உன் மனசுல இதுபோல எண்ணம் வந்ததற்காக நான் வருத்தப்படறேன். கோபிக்கு இந்த விஷயம் தெரிஞ்சா ரொம்ப வருத்தப்படுவான்... இதற்கு மேல நான் இங்கே வரமாட்டேன்'' என்றபடி சரவணன் கிளம்பவும், லதா தவறை உணர்ந்தவளாய் அழுதபடி நின்றாள்.

இதையெல்லாம் மறைந்து கேட்டபடி நின்ற கோபியோ, 'நல்ல நண்பர்களை காதல் ஆசையால் நாம இழந்துட்டோமே லதா...' என தனக்குள் அழுதபடியே கூறிக்கொண்டான். ○

வெ.ராம்குமார்

கதைகள்



''ஸாரி கோபி! நீங்க இதுபோல உங்க மனசுல நஞ்சை வைச்சுக்கிட்டு என்கூட பழகியிருக்கீங்கன்றதை நினைச்சாலே வருத்தமாயிருக்கு. நீங்க என் அண்ணாவுக்கு எப்படி நண்பரோ, அதுபோலத்தான் எனக்கும். உங்களுக்கு வேணுமின்னா, நம்பிக்கைத் துரோகம் செய்ய மனசு வரலாம்; எனக்கு வராது. ஸோ, உங்களை காதலிக்க முடியாது. இதற்கு மேலும் இங்கே வராதீங்க...''

ரேவதியின் கோபப் பேச்சில் அதிர்ந்து போய், பதில் பேசமுடியாமல், தலை கவிழ்ந்தவாறு திரும்பினான் கோபி.

நட்பா... காதலா..?



உடையழகு... நடையழகு...

டிஜிட்டல் புடைவைகள்!

தீபாவளிக்கு மட்டுமல்ல. அதற்குப் பிறகும் இருக்கும் தீபாவளி ஷாப்பிங்...

என்ன மாதிரி புடைவைக்கு பெண்கள் ஆசைப் படுகிறார்கள், பெண்களின் டிமாண்ட் என்ன என்று ஆராய நாம் போனது சென்னை சில்க்ஸ். ரகரகமான புடைவைகள். ஃபேன்ஸி, பட்டு, சில்க், காட்டன், ஷிஃபான்... என புடைவைக் குவியல்கள்...

''இந்த முறை புதுகப் புதுசா பல டிசைன்கள் அறிமுகப்படுத்தியிருக்கோம். பிளாட்டினம் புடைவைகள், லைட் வெய்ட், டிஜிட்டல் பிரிண்ட் புடைவைகள், பிரிண்ட் ஃபாயில் புடைவைகள், சைனா லேஸ் புடைவைகள்... என ஏக வெரைட்டி. சில்க் சேலைகளில் உப்படா, ஜாம்தானி என ரிச் டிசைன் கொண்டு வந்திருக்கிறோம். சண்டிகர் ஸ்பெஷலான 'ஜீச்சா ஸாரீஸ்' ஸ்மூத்தா, லைட் வெயிட்டில் இருக்கும். ஜூட் மெட்டிரியலில் புடைவை. பார்க்க ரஃப் ஃபினிஷிங் இருக்கும். ஆனால், கட்டிக் கொண்டால் இதம்!''

மேற்கூறிய

புடைவைகளின் விலை சுமார் நாலாயிரத்திலிருந்து முப்பதாயிரம் வரை.

இருந்தாலும் மத்திய வர்க்க பெண்களுக்கெனவே, கண்ணைக் கவரும் புடைவைகளான 'சிருங்கா', 'ரித்து உல்லாஸ்' என இரண்டு புது டிசைன்களை சென்னை சில்க்ஸ் அறிமுகப்படுத்தியிருக்கிறது. ரூ.295லிருந்து ரூ.495. வரையிலான இப்புடைவைகள் விற்பனையில் சாதனை படைத்து வருகின்றன. எக்கச்சக்க டிமாண்ட்!

கல்லூரிப் பெண்களுக்கான சல்வார் கமீஸில் அனார்கலி குர்தாவும் பட்டியாலா சல்வாரும் செம ஸேல்ஸ்! ஆயிரம் ரூபாயிலிருந்து கிடைக்கும் அனார்கலிக்கு இளம்பெண்களின் பேராதரவு!

''இந்த முறை பர்ப்பிள், ஃபேண்டா ஆரஞ்சு, கறுப்பு இந்த மூணு கலரும் யூத் ரொம்ப விரும்பி வாங்கறாங்க. கறுப்புக்கு இத்தனை டிமாண்ட் இருக்கும்னு நாங்களே எதிர்பார்க்கவில்லை. ரசனை, டேஸ்ட் எல்லாமே மாறிட்டு வருது. அவங்க விரும்பறதைக் கொடுக்கறதுதானே எங்களுக்கு சாலஞ்ச்'' என்கின்றனர் சென்னை சில்க்ஸ் விற்பனை அதிகாரிகள்.

ஒவ்வொரு முறை ஃபேஷனில் வரும் புடைவைகளை, கலர்களைத் தாங்களும் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டும் என நினைக்கும் பெண்கள் ஒரு பக்கம் என்றால், யாருமே கட்டாத டிசைன் வேணும், டிஃப்ரண்டா இருக்கணும், நாம் வித்தியாசமா தெரியணும்னு நினைக்கற பெண்கள் ஏராளம்!

அடுத்த விஸிட் ஆழ்வார்ப்பேட்டை ஆவரணா.

''ஆவரணா என்றால் ஆடை. பெண்களுக்கு மிகவும் பிடித்த சொல். எங்களுடைய கலர் க்ரீன். பச்சை நிறத்துக்கு ஒரு ஃப்ரெஷ் அண்ட் யங் லுக் உண்டு. ஸோ, எங்கள் கடையில் விதவிதமான பச்சை நிறத்தில் புடைவைகள் ஏராளமாக உண்டு.

ஹாஃப் அண்ட் ஹாஃப், பார்ட்லி பல்லூ, டஸ்ஸர், காஞ்சிபுரம் என சாய்ஸ் ஏராளம். வெர்ட்டிகல் டிஸைன், காஞ்சிப் பட்டில் பிளாக் பிரிண்டட், ஹேண்ட் ஓவன் டிஸைன்ஸ் ஆவரணாவின் தனி முத்திரை. கலம்காரி, அப்ளிக்... என இளம்பெண்களுக்கும் வெரைட்டி உண்டு'' என்கிறார் ஆவரணாவின் மானேஜிங் பார்ட்னரான விஜயலட்சுமி.

''**நா**ங்கள் இந்தத் தடவை புடைவைக்குத் தகுந்த ஜுவல்லரியும் டிஸைன் பண்ணித் தருகிறோம். எல்லாமே 'ஆண்டிக்' டிஸைன்ஸ்! எந்தப் புடைவையுடன் என்ன மாதிரி நகை என சஜஷன்ஸ் தருவோம். கலம்காரி ப்ளவுஸ் எங்களுடைய ஸ்பெஷல்! காட்டன்ஸ் வித் சில்க் பார்டர் புடைவைகளுக்கு பெண்கள் மத்தியில் வரவேற்பு பிரமாதம். சிம்பிளாகவும் இருக்கும், தனித்து ரிச்சாகவும் தெரியும். அதுதான் எங்கள் ஸ்பெஷாலிட்டி'' என்கிறார் விஜயலட்சுமி.

- லதா சேகர்



தித்திக் தொடர்கதை

நில்... கவனி... செக்ஸ் கொல்!

''பவித்ரா, இவன் செய்த கேடுகெட்டத் தனத்தை, தானே ஒத்துக்கிட்டான். நீயே அதற்கு வலுவான சாட்சி. வா, உடனடியா போலிஸிலே புகார் கொடுக்கலாம்'' என்று படபடத்தான் குரு.

''மிஸ்டர் குரு, கொஞ்சம் வாயை மூடிக்கங்க'' என்று கர்ஜித்தாள் பவித்ரா.

''ஏன் வாயை மூடிக்கணும்? குமாரின் அயோக்கியத்தனம் வெளியாகும்போது உன் சிநேகிதியின் கேவலமும் வெளியாயிடுமேன்ற கவலையா?''

அதற்கு மேல் பவித்ராவால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. அந்த அறையிலிருந்த கணினியை இயக்கினாள்.

''வாங்க இங்கே''

''ஷிப்ராவைப் பத்தி மேலே ஒரு வார்த்தைப் பேசுவதற்கு முன்னாலே, லட்சுமிக்கு அவள் எழுதின இந்தக் கடிதங்களைப் படியுங்க. லட்சுமின்றது வேறு யாருமில்லை அவளேதான். தன் மனபாரத்தைக் குறைப்பதற்காக, அவ தனக்குத்தானே எழுதிக்கிட்ட கடிதங்கள் இவை.''

திகைப்புடன் படிக்கத் தொடங்கினான் குரு.

அவனுக்கும் ஷிப்ராவுக்கும் மட்டுமே தெரிந்த சில விவரங்கள் கூட அந்தக் கடிதங்களில் பதிவாகி இருந்ததால், அவற்றின் நம்பகத் தன்மையைச் சந்தேகிக்க அவனுக்கு அவசியமின்றிப் போனது.

''பவித்ரா, சிங்கப்பூருக்குப் போய் ஒரு வாரமாகிவிட்டது லட்சுமி. தொலைபேசியிலோ ஈமெயிலிலோ தொடர்பு கொள்ளணும். இன்னும் இரண்டு நாட்களில் குரு என்னை மகப்பேறு ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதாகக் கூறியிருக்கிறார். இதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை லட்சுமி. 'இரண்டு பேரும் டாக்டர்கிட்டே செக்-அப் செய்துக்கங்க' என்று பவித்ரா ஒருமுறை கூறியபோதுகூட கோபப்பட்டிருக்கிறேன். 'யாரிடம் குறை என்பதைத் தீர்மானிக்கும் சோதனை எங்களுக்கு வேண்டாம்' என்று. ஆனால், குழந்தை ஏக்கம் அதிகமாகிக் கொண்டே வருகிறது. 'ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கலாமா?' என்று கேட்டால் குருவின் முகம் சிறுத்துவிடுகிறது. 'ஏன் உன்கிட்டே குறை இருக்கும்னு டாக்டர் கண்டுபிடிச்சுச் சொல்லிடுவாரோன்ற பயமா?' என்கிறார். அவரிடம் எப்படிச் சொல்வேன், 'உங்களிடம் குறை என்று ஒருவேளை கூறிவிடக் கூடாதே எனும் பயம்' என்று. டாக்டரிடம் போய் வந்த பிறகு பவித்ராவுக்கு ஃபோன் செய்ய வேண்டும்.''

அருணன் சரண்யா

15



மற்றொரு கடிதம்.

''டாக்டரிடம் போய் வந்ததும் குரு ரொம்ப அப்செட்டாகிவிட்டார். அவரது உயிரணுக்களைச் சோதித்ததில் அவருக்குத் தந்தையாகும் வாய்ப்பு குறைவு என்பது தெரியவந்திருக்கிறது. டாக்டர் எங்கள் இருவரையும் வைத்துக்கொண்டு இதைச் சொன்னதும் குருவின் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது.

அன்றிரவு உடலில் வியர்வை பொங்க நள்ளிரவில், ''இப்பச் சொல்லு என்கிட்டே குறையா?'' என்றார். உடல் அயர்வையும் மீறி அனுதாபம் உண்டானது.

ஆனால், தாழ்வுமனப்பான்மையில் குரு மனத்துக்குள் நாளுக்கு நாள் நொறுங்கிக் கொண்டே போவது தெரிந்தது. இந்த நிலையில் ஒரு குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்ளலாமே என்ற யோசனையை முன்வைக்கவும் பயமாக இருக்கிறது. இந்தச் சூழலில் பவித்ராவிடம் எப்படித் தொடர்புகொள்ள? அவளிடம் அந்தச் சூழலில் உண்மையைக் கூறவும் மனதில்லை. பேசினால் கூறாமலும் இருக்க முடியாது.''

மேலும் ஒரு கடிதம். லட்சுமிக்குதான்!

''குமார் வந்திருந்தார். இனிமையான சுபாவம். என் மனத்தில் அன்று தோன்றிய ஒரு கேள்வியை அவரிடம் கேட்டுவிட்டேன். 'ஒரு சமயம் நீங்க வாங்க போங்கன்னு சொல்றீங்க. வேறொரு சமயம், 'நீ, உன்னிடம்'னு சொல்றீங்களே, ஏன்?'' - அதற்கு குமார் சொன்ன பதில் மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது லட்சுமி. தன் அண்ணனின் மனைவி என்பதால் மரியாதையுடன் பேசுவதுதான் நியாயமாம். அதே சமயம் என்னைப் பார்க்கும்

மாயாபஜார் சினிமாஸ் நிறுவனம் தயாரிக்கும் 'புகைப்படம்' திரைப்படம் குறித்து இயக்குநர் ராஜேஷ்லிங்கம் நம்மோடு பேசினார். "நான் செல்வராகவன் ஸாரிடம் '7ஜி ரெயின்போ காலனி', 'புதுப்பேட்டை' இரண்டு படங்களில் அசிஸ்டெண்டாக ஒர்க் பண்ணினேன். அதுக்கு பிறகு 'நினைத்து நினைத்துப் பார்த்தேன்' படத்தில் மணிகண்டன் ஸாரிடம் அசோசியேட்டாக இருந்தேன்.

'யாரடி நீ மோகினி' படத்தில் ஜவகர் ஸாரிடம் ஒர்க் பண்ணவேண்டியது. அதற்குள் என் நண்பன், மணிகண்டன் என்னை இயக்குநராக்கிவிட்டான்.

எனக்கும், அவனுக்கும் பதினேழு வருட நட்பு. இருவரும் விருகம்பாக்கத்தில் உள்ள அவிச்சி ஸ்கூல்லதான் முதல்ல படிச்சோம். சத்யபாமா என்ஜினியரிங் காலேஜ்ல டிகிரி. அவன் திடீர்னு உனக்கு சினிமா அனுபவம் இருக்கு. படம் பண்ணு. நான் தயாரிக்கிறேன்னு சொன்னான். இதை உண்மையிலேயே எதிர்பார்க்கவே இல்லை. திடீர்னு சொன்னவுடனே, எனக்கு ஒண்ணுமே புரியலை. என் மேல உள்ள நம்பிக்கையால இந்த முயற்சியை எடுத்திருக்கான்.

ஒரு அசிஸ்டெண்ட் டைரக்டருக்கு முதல் படம் கிடைக்கிறது, எவ்வளவு பெரிய போராட்டம் என்பது எனக்குத் தெரியும். அந்தப் போராட்டம் தெரியாம எனக்குப் படம் பண்ண வாய்ப்பும் கொடுத்தது, என்னை பார்ட்னராகவும் ஆக்கியிருக்கான்.

இந்தப் படம் காலேஜ் சப்ஜெக்ட்! ஒரு

போதெல்லாம் அவருக்குத் தங்கை இல்லாத குறை மறைந்து விடுகிறதாம். அதனால்தான் பேச்சில் மரியாதை கொடுப்பதால் அவ்வப்போது தடுமாற்றமாம்.

பவித்ரா, திரையில் கொண்டு வந்த மற்றொரு கடிதமும் குருவின் முன் விரிந்தது.

'தொடர்பு கொள்ளாததற்காக பவித்ரா ஈமெயிலில் திட்டி இருந்தாள். நான் தாய்மை அடைந்திருக்கும் நல்ல செய்தியை மின்னஞ்சலில் தெரிவிப்பதா? தொலைபேசியில்தான் சொல்ல வேண்டும். இரவு மணி பத்து ஆகிவிட்டிருந்தது. சிங்கப்பூரில் நள்ளிரவு ஆகியிருக்குமோ! இப்படி யோசித்தபடியே கட்டிலில் உட்கார்ந்தபோதுதான் குரு அந்தக் கேள்வியை வெளிப்படுத்தினார். 'நீ எனக்காக எது வேணா செய்வே இல்லையா?'. 'நிச்சயம் செய்வேன்' என்றேன்.

'இந்தக் கருவைக் கலைச்சிடு' என்றார் இதை நான் எதிர்பார்க்கவில்லை. சில நொடிகளுக்குப் பிறகு அவர் மேலும் அமிலத்தை வார்த்தைகளாக வீசினார். அதாவது வேறு ஓர் ஆணின் சேமிக்கப்பட்ட உயிரணுக்களை டாக்டர் என் கருப்பையில் செலுத்தியதால் நான் தாய்மை அடைந்தேனாம்!

அப்போது பார்த்து செல்ஃபோன் அழைப்பு. நீயே சொல்லு லட்சுமி, அந்தச் சூழலில் நான் எப்படி அவளிடம் பேசுவேன்? என் குரலைக் கொண்டே 'ஏதோ பெரிய பிரச்னை' என்று தெரிந்து கொள்வாள். சிங்கப்பூரிலிருந்து திரும்பி வந்த பிறகு அவளிடம் எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ளலாம். வேறுவழியில்லை.

குருவின் கண்களில் கண்ணீர் பவித்ராவின் மனத்தில் விடைதெரியாத கேள்விகள்.

'என்னையும் ஷிப்ராவையும் இணைத்து குரு சந்தேகப்பட்டான். எனக்கு வந்த கோபத்தில் பாதியிலேயே தொலைபேசி அழைப்பை துண்டித்து விட்

என்ஜீனியரிங் காலேஜ்ல உள்ள நான்கு பசங்க, மூன்று கேர்ள்ஸ் பத்தின ஸ்டோரி. இதுல சிவம், ஹாரீஸ், ஹம்சத், நந்தா இந்த நாலு பசங்க, ஹைதரா பாத்தை சேர்ந்த யாமினி, மும்பை மாடல் மிருணாளினி, வாமனன் படத் தில் நடிக்கற யாமினி மூன்று கேர்ள்ஸ் மொத்தம் இந்த ஏழு பேர்தான் படத் தோட முக்கியமான கேரக்டர்கள். இந்த ஏழு பேர் ரொம்ப டேலண்டான பசங்க. அடுத்த வருஷம் பாருங்க. இவுங்க ஏழு பேரும் பிஸியா இருப்பாங்க'' என்கிறார் ராஜேஷ்லிங்கம்!

– கண்மணி



டேன். என்னிடமே இவ்வளவு ஆக்ரோஷ மாகப் பேசிய குரு, ஷிப்ராவை என்ன செய்திருப்பானோ என்கிற பயம் மனத்தில் எட்டிப் பார்த்தது. ஒருநாள் காலை ஷிப்ராவை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். குருவின் சந்தேகத்தை வெளிப்படுத்தினேன் என்று பவித்ராவிடம் விளக்கிக்கொண்டிருந்தான் குமார்.

மருத்துவமனையில் காலில் கட்டுடன் கேட்டுக் கொண்டிருந்தான் விக்ரம். தனது பள்ளி நண்பனான குமார் ஏற்கெனவே இதையெல்லாம் அவனிடம் கூறிவிட்டிருந் தான்.

விக்ரமுக்கு அருகில் உட்கார்ந்து கொண் டிருந்த பவித்ராவால், மீதியைப் புரிந்து கொள்ள முடிந்தது. லெவல் கிராஸிங்கை ஷிப்ரா நெருங்குவதற்கு முன்பாக குமார் அவளைத் தொடர்புகொண்டிருக்கிறார். ஷிப்ரா, தன் வாழ்க்கையின் ஆதாரமே அறுந்துவிட்டதாக உணர்ந்திருக்க வேண் டும். சொந்தத் தம்பியுடன் அவளை இணைத் துப் பார்த்திருக்கிறான். இது அவளை உலுக்கிப்போட, எதிரில் வந்து கொண் டிருந்த ரயிலின் முன் பாய்ந்திருக்கிறாள்.

''எதற்காக ஷிப்ரா மேலே குற்றத்தைச் சுமத்தினீங்க?''

விக்ரம்தான் அப்படியொரு கட்டுக் கதையை சொல்லச் சொன்னான். குருவின் காதில் விழும்படி உங்களைத் தொலை பேசியில் தொடர்புகொண்டு 'ஷிப்ரா பற் றிய மிக முக்கியமான ஒரு விஷயத்தை நாளைக்கு உங்க வீட்டுக்கு வந்து சொல் லணும்'னு என்னை சொல்லச் சொன் னான். எதிர்பார்த்தது போல் குருவும் என்னை மறைவாகப் பின்தொடர்ந்தான். விக்ரமின் கணிப்புப்படியே குரு பலவற் றைக் கொட்டி விட்டான். என்னை ஷிப்ரா வின் இறப்பில் சிக்கவைப்பதற்காக தான் எடுத்துக்கொண்ட முயற்சிகளை அவனா கவே வெளிப்படுத்தி விட்டான். ஆனால் விக்ரமின் திட்டத்தில் ஒன்றுதான் தவறி விட்டது. அவனும் ஏதோ சினிமா போலீஸ்

போல சரியாக அந்த நேரத்தில் அங்கு வந்து சேர வேண்டும் என்பதுதான் அது. வழியில் சாலை விபத்தில் சிக்கிக் கொண்டு முழங்காலில் அடிபட்டுக் கொண்டு இப்போது மருத்துவமனையில் இருக்கிறான்.''

கேட்கக் கேட்க வருத்தம் அதிகமானது. பின் மெல்ல ''லட்சுமியைப் பற்றி உனக்கு எப்படித் தெரிந்தது விக்ரம்?'' என்று கேட்டாள்.

''தண்டவாளத்திற்குச் சற்றுத் தள்ளி ஷிப்ராவின் ஹாண்ட்பாக் கிடந்தது. அதிலிருந்து சிதறிக் கிடந்த பொருள்களை மறுபடியும் அந்தப் பையிலேயே போட்டு குருவிடம் ஒப்படைத்தேன். சிதறியதில் ஷிப்ராவின் குறிப்புப் புத்தகம் ஒன்றும் இருந்தது. அதிலே 'லட்சுமிக்கு உடனடியாக லெட்டர் போட வேண்டும்' என்று எழுதியிருந்தாள். அதை வைத்துதான் உன்னிடம் லட்சுமியைப் பற்றி விசாரித்தேன். ஆனால் அந்த லட்சுமிக்கு இப்படியொரு பின்னணி இருக்குமுனு நான் நிச்சயமாக எதிர்பார்க்கலே. ஷிப்ரா நிஜமாகவே ரொம்ப ரொம்பப் பாவம்தான் பவித்ரா.''

பவித்ரா எழுந்தாள். ''உடம்பைப் பார்த்துக்குங்க. நான் அடிக்கடி வருகிறேன். சீக்கிரமே குணமாயிடும்'' என்றபடி கிளம்பினாள்.

தன் வீட்டுக்கு வந்ததும் நேரே மொட்டை மாடிக்குச் சென்றாள். அடுத்த நிமிடமே சொல்லி வைத்ததுபோல் அந்தப் புறா மொட்டைமாடி கைப்பிடிச் சுவரில் வந்து உட்கார்ந்தது. கழுத்தைச் சாய்த்தபடி பவித்ராவைப் பார்த்தது. ஷிப்ராவின் அதே போன்ற பார்வை. 'உன் இறப்பு எனக்குள் ஏற்படுத்தியிருக்கும் ரணம் மறையவே மறையாது ஷிப்ரா' என்று எண்ணிய பவித்ரா உடைந்து அழுதாள்.

'மறையாது. ஆனால் மெல்ல மெல்ல ஆறிவிடும்' எனும்படி தொடர்ந்த நாட்களில் பல விஷயங்கள் நடக்கவிருந்தன.

அழகான பெண் குழந்தையுடன் அவள் வீட்டுக்கு வரவிருக்கும் குரு 'தத்து எடுத்திருக்கேன். ஷிப்ரான்னு பெயர் வைச்சிருக்கேன்' என்பான் குறையாத குற்றஉணர்வுடன்.

''உங்க புண்ணியத்திலே என் மகன் தொடர்ந்து படிக்கிறான்மா. நீங்க நல்லாயிருக்கணும்'' என குரல் நெகிழ கூறப் போகிறாள் குணசுந்தரி.

''காலேஜிலே என் காதலை ஏத்துக்க மறுத்தாய். இப்போது கேட்கிறேன். என்னைக் கல்யாணம் செய்துக்குவியா?' என்று விக்ரம் கேட்க, தன் பெற்றோரும் இதற்கு வற்புறுத்த, பவித்ரா தலையசைக்கப் போகிறாள்.

'இவ்வளவு நல்ல விஷயங்கள் உன் வாழ்க்கையில் நடக்கப் போகிறது. பார்க்கத்தானே போகிறேன்' என்பதுபோல் அந்த புறா மீண்டும் ஒருமுறை கழுத்தைச் சாய்த்து பவித்ராவைப் பார்த்தது.

(முற்றும்)



''உங்க டாக்டரால ஒருத்தருக்கு ஒரு காரியம் ஆகணும்!''

''மொட்டையா சொன்னா எப்படி, 'சிபாரிசு' பண்ணணுமா... இல்ல 'ஆபரேஷன்' பண்ணணுமா?

- வெ. சீதாராமன்

10,000 அடி உயரத்தில் துப்பறியும் புலி!

உலகமெங்கும் சினிமா ரசிகர்களைப் பெற்றுள்ள, ஜேம்ஸ் பாண்ட் 007 பட வரிசையில், இருபத்தி ரெண்டாவது படம் குவான்டம் ஆஃப் சொலாஸ். இதற்கு முன்பு வெளியாகி வசூலில் சாதனைபுரிந்த 'கேசினோ ராயல்' படத்தின் பார்ட் 2 இது என்பதும், அந்தக் கதை முடிந்த ஒரு மணி நேரத்தில், இந்தப் படத்தின் கதை ஆரம்பமாகிறது என்பதும் குறிப்பிடத்தக்கவை. கேசினோ ராயலில், ஜேம்ஸ் பாண்ட் ரோலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிமுகமான டேனியல் கிரெய்க்தான், இதிலும் ஜேம்ஸ் பாண்டாக வருகிறார்.

முந்தைய படத்தில், போதைப் பொருள் மாஃபியா கும்பலை ஜேம்ஸ் பாண்ட் வெற்றி கண்டாலும், காதலி அவருக்குத் துரோகம் செய்துவிட்டுப் போய்விடுவதாகக் கதை முடியும். இந்தப் படத்தில் அவள் ஏன் அப்படிச் செய்தாள் என்று கண்டுபிடிப்பதுடன், புதிய வில்லன்களைச் சந்திக்கிறார் 007. அவருக்கு உதவ முன்வருகிறாள் இன்னோர் அழகி.

46 வருட ஜேம்ஸ் பாண்ட் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு, ஏராளமான அவுட்டோர் லொகேஷன்களில் படம்பிடிக்கப்பட்டுள்ளது. கேசினோ ராயல் படத்தில் ஸ்டன்ட் காட்சிகளுக்காக கின்னஸ் சாதனை படைத்த கேரி போவல்தான், இந்தப் படத்துக்கும் சாகசக் காட்சிகளை வடிவமைத்திருக்கிறார்.

படத்தில் பத்தாயிரம் அடி உயரத்தில் பறக்கும் விமானத்திலிருந்து ஜேம்ஸ் பாண்டும், ஹீரோயினும் குதிக்கும் சாகசம், மயிர்க்கூர்ச்செரிய வைக்கும். இந்தக் காட்சி, செயற்கையாகச் சாகச விளையாட்டுக்காக உருவாக்கப்பட்ட 'காற்று சுரங்கப்பாதை' ஒன்றில், படமாக்கப்பட்டது. பல வீடுகளின் கூரை மீது ஓடித் துரத்தும் காட்சிக்காக, அந்த வீடுகளின் மேல் ஓடுகள் அனைத்தையும் அகற்றிவிட்டு, கனமாக சிமெண்ட் பூசி, அதற்கு மேலே மறுபடி ஓடுகள் பதித்தார்கள்.

கேசினோ ராயல் படம்தான், ஜேம்ஸ் பாண்ட் படங்களில் மிக அதிக வசூலைக் குவித்த படம். இந்தப் படம், அந்தச் சாதனையை முறியடிக்கும்.

- கௌதம் ராம்





ராணுவ

"ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டால், ஏறக்குறைய எல்லோரும் விவசாயிகளாக இருப்பார்கள். அல்லது, பக்கத்திலுள்ள தொழிற்சாலையில் தொழிலாளிகளாக இருப்பார்கள். ஆனால், திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு அருகேயுள்ள மேலக்கோயில்பட்டி கிராமத்தில், அநேகமாக எல்லா ஆண்களும் ராணுவத்தில் இருக்கின்றனர். அந்தக் கிராமத்துக்கு விசிட் அடித்தோம்...

"நான் பொறந்ததும், என்னையைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்ததும், இந்த ஊர்தான். என்னோட அத்தை மகனையே நான் கண்ணாலம் பண்ணிக்கிட்டேன். அவுக இருவது வருஷமா ராணுவத்துல வேலை பார்த்து, சுபேதார் ரேங்க்ல ரிடையர்ட் ஆனாங்க. எங்களோட ரெண்டு மகன்களும், இப்ப ராணுவத்துலதான் இருக்காங்க. எங்க மகளுக்குக் கண்ணாலமாகி ரெண்டு மாசம் ஆகுது. மருமகனும் பத்து வருஷமா ராணுவத்துல இருக்காங்க. எங்க கிராமத்து ஆண்களுக்கு மிலிட்ரி வேலைன்னா அம்புட்டு மோகம். படிப்பாங்க. படிச்சு முடிச்சதும் ராணுவ வேலைக்குப் போய்ச் சேர்ந்திடுவாங்க!'' என்கிறார் ஜமுனா ராணி.

"என்னோட வீட்டுக்காரர் இருதய சாமி, ஹவில்தாரா இருந்தவர். அவுக இறந்து அஞ்சு வருஷம் ஆகுது. என் நாலு பையன்களும் மிலிட்ரிதான். அதுல மூணு பையனுங்க ரிடையர் ஆகி ஊர்க்கு வந்துட்டாங்க. ஒரு பையன் அமுல்துரை இப்பவும் ஹவில்தாரா இருக்கான். மருமகன் நிக்கோலஸ், பேரனுங்க ரெண்டு பேரு ராணுவத்துலதான் இருக்காங்க. எங்களுக்கு இது பழகிப் போச்சு. ஆம்பளைங்க ராணுவத்துக்குப் போய்டு வாங்க. பொம்பளைங்க காடு கரையப் பார்த்துக்கிடுவோம். எனக்குத் தெரிஞ்சு எங்க குடும்பத்துல மூணு தலைமுறையா ஆம்பளைங்க மிலிட்ரி வேலைக்குத்தான் போய்ட்டு இருக்காங்க!'' எனக் கூறும் மங்களமேரிக்கு வயது எழுபது.

"முன்னாள் ராணுவத்தினர் இந்நாள் ராணுவத்தினர் அதிகம் பேர் வசிக்கும் கிராமம் என இரண்டு வகையிலும் பெருமைவாய்ந்தது எங்க கிராமம். நான் 22 வருடங்கள் சர்வீஸ் பண்ணிட்டு, 2006ல ரிடையர்ட் ஆகி ஊர்க்கு வந்தேன். எங்களுக்குச் சம்பளமும் கம்மி. பென்ஷனும் குறைவு. இப்பத்தான் சம்பளம் உயர்த்தி



கிராமம்!



✱ ஊரைக் காக்கும் உத்தமர்கள் சங்கம்

யிருக்கறதா அறிவிச்சிருக்காங்க. அந்த அடிப்படையில பென்ஷன் அரியர்ஸ் பணம் எங்களுக்கு இன்னும் வந்து சேரலை!'' எனக் குறைபட்டுக் கொள்கிறார் முன்னாள் ராணுவப் பணி யாளரான ஞானப்பிரகாசம்.

''டிசம்பர் மாதம் வந்துட்டாப் போதும். மிலிட்ரியில இருக்கற எங்க ஊர் ஆம்பளைங்க எல்லாருமே, லீவு போட் டுட்டு ஊர்ப் பக்கம் வந்திடுவாங்க. கிறிஸ்துமஸ் திருவிழா எங்க ஊர்ல விமரிசையா நடக்கும்'' என்கின்றனர் பெண்கள்.

கிராமத்தின் முகப்பில் உள்ளது, நியு சித்ரா ஜி.ஆர்.வி. சலூன். கிராமத்து இளைஞர்கள் சங்கமிக்கும் இடம். அங்கே இவர்கள் உருவாக்கியிருப்பது 'ஊரைக் காக்கும் உத்தமர்கள்' சங்கம். முப்பது பேர் உறுப்பினர்கள். ''எங்க ஊர்ல ஒன்பதாவது, பத்தாவது படிச்சிட்டு இருக்கும்போதே, அவங்களை நாங்க மிலிட்ரி வேலைக்குப் போகத் தயார் பண்ண ஆரம்பிச்சுடுவோம். டெய்லி அஞ்சு கி.மீ. ரன்னிங். சலூன்ல ஜிம் உபகரணங்கள் வாங்கிப் போட்டுருக் கோம். பையன்களுக்கு உடற்பயிற்சி. ராணுவத் தேர்வுல, பொது அறிவுத் தேர் வும் உண்டு. அதனால தினசரி, வார இதழ் கள் சலூன் கடைக்கே வரவழைக்கறோம். ஜி.கே. புத்தகங்களும் நிறைய வாங்கிப் போட்டுருக்கோம். பிளஸ் டூ பாஸ் ஆன தும், ராணுவத்துக்கு அப்ளிகேஷன் அனுப்பு வோம். ஜி.கே. டெஸ்ட், உடற்திறன் போட்டி மற்றும் நேர் முகத் தேர்வுல வெற்றி பெற்றதும், முறைப் படி ராணுவ வேலை யில சேர்ந்திடுவாங்க!'' என்கின்றனர் சங்கத் தின் உறுப்பினர்கள் ஆன ஜான்கென்னடி, ப்ரதீஷ், சவேரியார், லியோ, கோபால் மற் றும் சிகாமணி.

அடுத்த டீம் ரெடியா?



✱ ஞானப்பிரகாசம்



✱ ஜமுனாராணி



✱ மங்களமேரி

– புதியவன்

படங்கள் : திருநாவு

இரும்பு

மதன்



சிறையில் உட்கார்ந்து எழுத ஆரம்பித்தார் ஹிட்லர். செய்வதற்கு வேறொன்றும் இல்லை. பெரிய அளவில் ஏற்பாடு செய்திருந்த புரட்சி தோற்றுவிட்டது. மிகுந்த நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும்தான் அணி திரட்டினார். ஜெர்மன் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிவிடலாம் எனக் கனவு கண்டார். தோள்பட்டையில் ஸ்வஸ்திக் சின்னம் அணிந்த நாஜி வீரர்கள், ஹிட்லரின் உத்தரவை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே கடைபிடித்தனர். கடைசி நேரத்தில் சில பிசகுகள். நம்பிக்கையளித்திருந்த சிலர் காலைவாரிவிட ஆயுதப் புரட்சி தோற்றது. நாஜிக் கட்சியின் தலைவர், ஹிட்லரை அள்ளிக்கொண்டு வந்து சிறையில் போட்டார். இது நடந்தது செப்டம்பர் 11, 1923ல்.

வெறுமனே விட்டத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியவில்லை ஹிட்லரால். வெளியில் இருக்கும் ஆட்சியாளர்கள் அத்தனை பேரும் முட்டாள்கள். இதுபோன்ற நோஞ்சான் ஆசாமிகளால் ஜெர்மனியை கட்டியாள முடியாது. ஜெர்மனி ஒரு வீரக் குதிரை. அதை அடக்கியாள தீரம் வேண்டும். நெஞ்சுரம் வேண்டும். நிலத்தில் யாருக்கும் அஞ்சாத குணம் வேண்டும்.

ஹிட்லர் ராணுவத்தையும் நாஜி வீரர்களையும் நம்பினார்; மக்களையும்தான். சிறுத்தைப் போல் பாய்ந்து செல்லும் சிந்தனையோட்டத்தை, மொழியில் பதிவு செய்யும் அளவுக்கு அவர் கைவிரல்களுக்குத் திராணி இல்லை. 'யாரங்கே, இரண்டு பேர் வாருங்கள். நான் சொல்லச் சொல்ல எழுதுங்கள். இது என் கதை மட்டுமல்ல; ஜெர்மனியின் கதை. என் அரசியல் சிந்தனையின் கதை. என் கனவு திட்டத்தின் கதை.' ஹிட்லர், சொல்ல ஆரம்பித்தார். ஜெர்மனி, காது கொடுத்து கேட்க ஆரம்பித்தது.

இரண்டு பாகங்களாக வெளிவந்தது அந்தப் புத்தகம். முதல் பாகத்தை சிறையில் இருக்கும்போதே முடித்துவிட்டார். இரண்டாவது பாகம், சிறையில் இருந்து வெளிவந்ததும் எழுதப்பட்டது. முதல் பாகம் ஜூலை 1925ல் வெளியானது. இரண்டாவது பாகம், டிசம்பர் 1926ல். தன் புத்தகத்தின் மீது ஹிட்லருக்கு இருந்த நம்பிக்கை, அதைப் பதிப்பித்த ஜெர்மானிய பதிப்பாளருக்கு இல்லை. ஆரம்பத்தில் 500 பிரதிகள் மட்டுமே அச்சிட்டார்கள். இதையெல்லாம் யார் வாங்கி படிக்கப் போகிறார்கள் என்று நினைத்திருக்கலாம். ஹிட்லர் ஆட்சியில் இருந்த சமயம் (1933-1945) இந்தப் புத்தகம் மூன்று பதிப்புகள் வெளிவந்தன.

புத்தகம்!

'மெய்ன் கேம்ப்' என்றால் என் போராட்டம். இது ஹிட்லரின் முழுமையான தன் வரலாற்று நூல் அல்ல. இன்னும் சொல்லப்போனால், ஹிட்லரின் வாழ்விலிருந்து சில அத்தியாயங்களை மட்டுமே இந்நூலின் வாயிலாகத் தெரிந்துகொள்ள முடியும். இது ஹிட்லரின் அரசியல் சாசனம். ஹிட்லர் என்னும் தனி மனிதனின் புத்தியில் தோன்றிய சிந்தனை வீச்சுகள். கூர்மையான, ஆக்ரோஷமான பல வாதங்களை ஹிட்லர் தன் நூலில் முன்வைத்திருக்கிறார். இந்நூல் ஜெர்மனியைப் புரட்டிப் போடுமென நினைத்தார். தவறு ஜெர்மனியை மட்டுமல்ல; ஒட்டுமொத்த உலகத்தையும் புரட்டிப்போடும் சக்தி அவர் சிந்தனைகளுக்கு இருந்தன.



என் வணக்கத்துக்குரிய ஜெர்மானியப் பிரஜைகளே, உங்கள் வாழ்க்கை நிலையைப் பார்க்கும்போது, என் மனம் பதைபதைக்கிறது. கண்களுக்குத் தெரியாத இரும்பு வலைக்குள் நீங்கள் சிக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இந்நிலை நீடித்தால் ஜெர்மனி என்னும் தேசமே எஞ்சியிருக்காது.

இத்தனைக்கும் யார் காரணம்? யூதர்கள். ஆம்; நம் தேசத்தில் பிழைக்க வந்த, இந்தச் சதிகாரக் கும்பல் நம் வாழ்வாதாரத்தை நசுக்கிக்கொண்டிருக்கிறது. தயவுசெய்து கண்களைத் திறந்து பாருங்கள். வட்டிக்குப் பணம் கொடுத்து, ஜெர்மானியர்களின் ரத்தத்தை உறிஞ்சிப் பகட்டாக வாழும் இவர்களை ஒழிக்க வேண்டாமா? இழந்த நம் வாழ்வைத் திரும்பப் பெற வேண்டாமா? அதற்காகத்தான் நானும் நாஜிக் கட்சியும் உழைத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு ஜனநாயக தேசத்தில் இந்த அழித்தொழிப்பை நடத்த இந்த அரசியல் சட்டம் இடம் கொடுக்காது. என்னிடம் ஒரு மாபெரும் திட்டம் இருக்கிறது. அதை மட்டும் என்னால் சாதிக்க முடிந்தால், உங்கள் அனைவரையும் அடிமைத்தளையில் இருந்து விடுவித்துவிடுவேன். எனக்கு ஒத்துழைப்பு தாருங்கள்.'

ஒத்துழைப்பு கிடைத்தது. ஹிட்லர் ஜெர்மனியை விடுவித்தார். எப்படி என்பதை அறிந்துகொண்டபோது, உலகம் திடுக்கிட்டுப் பின்வாங்கியது. ஒரு விஷயம். ஹிட்லரின் மெய்ன் காம்ஃப் இன்றுவரை ஒரு பெஸ்ட் செல்லர்.

எல்லோருக்குமே தாத்தா-பாட்டி உறவு இனிமையானதாக இருக்கும். எதிர்பார்ப்பு அற்றது என்பதால், அது தாய் - தந்தை பாசத்தைவிட ஒரு படி மேலானது. எனக்கும் அந்த அற்புதமான நெகிழ்வான உறவு கிடைத்தது.

மதுரையில் எங்கள் வீட்டுக்குச் சில வீடுகள் தள்ளி அம்மாச்சி - தாத்தா வீடு இருந்தது. தாத்தா - போலீஸ் ஏட்டாகப் பணியாற்றி எழுபதுகளிலேயே ஓய்வு பெற்றவர். ரொம்ப நாணயமான ஏட்டாக இருந்திருக்கிறார். 1940களில் ஒருமுறை, நாலாயிரம் ரூபாய் லஞ்சப் பணத்தை வாங்க மறுத்து குற்றவாளிகளைப் பிடித்துக் கும்மியவர் என்பதால், டிபார்ட்மெண்டிலும், வெளியிலும் அவருக்கு நல்ல மதிப்பு. ஏரியாவில் 'ஏட்டையா' என்றால் அவர் மட்டும்தான். ஏட்டையா மனைவி என்பதால் என் அம்மாச்சியையும் மற்றவர்கள் 'ஏட்டம்மா' என அழைப்பார்கள். இதனால் நான் மிகச் சின்ன வயதில் - என் அம்மாச்சியும் போலீஸாக வேலை பார்த்தவர் என்று நினைத்திருந்தேன். பின்னாளில் அவர்கள் என்னையும் 'ஏட்டையா பேரன்' என்று அழைத்தபோதுதான், எனக்கு உண்மை புரிந்தது. தாத்தாவின் விரல் பிடித்து தெருவில் நடக்கும்போது, 'ஏட்டு'வாக இருந்த தாத்தாவே அமைதியாக நடப்பார். ஆனால் 'ஏட்டையா பேரன்' என்ற அடைமொழி தாங்கவே, எனது நடையில் நல்ல கம்பீரமும், கொஞ்சம் தெனாவெட்டும் கலந்திருக்கும்.

அப்பாவழி தாத்தா - பாட்டியான



என்னை இயக்கிய ஹீரோக்கள் 15

இயக்குநர் சிம்புதேவன்

ஏட்டம்மா, ஏட்டய்யா மற்றும் ஏட்டய்யா பேரன்!

வெங்கடாசலபதி - தமயந்தி இருவரும் திருப்பரங்குன்றத்தில் இருந்ததால், அவர்களை எப்போதாவதுதான் பார்க்க முடிந்தது என்பதாலேயே, அம்மாச்சி - தாத்தாதான் சகலமும். தாத்தாதான் கந்தன் கடைக்கு முடிவெட்ட கூட்டிப் போவார். கந்தன் கைகட்டி, நம்பியார் அடியாள் மாதிரி, தாத்தாவின் உத்தரவுக்காக வளைந்து நிற்பார். தாத்தா, குளிர் காலத்திலும் 'சம்மர்' கட்டிங்தான் வெட்டச் சொல்லுவார். அதுவும் மிஷின் கட்டிங்! அரை இன்ச் முடி இருந்தால் போதும்! என் தாத்தா அசால்டாக ஆடர் கொடுத்ததும், கந்தன் வெறியோடு வெட்ட ஆரம்பிப்பார். அவர் என் முன்புறம் வந்து வெட்டும்போது தாத்தாவுக்குத் தெரியாமல் 'ப்ளீஸ்ணே! கொஞ்சம் முடி இருக்கட்டும்ணே' என ரகசிய குரலில் அழுகையாகக் கெஞ்சுவேன். இரக்கப்பட்டு அவர் விட்டாலும், தாத்தா கண்டுபிடித்து வெட்டச் சொல்லிவிடுவார். கோபம் போகமாக வரும்.

பள்ளி முடிந்து வந்ததும் தாத்தா என்னை நேரே கடைக்குக் கூட்டிப் போய் பொட்டலம் (ஸ்நாக்ஸ்) வாங்கித் தருவார். மிக்ஸர், காராசேவ், பக்கோடா என தினம் ஒரு ஐட்டம். இதுவும் காஃபியும்தான். மாலை டிஃபன். நான் பாதி நேரம் சயின்ஸ் லேப் மாதிரி காபி டம்ளருக்குள் பக்கோடாவைக் கொட்டி ஊற வைத்து காபியையும் கெடுத்து - பக்கோடாவையும் கெடுத்து சொதப்பித் தான் சாப்பிடுவேன். ஐந்தாம் வகுப்பு வரை தாத்தா பொட்டலம் வாங்கித் தருவது தொடர்ந்தது.

தாத்தா பயங்கர மிலிட்டரி டைப். நேர்த்தியாளர். காலை நாலு மணிக்கு எழுவார். ஏழு மணிக்கு காலை சாப்பாடு, பனிரெண்டுக்கு மதிய சாப்பாடு, இரவு எட்டு மணிக்கு டின்னர் முடித்து படுத்து விடுவார். எல்லாம் டைமிங்கில் நடக்கும். பத்து மணிக்கு வருவதாகச் சொன்னால், ஒன்பது ஐம்பத்தொன்பதுக்கு அங்கு இருப்பார். இருபது செகண்ட் லேட்டாகிவிட்டால் ரொம்ப வருத்தப்பட்டு மன்னிப்பு கேட்பார். ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை இரவு நான் அம்மாச்சி வீட்டில்தான் தங்குவேன். காலையில் சீக்கிரம் எழுந்து படிக்க வேண்டும் என்பதற்காக. நான் கொஞ்சம் ஓவராக... தாத்தாவுடன் அதிகாலை இரண்டு மணிக்கு எழுப்பிவிட சொல்லுவேன். தாத்தா அலாரம் வைக்கமாட்டார். ஆனால், சரியாக ஒண்ணு அம்பத்தி அஞ்சுக்கு எழுப்புவார். நான் மிரண்டு போவேன். அவர் இரவு தூங்குகிறாரா இல்லை நைட் வாட்ச்மேன் போல் முழித்திருக்கிறாரா என எனக்கு பலத்த



தாத்தா, இன்றைக்கு பசங்களைவிட தீவிரமான

சந்தேகம். நடுவில் எழுந்து டம்ளரைத் தவற விட்டு அவர் தூங்குகிறாரா இல்லையா என செக் பண்ணினதுகூட உண்டு. தூங்குவாரானால், அவர் உடம்பில் பயலாஜிகல் கிளாக் அபாரமாக ஒர்க் பண்ணும். அவர் ரத்தம்தான் என்றாலும் என் பயலாஜிகல் கிளாக் ஒரு நாளும் ஒர்க் பண்ணியதில்லை. இரண்டு மணிக்கு எழுந்து மூன்று மணி வரை உட்கார்ந்தபடி கவனமாகத் தூங்குவேன். பின் அம்மாச்சி காஃபி போட்டுத் தருவார். அதைக் குடித்துவிட்டு மேலும் அரை மணிநேரம் தூங்குவேன். அதன் பின்தான் படிக்க ஆரம்பிப்பேன். பொதுத் தேர்வில் அறுபத்தஞ்சு பர்சன்டேஜ்தான் எடுத்தேன். மார்க் சீட்டைப் பார்த்த தாத்தா - டெய்லி காலைல எந்திரிச்சு லைட்டை போட்டுப் படிச்சு கரண்ட் பில் ஏறினதுதான் மிச்சம்' என நியாயமான கோணத்தில் உணர்வைக் கூறினார்.

தாத்தாவுக்கு மிக அபாரமான ஞாபக சக்தி உண்டு. எல்லோரின் பிறந்த நாட்கள் திருமண நாட்கள் மட்டுமில்லாமல் ஒரு முறை சந்தித்தவரின் பெயரைக்கூட ஜென்மத்துக்கும் மறக்கமாட்டார். என் நண்பனின் அப்பாவுக்கு பைபாஸ் சர்ஜரி செய்த நாளையும், ஹாஸ்பிட்டலையும் தெளிவாகச் சொல்லுவார். அதிர்ந்துபோய் 'உங்களுக்கு எப்படித் தெரியும்?' என சந்தேகப்பட்டால் 'நீதானடா சொன்ன!' என்பார். பைபாஸ் பண்ணினவருக்கே இதெல்லாம் மறந்து போயிருக்கும். 'இப்படி ஞாபகம் வெச்சிருக்கீங்களே. உங்கள்ல பத்து பர்சண்ட் அளவுகூட எனக்கு ஞாபகம் இருக்கறதில்லை' என நெகிழ்ந்து போய் சொன்னால், 'தெரியுமே... இப்படி ஞாபக சக்தி இருந்தாதான், நீ பரீட்சையிலே நல்ல மார்க் வாங்குவியே'' என்பார்.

இன்றைக்கு இருக்கும் இளவட்ட பசங்களைவிட தீவிரமாக கிரிக்கெட் ரசனையாளர். டீ.வி.யில் பார்த்தே 'இது நோ பால்!' என்பார். நமக்குக் குழப்பமாக இருக்கும். கரெக்டாக அம்பயரும் 'நோ பால்' காண்பிப்பார். ஒருமுறை கூட அவர் சொல்லுது தவறாது. மிக நன்றாக விளையாடினால் 'டெண்டுல்கர் நல்லா விளையாடுறார்' என அவர் மரியாதை கொடுப்பார். 'ஏதோ விளையாடுறான் என மரியாதை குறைவாக இவர் சொன்னால், டீம் மோசமாக விளையாடுகிறது என அர்த்தம். என் தாத்தாவிடம் இருந்து உண்மை, சத்தியம், நேரம் தவறாமை. தெளிவு, ஈடுபாடு, ரசனை என பல விஷயங்களையும்

ஆத்மார்த்தமாக உணர்ந்திருக்கிறேன்.

என் அம்மாச்சி அற்புதமான மனுஷி. மேற்கொண்டு பேச என்ன இருக்கிறது? பாண்டிச்சேரி அன்னை போன்ற தோற்றமுடையவர். எவ்வளவு பெரிய தவறு நடந்தாலும்கூட கோபம், வெறுப்பு, எரிச்சல் போன்ற உணர்வுகளை, என் சின்ன வயதிலிருந்து எப்போதுமே அவரிடம் பார்த்ததில்லை. மனிதம் என்பதின் முன்னுதாரணம். சதாகுடும்பம் சம்பந்தமான அன்பும் கவனமும்தான்.

அற்புதமாகச் சமைக்கும் தலைமுறையை அம்மாச்சி மூலம் நான் பார்த்தது எனது கொடுப்பினைதான். பால் கொழுக்கட்டை, கத்திரியை தீயில் வேக வைத்துத் தயாரிக்கும் கொஞ்சு, கார பணியாரம் வாழைபுட்டு, முழு உருளை வருவல், பருப்பு சோறு, களி, வெங்காய வடகம், இஞ்சி, ஊறுகாய் என சகலத்திலும் அது ஓர் அற்புதக் கலை என உணர முடிந்தது. அந்த விதத்தில் அம்மாச்சி ஒரு சிறந்த படைப்பாளி. என் வீட்டில் சாப்பிட்டாலும் அம்மாச்சி வீட்டிலும் ஒரு முறை டேஸ்ட் பண்ணிவிடுவேன்.

இருக்கும் இளவட்ட
ரிக்கெட் ரசனையாளர்!

தாத்தாவை விட அம்மாச்சியுடன்தான் நான் மிக நெருக்கம். சின்ன வயதில் அவருடன் மார்க்கெட் போவது, ரேசன் கடை போவது, உப்புத் தண்ணி எடுக்கப் போவது, ரைஸ் மில் போவது... என உலகின் அகலம் எனக்கு அறிமுகப்பட்டது. சின்ன வயதில் 'அ' 'ஆ' மற்றும் வாய்ப்பாடு எல்லாம் சொல்லித் தருவார். அவருக்கு ஓய்வு என்றால் ஏதாவது புத்தகம் படித்துக் கொண்டே இருப்பார். கடைசி வரை அது தொடர்ந்தது.

ஆரம்பத்தில் இருந்தே அம்மாச்சிக்கும் எனக்கும் ஒரு ரகசிய ஸ்நேகம் உண்டு. எல்லோரும் திட்டினாலும், யாருக்கும் தெரியாமல் ஃபிலிம் வாங்க எனக்கு மிட்டாய் வாங்க காசு தருவார். வீட்டில் செய்கிற ஸ்பெஷல் சாப்பாட்டு ஐட்டத்தில் கொஞ்சத்தை ஒளித்து வைத்து, மறுநாள் எனக்குத் தருவார். படம் வரைய உற்சாகப்படுத்துவார்; பில் ஸ்கெட்ச் பேனா வாங்க காசு தருவார். படிப்பில் எனக்கு அடி விழும்போதெல்லாம் அவர்தான் ஆறுதலாக இருப்பார். பனிரெண்டாவதில் மார்க் குறைந்து இம்ரூவ்மெண்ட் எக்ஸாம் எழுதலாம் என யோசித்தபோது, கஷ்டப்பட்டு அதற்கான பணத்தை எனக்காகக் கட்டியவர். கல்லூரி படிக்கையில் 'சினிமாவுக்குப் போயிட்டு வா' என பத்து ரூபாயை பாக்கெட்டில் வைத்துவிடுவார். இத்தனைக்கும் அவர் கையிலும் காசு இருக்காது. ஒவ்வொருவருக்கும் தனி உலகம் உண்டு என உணர்ந்து அதை மதிப்பவர்.

என் பால்யத்தை ஒழுங்குபடுத்தி, அழகுபடுத்திய அம்மாச்சி - தாத்தா இருவருமே சில மாதங்களுக்கு முன் காலமாகிவிட்டனர். நான் உணர்ந்து பூரித்த அற்புதமான உறவு. என்றும் நினைவில் நிற்கும் உறவு. என்னை வடிவமைத்ததில் அவர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. நான் விகடனில் வேலைக்குச் சேர்ந்து முதன் முதல் மாச சம்பளத்தில் இருவருக்கும் துணிகள் எடுத்துக் கொடுத்து ஆசீர்வாதம் வாங்கியது... என் வாழ்வின் மிக சந்தோஷமான தருணம்.

(பேசுவேன்)

நியூஸ் நூடை

● 'மத்திய அரசின் செயல்பாடுகள் திருப்தியாக இருக்கின்றன; எனவே ராஜினாமா தேவையில்லை' என்ற முடிவை கருணாநிதி எடுத்ததற்கு, காங்கிரஸ் மிரட்டலே காரணம் என்கிறார்கள். மத்திய அரசுக்கு விதித்த கெடு முடிவுக்கு வரும் சமயம் சென்னைக்கு வந்த பிரணாப் முகர்ஜி, ''தி.மு.க உறுப்பினர்கள் ராஜினாமா காரணமாக மத்திய அரசு கவிழ்ந்தால் கூட, இன்னும் நாலைந்து மாதங்களுக்கு தேர்தல்வரை காபந்து அரசாக காங்கிரஸ் நீட்டிக்க வாய்ப்பிருக்கிறது. ஆனால், அதே சமயம், உங்களுக்கு மாநிலத்தில் நாங்கள் கொடுக்கின்ற ஆதரவைப் வாபஸ் பெற்றால், மீதம் இரண்டரை வருடம் இருக்கும் நிலையில் உங்கள் அரசின் ஸ்திரத் தன்மை கேள்விக்குறியதாகிவிடும்'என்று மென்மையான குரலில் சொன்னதுதான் கருணாநிதியின் முடிவுக்குக் காரணமாம். ஆனால், சின்ன சந்தேகமும் உண்டு. கருணாநிதியை மிரட்டுமளவுக்கு காங்கிரஸுக்கு தைரியம் உண்டா?

● சமீபத்தில், புலிகள் பிரச்னையைச் சாக்காக வைத்துக்கொண்டு, தி.மு.க அரசு மீது பாய்ந்த சில 'ஜெ' ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்களை ஆளும் கட்சி கடுப்புடன் பார்க்கிறது. ''இவர்கள் ஒவ்வொருவரும், அரசாங்கத்தைப் பயன்படுத்தி அனுபவித்த சலுகைகள், சிபாரிசுகளைப் பட்டியல் போட்டால் அது பெரிய யுத்தமாக இருக்கும்'' என்கிறார் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர். இந்த நிலையில் சென்னையிலிருந்து வேலூர் வரை சொத்துச் சேர்த்து வைத்திருக்கும், ஒரு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினரை 'வெறிப்படுத்தும்' அளவுக்குச் சில விஷயங்களை லீக் செய்ய ஆளும் கட்சி முடிவெடுத்திருக்கிறது.

● சமீபத்தில் தமிழக பா.ஜ.க. தலைவர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்த போது அதிர்ச்சியான தகவலைச் சொன்னார். ''ரயில் தண்டவாளம் விரிசல்.. என்று இப்போது பல செய்திகள் வருகின்றன. இதற்குக் காரணம் தண்டவாளங்களின் தர அளவைக் கணிசமாக ரயில்வே குறைத்துவிட்டதுதான். இதைப் பற்றி தகவல் அறியும் சட்டத்தில் யாராவது கேட்டால், உண்மை வெளி வரும்.' கேட்கவே அதிர்ச்சியாக இருக்கிறதே.

மிரட்டும் காங்கிரஸ்!



- ஸ்ரீநி

● வே. சித்ரா, கும்மிடிப்பூண்டி

? குண்டு வெடிப்புச் சம்பவங்களில் ஈடுபட்டதாக ஹிந்து அமைப்பினர் கைது செய்யப்பட்டிருப்பது எதைக் காட்டுகிறது?

! அவர்கள் ஹிந்து மதத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதையும் அரசின் பாராபட்சமற்ற செயல்பாட்டையும்.

● கே.ஆர்.பத்மா, சென்னை - 42

? ''பொருளாதார மேம்பாடு அடைவதற்காக அறுபது ஆண்டுகள் காத்திருந்த நாம், மேலும் ஓர் ஆண்டு காத்திருப்பதில் கஷ்டமொன்றுமில்லை'' என்று நிதியமைச்சர் ப.சிதம்பரம் சொல்வது பற்றி...?



* 'ரீல்' ரகசியம்

விஜயகாந்தின் ரகசிய திட்டம்?





* சமாதானம்

! அடுத்த ஆண்டு பதவியில் நீடித்தால் இதையே மறுபடி சொல்வார்கள். என்ன, அறுபது என்பது அறுபத்தொன்று ஆகும். அவ்வளவே!

● கே.துரைசாமி, மங்கலப்பட்டி

? 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்கிற குறள் நடைமுறையில் சரி இல்லை என்பதை ஒத்துக் கொள்கிறீர்களா?

! ஒப்புக் கொள்ளவில்லை. குறளின் அடுத்த வரியையும் சேர்த்துப் படித்தால் உங்கள் சந்தேகம் தீரும். வாழ்வது மட்டுமல்ல; பிறருக்கு வாழ்வளிப்பவரும் அவர்களே.

● ஆர். ஜெஸிந்த்,
ஆவணத்தாங்கோட்டை

? காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி ஒருவேளை முறிந்துபோனால்...?

! அப்படி நடக்கலாகாது என்பதற்காகத் தானே ராஜினாமா நாடகம் சுபமாக முடிந்திருக்கிறது!

● சி. இந்து, கள்ளக்குறிச்சி

? ''பாடலாசிரியர்களுக்கு மரியாதை தரப்படுவது இல்லை'' என்று சினேகன் கூறியுள்ளாரே, இது குறித்து உங்கள் கருத்து?

! நீங்கள் எப்போதும் வெற்றியாளனாக இருக்க வேண்டும். அப்போதுதான் மரியாதை கிடைக்கும். மனிதனின் குணம் அது. இதில் பாடலாசிரியர், கதாசிரியர்,

இயக்குநர் என்ற வேறுபாடு கிடையாது; விதிவிலக்கும் கிடையாது.

● **பி. இராஜேந்திரன்,**
லோயர் அணைக்கட்டு

? மின்வெட்டைப் போக்கும் ரகசியத் திட்டம் தம்மிடம் இருப்பதாகவும், சொன்னால் காப்பியடித்து விடுவார்கள். ஆதலால் சொல்லப் போவதில்லை என்றும் விஜயகாந்த் பேசியது சரியா?

! இது என்ன பரீட்சை பேப்பரா காப்பியடிப்பதற்கு? மின் உற்பத்தி - விநியோகத்தில் ரகசியம் என்ன இருக்கிறது. விஞ்ஞான - பொருளாதார ரீதியான அணுகுமுறை மட்டுமே இருக்கிறது. திரைத் துறையைச் சேர்ந்தவர்கள், அப்பப்போ கொஞ்சம் ரீல் விடுறதைப் பெரிசா எடுத்துக்காதீங்க.



✱ பரபரப்பு

● **பி. பாலாஜி கணேஷ்,**
கோவிலாம்பூண்டி

? 'இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் அக்கா - தங்கையுடன் பிறந்தவர்களே இல்லை' என்று கலைஞர் எல்லோரையும் அசிங்கப்படுத்தி விட்டாரே?

! இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் இங்கு யாருமே இல்லை; விடுதலைப் புலிகளின் வன்முறை, பிரிவினை, பயங்கரவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் மட்டுமே உள்ளனர். இதைப் புரிந்துகொள்ளாத முதல்வர் தம்மைத் தவிர வேறு யாரையும் அசிங்கப்படுத்துவதேயில்லை.



✱ வருத்தம்

❑ ரூ.100/- பரிசு பெறுபவர்:
செ.சத்தியசீலன், கிழவன்ஏரி

● **அ. சுஹைல் ரஹ்மான்,**
திருச்சி - 21

? 'நடப்பு ஆண்டில் பாராளுமன்றம் இதுவரை 34 நாட்கள் மட்டுமே கூடியுள்ளது! காங்கிரஸ் கூட்டணி பாராளுமன்றத்தைச் சந்திக்க முடியாமல் பயந்து ஓடுகிறது'' என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் குருதாஸ் தாஸ் குப்தா குற்றச்சாட்டு கூறியுள்ளாரே?

! இது, வாக்களித்த மக்களுக்கு இழைக்கப்படும் மிகப் பெரிய

✱ வக்காலத்து



அநீதி என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், இதற்குக் காரணம் காங்கிரஸ் கூட்டணி மட்டுமல்ல; நாடாளுமன்றம் சரியாக நடக்கவிடாமல் இடையூறு செய்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களும்தான். இதில் கம்யூனிஸ்டுகளும் விதிவிலக்கில்லை.



★ அவதூறு

● **த.புகழேந்தி, கூகூர்**

? ''தமிழக அரசு கலைக்கப்பட வேண்டும்'' என்று ஜெயலலிதா பேசியிருப்பது பற்றி...?

! அதைவிடப் பெரிய, பரபரப்பான, புரட்சித் தலைவியின் லேட்டஸ்ட் அறிக்கை: ''என்னைக் கைது செய்ய தமிழக அரசு சதி தீட்டி வருகிறது!'' என்பதே! செய்தியில் இடம் பெறுவது நீங்கலாக, இந்த மாதிரி அறிக்கைகளால் புண்ணாக்குப் பிரயோஜனமில்லை!

★ ரூ.50/- பரிசு பெறுபவர்:
இரா.ஜெய்கணேஷ், ராஜபாளையம்

● **என். சண்முகம், சேலம்**

? ''விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்துவது தவறு. அவர்கள் தாய் நாட்டுக்காகப் போராடுகிறார்கள்'' என்று பா.ம.க தலைவர் ராமதாஸ் கூறியுள்ளது பற்றி?

! பயங்கரவாதிகளைவிட, போராளிகள் என்ற போர்வையில் செயல்படும் பயங்கரவாதிகள் ஆபத்தானவர்கள்; அதி பயங்கரவாதிகள்.

● **செ. சத்தியசீலன், கிழவன்ஏரி**

? இன்றைய அரசியலின் தரம் தாழ்ந்து போனதற்குக் காரணம் மக்களா? அரசியல்வாதிகளா?

! தவறான நடத்தில் செல்லும் அரசியல்வாதியும், அவரை நிராகரிக்கும் பக்குவமிழந்து, தரம் குறைந்த மக்களும்.

● **ஜெய்கணேஷ், ராஜபாளையம்** ★

? சென்னை போலீஸ் பூத் திறப்பு விழாவுக்கு வந்த கமிஷனர் சேகருக்கு, புளியந்தோப்பு போலீஸ் ஊழியர்கள் டிஜிட்டல் பேனர் வைத்துள்ளார்களே?

! அது கிடக்கு விடுங்க! இப்பல்லாம் மஞ்சள் நீராட்டு விழாவுக்குக்கூட ஃபோட்டோவோட டிஜிட்டல் பேனர் மின்னுது... பேனருக்கெல்லாம் மதிப்பே இல்லாத காலம் வந்துக்கிட்டே இருக்குங்க.

● **கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு**

? ''தமிழகத்தில் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் பூரண மதுவிலக்குதான் முதல் கையெழுத்தாக இருக்கும்'' என்கிறாரே அன்புமணி?

★ மதுவிலக்கு



! பெண்மணிகளின் காதில் தேனாகப் பாயும் அன்புமணியின் அறிக்கை. 'அடுத்தடுத்த கையெழுத்துகள் எதற்காக இருக்கும்' என்று யோசிக்கும், அறிவுமணிகளின் மூளை.

கண்ணன் வருவான் கதை சொல்லுவான்..!

இன்னும் சில நிமிடங்களில் வழியனுப்ப வந்தவர் களை விட்டுவிட்டு ரயில் புறப்பட்டு விடும். அதற்கப்புறம் ஒன்பது மாதங்களாக பேச நினைத்துப் பேசாதவற்றையெல்லாம் இளங்கோவிடம் பேசலாம்.

சுமதிக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. ரயில் புறப்பட சில நொடிகளே மிச்சமிருக்கும் க்ஷணத்தில், ரயிலை விட்டு இறங்கி, ரம்யாவுக்கு மட்டும் கேட்கும்படி, 'போய்ட்டு வரவேண்டி 'ரெட்டை வால் குரங்கு டு த ஸ்கொயர்' என்று சொல்லி விடலாமா?

'முட்டாள் சிடுமூஞ்சி டு த இன்பினிட்வ்' என்று வழக்கம் போல், தன் பாட்டை முடிப்பாளா? அல்லது இந்த ரெயில் நிலையமே உறைந்துபோய் நிற்குமளவு, 'அய்யோ அக்கா பேசிட்டாங்க' என்று அலறுவாளா? அவள் அலறினால் அம்மாவும் பிறரும் நம்புவார்களா?

'உங்க அக்கா பேசணும்னு சமயபுரத்தா வாசல்ல, செவ்வாய்க்கிழமை விடாம மண் சோறு சாப்பிடறேன். ஆத்தா கண்ணை திறக்கலையேடி'' என்று வழக்கம்போல் அம்மா புலம்பவும் கூடும். இப்படியெல்லாம் அவர்களைப் படுத்துவதில், எனக்கு மட்டும் மகிழ்ச்சியா என்ன? எல்லாம் இதோ இந்த இளங்கோவுக்காகத் தான். ஓர் ஊமையைத் திருமணம் செய்துகொண்டதற்கான தியாகப் பெருமிதம் கிஞ்சிற்றும் இல்லாமல், என்னோடு என் சிகிச்சைக்காகப் புறப்பட்டுள்ளானே இவனுக்காகத்தான். இது மருத்துவப் பயணம் அல்ல; தேனிலவு கொண்டாட்ட பயணம் என்று இப்பொழுதே சொல்லி விடலாமா? வேண்டாம். மும்பைக்கு சென்றதும், ஹோட்டலில் அறை எடுத்துத் தங்குவோம் அல்லவா? அப்போது சொல்லலாம்.

'எப்படி பேச்சு வந்தது?' என்று கேட்பான்.

'அதிர்ச்சியில்தானே பேச்சுப் போச்சு. இப்போ நீ முத்தமிட்ட அதிர்ச்சியில் போன பேச்சு வந்துட்டுது' என்று சொல்ல வேண்டும்.

நடைமேடையில் நிற்பவர்கள் பின்னுக்கு நகர, ரயிலின் வேகமும் ஓசையும் கூடின.

''சுமதி, நீ கீழ் பெர்த்ல படுத்துக்கோ'' என்றான் இளங்கோ.

சுமதி மேல் பெர்த்தை காட்ட, ''மேல ரெண்டு பேரைத் தாங்குமா தெரியலையே'' என்றான்.



சாமுண்டீஸ்வரி

'அய்யே... ஆசை தோசை' என்பது போல் அபிநயித்து, அவன் கன்னத்தில் இடித்தாள்.

மேல் பெர்த்தில் படுத்துக்கொண்டே சுமதியின் கன்னத்தை நிமிண்டி 'குட்நைட்' சொல்லிவிட்டு இளங்கோ படுத்துக் கொண்டான்.

ரயிலின் தடதட... சுமதியை இம்சித் தது. இருட்டிலேயே தலைக்கு அருகே வைத்திருந்த கைப்பையைத் துழாவி னாள். டைரி தட்டுப்பட்டது. எடுத் துப் புரட்டினாள்.

2008 ஜனவரி மூன்று :

எங்கள் தெருவில் நடைபெறும் கோலப் போட்டியில், நானே முதல் பரிசு பெற்றுவிட வேண்டுமென்ற முனைப்பில், மார்கழி முதல் நாளி லிருந்தே நான் போடும் கோலங் களை, சாலையின் ஓரமாக, மெதுவாக பைக்கைச் செலுத் திக்கொண்டே ரசிக்கும் இளங்கோவுக்கு, இன்று தர்மசங்கடம். தொண் ணூற்றாறு புள்ளிகள் வைத்து எங்கள் வீட்டு வாசலில் தொடங்கி எதிர்வீட்டுச் சுவரருகே என் கோலத்தை முடித்திருந்தேன். இரவுப் பணி முடித்து, வீடு திரும்பிய இளங்கோ, பைக்கை பக்கத்து வீட்டு மதிற்சுவரருகே நிறுத்தி விட்டு, கோலத்தை மிதிக்காமல் நடந்து சென்றான். அவன் 'சாமி' இல்லையென்று சொல்கின்ற கட்சி. படைப்பை மதிக்கிறவன் எப்படிக் கட வுளை வெறுக்கிற வனாக இருக்கமுடி யும்?



2008 ஜனவரி 7 :

இன்று இளங்கோவின் பைக் திருட்டுப் போய்விட்டது. ''நீ ஏண்டா வீட்டுக்கு மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கிட்டு வராம, தெருமுனையிலயே நிறுத்திட்டு வந்தே?'' என்று இளங்கோவின் அம்மா கத்தினார்.

இளங்கோ, கடைசிவரை தன் பைக்கை நிறுத்திவிட்டுப் போனதற்கான காரணங்கள், நானும், எனது தொண்ணூற்றாறு புள்ளிக் கோலமும் என்று சொல்லவேயில்லை.

2008 ஜனவரி 16 :

இன்று பொங்கல் விழா. கோலப் போட்டியில் பரிசுகள் பெற்றவர்களை அழைத்து, விருதுகள் வழங்கும் விழா. பேச்சாளர்கள் பட்டியலில் இளங்கோவின் பெயரும்.

பேச வந்த இளங்கோ, போட்டியில் பரிசுபெறாதவர்கள் வருந்தத் தேவையில்லை. பங்கேற்பு என்பதே பெரிய தகுதிதான் என்று ஏதோ சொல்லும்போது, ஏன் என்னையே பார்க்கவேண்டும்? ''தமிழில் எனக்குப் பிடித்த கவிதைகள் இரண்டு. முதலாவது கனியன் பூங்குன்றன் எழுதிய 'யாதும் ஊரே; யாவரும் கேளீர்' என்ற பாடல் என்று சொல்லிய இளங்கோ, அந்தப் பாடலின் மீது தனது புதுமையா பார்வையைச் சொல்லியபோது கூட்டம் கைதட்டியது. இரண்டாவது, பாவலர் வரதராசன் எழுதிய மண்ணில் இந்தக் காதலன்றி பெண்மையன்றி யாரும் வாழ்தல் கூடுமோ? திரைப்பாடல். இளங்கோ அந்தப் பாடலின் மெட்டுக்கான ராகத்துடனேயே அந்தத் தொடரை உச்சரிக்க, கூட்டம் அவரைக் கவனித்தது. ஆனால், அவரின் கண்கள் என் கண்களையே கவனித்தன.

மாற்றுக் கலாச்சார இனங்களை அழிப்பதும், பூண்டற்று ஒழிப்பதுமே தலையாய நோக்கங்கள் என்று, வானத்தின் கீழ் உள்ள அத்துனை இனங்களும் தங்கள் ஆயுதங்களைத் தீட்டிக்கொண்டிருந்த காலகட்டத்தில், நவீன கருத்தியலை, மானுட நேய கருத்தியலை, முன்வைத்தது தமிழனின் -கனியனின் குரல். அதுதான் முதல் பாடல்.

விஞ்ஞானத்தின் அசுர வளர்ச்சிகளின் எல்லைமீறிய காலக்கட்டத்தில், நவீனமயமாதல், உலகமயமாதல் என மானுடமே எந்திரமயமானதொரு சூழலில், மானுட அகவாழ்வின் கவிதைத் தன்மையைப் புதுப்பித்து, வாழ்வின் மீதான பிடிப்பையும் காதலையும் கூடுதலாக்கி, வாழ்வதற்கான தேவையை நமக்கு உணர்த்துகின்ற குரல் தமிழனின் - வரதராசனின் குரல். இரண்டாவது பாடல்.

14.02.2008

இன்று இளங்கோ கொடுத்த பரிசை மறக்கமுடியாது. ஒலிப்பேழை குறுந்தகடு. அதில் 'பனி இல்லாத மார்கழியா', 'அன்றொரு நாள் இதே நிலவில்', 'ஆகாய பந்தலிலே பொன்னூஞ்சல் ஆடுதம்மா', 'கண்ணன் வருவான்', 'கங்கை கரைத் தோட்டம்' பாடல்களை மீண்டும் மீண்டும் கேட்டேன். தமிழும் இசையுமாக மட்டுமே இருந்து தேனாகத் தித்தித்தப் பாடல்கள், இப்பொழுது தீயும் நஞ்சுமாக என்னை வதைக்கின்றன.

15.02.2008

வீட்டில், எனது திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இளங்கோ படித்தவர்; பண்புள்ளவர்; நல்ல பணியில் இருப்பவர்; அழகானவர். அத்தனைக்கும் மேலாக எனது நெஞ்சுக்கு நெருங்கியவர் என்ற உண்மைகளையெல்லாம் சொன்னால், சொல்வதா? அப்பாவை நினைத்தாலே அடிவயிற்றில் வினோத அச்சம் பரவுகிறது. அப்பா, பார்த்திருக்கிற வரன், அவரின் சமூக வேட்கைகளை நிறைவு செய்யும் வரன்.

தூக்கம் கலைந்த இளங்கோ, சுமதி விளக்குப் பொருத்தி படிப்பதைப் பார்த்து

எழுந்து நின்றான்.

''என்ன தூக்கம் வரலையா?''

சுமதி தலையாட்டி னாள். அமைதியாக அவ ளைப் பார்த்து நின்றான்.

இளங்கோவின் முகம் சுமதியின் முகத்திற்கு இணையாக இருப்பதாக அவனது உயரம் துணை செய்தது.

முதல்முத்தம் ஓடும் ரயிலில் இருக்குமோ என்று நினைத்தவள், ஒருவேளை விளக்கை அணைத்தால், இளங்கோவுக்கு அந்தத் துணிச்சல் வரலாம் என்று நினைத்து, சுமதி விளக்கை அணைத்தாள்.

இளங்கோ, சுமதியின் முகத்தருககே முகம் வைத்து தலையைக் கோதி, ''மும்பையில இருக்கிற என் ஃப்ரெண்ட் அழகிய நம்பி, திறமையான ஸ்பீட் தெரபிஸ்ட்... அவன் கண்டிப்பா சரிபண்ணிடுவான்'' கூந்தலை வருடிய இளங்கோவின் விரல்கள், சுமதியின் முகத்தில் தவழ, சூடான அவளின் கண்ணீரை உணர்ந்து ''உஸ் அழக்கூடாது'' என்றான்.

16.02.08

இன்று என் அகவாழ்வின் சிக்கல்கள் விலகிய நாள். டேப்ரிக்கார்டரின் ப்ளக் பாயிண்டைச் செருகும்போது, இணைப்பில் மின்கசிவு ஏற்பட, அதிர்ச்சி அலைகள் உடலைத் தாக்கி, வீழ்ந்த என்னைச் சுற்றி உறவுகள். டாக்டர் ஊசி போட, மயக்கம் தெளிந்தது. என்றாலும் பேசாமல் எல்லோரையும் பார்த்துக்கொண்டேயிருந்தேன். அந்தத் தருணத்தில்தான், அப்பா, என்னைப் பார்த்து அழுகையோடு புலம்பிய சொற்களில்தான் எனக்குப் பொறிதட்டியது.

தீர்மானித்துக்கொண்டேன். அப்பா, மீண்டும் மீண்டும் புலம்பினார். 'அய்யோ கரண்ட் ஷாக் அடிச்சதால, என் பொண்ணு ஊமையாயிடுச்சே! இனிமேல் என் பொண்ணுக்கு எப்படிக் கல்யாணமாகும்? எவன் வருவான்... எனக்கு மாப்பிள்ளை யாக... எவன் வருவான்...?

அப்போதே தீர்மானித்தேன். ஒருவன் வருவான். அதுவரை நடித்தாக வேண்டும். ●

கிரேஸியைக் கேளுங்கள்

ஊசி போட



செ.சத்தியசீலன், கிழவன்ஏரி

கிரேஸி உங்களுக்கு மழை பிடிக்குமா... குடை பிடிக்குமா...?

வேறு யாராவது குடை பிடித்தால், எனக்கு மழை பிடிக்கும்.

சி. கார்த்திகேயன், விருதுநகர்

சிறு வயது பல்லாங்குழி ஆட்டம் பற்றி...?

இளமையில் பல்லாங்குழி ஆட்டம்; முதுமையில் ஆட்டம் ஓய்ந்ததும், பல்லெல் லாங்குழி.'

எஸ்.ஜானகி, உடுமலைப்பேட்டை

நகைச்சுவையை ரசிக்கும் பலரால், நகைச்சுவையாகப் பேச முடிவதில்லையே... ஏன்?

கடவுளையும், காமெடியையும் 'விண்டவர் கண்டிலர்.'

நிரோஷா, சென்னை

'காக்கை உட்காரப் பணம் பழம் விழுந்தால்' நமக்கு அதிர்ஷ்டம்தானே...?

சொல்லமுடியாது. நாம் குருவியாக இருந்தால், அதுவே குருவி தலையில் பனங்காயாகிவிடும்.

ஆர்.ராமசுப்ரமணி, திருவாரூர்

யாரிடமாவது, கேட்கக்கூடாத கேள்வியைக் கேட்டு, வாங்கிக் கட்டிக் கொண்ட அனுபவம் உண்டா...?

நண்பனின் கல்யாணத்தின்போது, சத்திரத்தில் வேட்டி நழுவத் தூங்கிக்கொண்டிருந்த ஓர் ஆசாமியை வற்புறுத்தி எழுப்பி, ''நீங்கள் கட்டிக்கொண்டிருப்பது உங்கள் வேட்டிதானா?'' என்று தில்லாகக் கேட்டேன். கேட்கக்கூடாத எனது கேள்வியைக் கேட்ட அந்த ஆசாமி, துளிக்கூடக் கோவப்படாமல், தூக்கக் கலக்கத்திலும் தெளிவாக, ''இல்லை, இது உங்கள் வேட்டிதான்'' என்று தளுக்காகக் கூறிவிட்டு, எனது வேட்டியைக் கழட்டி என்னிடம் பவ்யமாகத் தந்துவிட்டு, அங்கு தொங்கிக் கொண்டிருந்த, என் நண்பனின் வேட்டியை, உரிமையோடு உருவி சுபாவமாகக் கட்டிக் கொண்டு பழயபடி தூங்க ஆரம்பித்தார். ஆக அன்று, அவரிடம் 'கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டதால், வாங்கிக் கட்டிக் கொண்டேன்' எனது வேட்டியை.



என்.பாலகிருஷ்ணன், மதுரை

பிறரது பாராட்டை எதிர்பார்க்கும் பலவீனம் உங்களிடம் உள்ளதா?

பலமான 'பாராட்டை எதிர்பார்த்து ஏங்கும் பலவீனம், அடியேனுக்கு அபரிமிதமாக உண்டு. 'குழந்தையும் தெய்வமும் மட்டுமில்லை, கிரேஸியும் கொண்டாடும் இடத்திலே.'

அ. யாழினி பர்வதம், சென்னை

டாக்டரிடம் ஊசி போட்டுக் கொள்ளப் பயப்படுவீர்களா?

அதற்காகத் தையற்காரரிடம் ஊசி போட்டுக் கொள்ள முடியுமா என்ன?

ரா. பிரசன்னா, மதுரை

'பறக்கும் தட்டுனு' சொல்றாங்களே. அந்தத் தட்டுல ஏதாவது போட்டுச் சாப்பிடலாமா கிரேஸி?

வேறு கிரகத்திலிருந்து வருவது பறக்கும் தட்டு. இன்னொருத்தர் வீட்டு

பயமா?



(கிரகம் என்றால் வீடு) தட்டில் எதுக்காகச் சாப்பிடறீங்க. எச்சில் வேண்டாமே! மேலும் பறக்கும் தட்டில் சாப்பிட்டால் ஒரு பிரச்னை இருக்கு. பசி வந்தால் தட்டும் பறந்து போகும்...!

உஷா முத்துராமன், திருநகர்

கடிதம் எழுதும் பழக்கமே தேய்ந்து போய்விட்ட, இக்காலத்தில் பாதாளம் போன்ற தபால் - பெட்டிகள் தேவைதானா...?

'நேரா போய் இடது பக்கம் திரும்பினா, ஒரு தபால் பெட்டி வரும். அதை ஒட்டிய சந்துல அஞ்சாம் நம்பர் வீடுதான் என்னுது' என ஏதோ ஒரு விதத்தில் சரியான அட்ரஸுக்கு வழி காட்டுகிறது தபால்பெட்டி. இருந்துவிட்டுப் போகட்டும்.

பி. நாகலெட்சுமி, அண்ணாநகர்

ஆத்திரத்துக்கும், புத்திக்கும் என்ன சம்பந்தம்...?

'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டும்' தான்; இதயம் இருக்காது. ○

செல்ஃபோனில் ஆசிர்வாதம்!

ஆனந்தவிகடன் பட்டறையில், தான் எப்படி படிப்படியாக உருவானேன் என்று சிம்புதேவன் நல்லதொரு சொல்லோவியம் தீட்டிவிட்டார்.

- குவளைஎழில், சென்னை

தீபாவளியன்று, பெரியவர் காலில் சிறியவர் விழுந்து ஆசீர் வாங்குவார்கள். இப்போது செல்ஃபோனில் அல்லவா ஆசீர்வாதம்?!

- அ. சம்பத், திருவரங்கம்

தீபாவளியன்று, 'கங்கா ஸ்நானம் ஆச்சா' என்று கேட்பார்கள். அந்த நாளில், கங்கையோடு காவேரிக்கும் தொடர்பு உள்ளது என்பதை, காஞ்சி பெரியவர் விளக்கிய விதம் தித்திப்பு.

- கே.எஸ். கோவர்த்தனன், சென்னை

சந்திராயனின் வாயு வேகம், மனோவேகம் முதலியவைகளைக் காட்டிலும், விலைவாசிகளின் வேகம், மிக அதிகம் என்பதைச் சுட்டிக்காட்டும் கார்ட்டூன் சுவாரஸ்யமானது.

- கே.வி. ராமன், சென்னை

'வைகோவின் வடிகட்டிய தேசத் துரோகம்' என்ற செய்தியைப் படித்தேன். மக்களைத் தூண்டிவிட முற்படும் சுயநல அரசியல்வாதிகளுக்கு, இது ஒரு நல்ல சாட்டையடி!

- த. புகழேந்தி, கூகூர்

இந்தியாவின் மிகச் சிறந்த மாநிலமாக குஜராத் மாறிக் கொண்டிருப்பதற்கு, 'பெண்கள் பெயரில் சொத்து பதிவு செய்தால், பதிவுக் கட்டணம் கிடையாது' என்னும் திட்டம் ஒன்றே போதும்.

- பள்ளிபாளையம் ரஞ்சனிப்பிரியன், ஈரோடு

கருணாநிதி, கடும் விலைவாசி உயர்வு, ஸ்பெக்ட்ரம் (டெலிகாம்) ஊழல், கடும்மின்வெட்டு இவற்றிலிருந்து திசை திருப்ப இலங்கை பிரச்னையில் பேசுவதாக எதிர்கட்சிகள் கூறுவது சரிதான்!

- திருநகர் வெங்கட்,

சூர்யா, கருவுற்றிருந்த தனது மனைவி ஜோதிகாவைக் கவனித்துக் கொண்ட விதத்தையும், குழந்தை தியாவை வளர்க்கும் விதத்தையும் பார்க்கும்போது அவர் 'குழந்தை வளர்ப்பது எப்படி?' என்று ஒரு புத்தகம் எழுதலாம்.

- இராஜேந்திரன், லால்குடி

அஞ்ஞான இருள் நீக்கும் ஞான ஒளியையும், நம்பிக்கையும்... காட்டும் அந்த காசர சம்ஹார மூர்த்தியை, தீபாவளியன்று, கல்கியில் பார்த்ததன்மூலம் பாவ மன்னிப்பு உண்டு என்பது உறுதியாகிறது.

- என். பாலசுப்பிரமணியன், சென்னை

லாராவின் சாதனையை முறியடிக்க சச்சின் 21 மாட்சுகள் அதிகம் விளையாடி இருக்கலாம். ஆனால், லாராவைவிட சச்சின் சராசரி ரன் விகிதம் அதிகம் வைத்துள்ளார்.

- ஆர். நாகராஜன், சென்னை

மாஃபா பாண்டியராஜன் எழுதும் கட்டுரைத் தொடர், வேலை தேடும் இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

'விடுதலைப்புலி ஆதரவுப் புயலில் நிலை தடுமாறும் தமிழக அரசியல்வாதிகள் மத்தியில், ஞானசேகரன் மட்டும் தெளிவாகச் சிந்தித்துத் தைரியமாகப் பேசியுள்ளார்' என்று தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஜெயலலிதாவை மறந்துவிட்டீர்களா?

- எஸ். சையது முகமது, சென்னை

ஆஃபீஸ், பிஸினஸ் என்று அலைந்து

பெண்மையின் மகத்துவத்தை அறியாத ஆண்களுக்குச் சூர்யாவின் அணுகுமுறை ஒரு பாடம்.

- கோமளா ரங்கநாதன், சென்னை

'ரயில்' ராதிகா தொடர், ஆரம்பத்திலேயே சூப்பர் எக்ஸ்பிரஸ் வேகத்தில் பயணிக்கிறது. மேலும் மேலும் சுவையான ரயில் பயணம் இருக்குமென நினைத்தாலே இனிக்கிறது.

- எஸ். அமிர்தா சௌந்தர், வடபழனி



மறைந்த டைரக்டர் ஸ்ரீதருக்கான அஞ்சலியில், 'கிரியேட்டிவிட்டி அவரது மூளையில் இல்லை, ஆன்மாவில் இருந்தது' என்ற வரிகள் என் இதயத்தை வருடியது.

-லெ.நா.சிவகுமார், சென்னை

விலைவாசி உயர்வு சந்திர மண்டலத்தையும், தாண்டிவிட்டது என்பதற்கு கார்ட்டூன் மிகவும் அருமை.

- வி.ஜி. சத்தியநாராயணன், சென்னை

வட்டமேஜை

இனிப்பான ரீவைண்ட் பகுதியில் மீனாட்சி சுந்தரம் அவர்களின் சமயோசிதம் பாராட்டத்தக்கது.

- எம்.ஜி. பரத், திண்டுக்கல்

லக்ஷ்மி மோகன் எழுதிய '50 kg தாஜ்மஹால்' மிகவும் பயனுள்ள, நகைச்சுவை சொரிய எழுதப்பட்ட அற்புதமானத் தொடர். அருணா, ஹரி தம்பதியர் நம்மை ஊக்கப்படுத்தும் கதாபாத்திரங்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அர்த்தம் பொதிந்தவை!

- சாரதா சுந்தரேசன், பெங்களூரு





வெளிச்சத்தின்

மலர்விழி, தான் உண்டு; தன் இரு குழந்தைகள் கணவர் உண்டு என்று வீடே உலகமென இருந்த ஒரு சாதாரண இல்லத் தரசி. திடீரென கணவர் பார்த்து வந்த கம்பெனி இழுத்து மூடப் பட்டுவிட, தம் அன்றாட வாழ்க் கையை நடத்துவதற்கே கஷ்டப் பட்டு திண்டாடிப்போனார். அப் போது அவரைக் காக்கும் கரங்களாய், கை தூக்கிவிடும் ஒரு தோழியாய் செயல்பட்டதுதான் 'ANEW' (Association for non traditional employment for women) ஆம்! 'ANEW'வில் நடத்தப் பட்ட ஹோம் நர்ஸிங் என்ற பயிற்சியைத் திறம்பட முடித்து இன்று மாதம் 3000 ரூபாய் சம்பாதித்து, குடும்பத்துக்கு உறுதுணையாக இருக்கிறார்.

''கார் ஷெட்டில் எட்டு ஏழைப் பெண்களோடு முதன் முதலில் ஆரம்பிக்கப் பட்ட 'ஹோம் நர்ஸிங்' பயிற்சி இன்று 3,138 பெண்கள் வரை வளர்ந்திருக்கிறது. இது, ஒரு நோயாளியை, வயதான பெரி யோர்களை அவர்களது வீட்டிலேயே எப்படிக் கவனித்துகொள்ள வேண்டும் என் பது பற்றிய நான்கு மாதக் காலப் பயிற்சி.

மலர்விழியைப் போலவே, ஆயிரக் கணக்கான பெண்களின் வாழ்க்கையில் தீப ஒளி ஏற்றியிருக்கும் 'ANEW'மையத்தின் ப்ராஜெக்ட் மானேஜராகப் பணியாற்றி வரும் சுஜீதா ரவீனிடம் மையத்தின் செயல் பாட்டை பற்றிக் கேட்டபோது:

''1997-ம் ஆண்டு, வீட்டு வேலைகளில் ஈடுபடும் பெண்களை முன்னேற்றவும், படிப்பதில் ஆர்வம் இருந்தும், குடும்பத்தில் நிலவிவரும் வறுமையின் காரணமாக,

படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிட்ட பெண்களின் வாழ்வை மலர செய்யவே, இந்தச் சேவை மையம் துவக்கப்பட்டது.

'ஷாஃப்ட்வேர் ஸ்கில்ஸ்' பயிற்சியின் வழி, கணினி உபயோகிக்கும் முறையையும் மற்றும் கணினியை உபயோகித்து அலுவலகத்தில் செய்யக்கூடிய வழிமுறைகளையும் சொல்லித் தருகிறோம். மூன்று மாதக் காலம் நடத்தப்படும் இந்தப் பயிற்சிக்கு Cognizant மற்றும் satyam நிறுவனங்கள் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றனர். அலுவலகத்தில் பணிபுரிய ஆங்கில அறிவு ரொம்பவும் அவசியமான ஒன்று என்பதால், இந்தக் கணினி பயிற்சியில் பெண்களுக்குக் கூடுதலாக ஆங்கிலத்தில் பேசவும் சொல்லிக் கொடுக்கிறோம்.

னை பெயர்!

நாங்கள் பல குடிசை பகுதிகளுக்கும் நேரில் சென்று, பெண்களைத் தேர்வுசெய்து இலவசமாகப் பயிற்சி அளித்து, வேலையும் வாங்கித் தருகிறோம்.

இரண்டு மாதங்களுக்கு முன் 'ஹவுஸ் கீப்பிங்' என்ற புதிய பயிற்சி திட்டத்தையும் ஆரம்பித்தோம். ஹோட்டல் அறைகளைச் சுத்தமாகப் பராமரிப்பது எப்படி? என்று சொல்லிக்கொடுக்கப்படும் இந்த பயிற்சியில் ஹோட்டல் சவேரா, கிரீன் பார்க் மற்றும் ரெயின் ட்ரீயில் சிறப்புப் பயிற்சிகள் மூன்று மாதக் காலங்களுக்கு 3,000 ரூபாய் ஊக்கத் தொகையோடு சேர்த்து வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின்பும் நல்ல ஹோட்டல்களில் பெண்களுக்கு வேலை கிடைத்துவிடுகிறது. காலை ஷிப்டுகளில் மட்டும்தான், பெண்கள் பணிபுரிகிறார்கள். இதில் அவர்களது பாதுகாப்புக்கு எந்தவித இடைஞ்சல்களும் இருப்பதில்லை'' என்கிறார்.

இவர்களிடம் கார் மற்றும் ஆட்டோ ஓட்டுவதற்கான பயிற்சி பெற்றவர்கள், ஹோட்டல் சவேராவில் Valet டிரைவர்ஸ்களாகவும், சென்னை விமான நிலையத்தில் சிலரும்... திறம்பட கார் ஓட்டி கொண்டிருக்கிறார்கள். இதுவரை இந்தப் பயிற்சியின் மூலம் 54 பெண்கள் பயனடைந்திருக்கிறார்



★ சுஜிதா ரவீன்

கள். பத்தாம் வகுப்பையோ பனிரெண்டாம் வகுப்பையோ தாண்டி, உலகை பார்க்காத வறுமையான சூழலில் வாழும் பெண்கள், பல்வேறு பயிற்சிகளின் வாயிலாக இன்று மாதம் 3,000 முதல் 5,000 வரை சம்பாதித்து, நல்ல நிலையில் இருப்பதுதான் இம்மையத்தின் வெற்றி எனலாம்.

பத்தாம் வகுப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு, பாத்திரம் தேய்க்கப் போய்விடும் பெண்களை எங்களிடம் விட்டுவிடுங்கள். மூன்றே மாதத்தில் அவர்களுக்கான புது பாதையை நாங்கள் அமைத்துக் கொடுக்கிறோம் என்கிற 'ANEW'வின் பார்வை என்றும் புதியதுதான்.

- நளினி சம்பத்குமார்

ஷடங்க தேவதா யுக்தா என்ற நாமத்தை அனுபவிக்கிறபோது, பகவதி என்ற நாமத்தின் பொருளும் ஞாபகம் வருகிறது. பக என்றால் ஆறு என்பதை ஏற்கெனவே பார்த்தோம். ஆறுவிதமான குணங்கள், ஆறுவிதமான ஸ்வரூபங்கள் என்று எல்லா ஸம்பிரதாயங்களிலும் உண்டு. வைஷ்ணவம், சைவம், சாக்தம் எல்லாமே இந்த ஆறு குணங்களைப் பேசும். இந்த ஆறு குணங்களுக்கு அதி தேவதைகளாக இருக்கக்கூடியவர்களான ஆறு தேவதைகள் புடைசூழ இருக்கிறாள் அம்பாள்.

ஷாட்குண்யபரிபூரிதா - இதுவும் ஆறு என்கிற எண் தொடர்புடைய நாமம். ஆறுவித குணங்களால் ஆராதிக்கப்படக் கூடியவள் என்று இதற்குப் பொருள்.

அம்பாள் பண்டாஸுர வதத்துக்காக போர் புரியச் செல்கிறபோது அவளுடன் ஓர் அரசனுக்குரிய ஆறு குணங்களும் தேவதைகளாக அணி திரண்டு செல்கின்றனர்.

ஓர் அரசனுக்கு என்னென்ன குணங்கள் தேவை? போருக்குப் போகிற மன்னன், என்னவெல்லாம் செய்யத் தயாராய் இருக்க வேண்டுமோ, அதற்கு ஷடங்க வித்யை என்று பெயர்.

முதல் யுக்தி அல்லது குணம் சமாதான முயற்சி. ஒருவேளை, எதிரி மன்னனிடம் சமாதானம் செய்துகொண்டு போரைத் தவிர்க்கமுடியுமானால், அதையே ஒரு மன்னன் முதலில் செய்யவேண்டும்; தூது அனுப்பவேண்டும். ராவணனுக்கே தூது அனுப்பினார் ராமபிரான். இதற்கு 'ஸந்தி செய்தல்' என்று பெயர்.

சமாதானம் செய்ய முடியாது என்றால், அடுத்ததாக இருக்கவேண்டிய குணம் யுத்தம். போருக்குப் புறப்பட்டுத் தீரத்துடன் போகவேண்டும்.

யுத்தத்துக்குப் போகவேண்டுமானால் சைன்யம் வேண்டும். இதற்கு யானம் என்று பெயர். தூதர்கள் மூலம் இந்த சைன்ய பலத்தை எதிரிக்கு உணர்த்துவார்கள்.

அடுத்து, யுத்தத்துக்குப் போகும் அரசர் என்ன பண்ணுவார் என்றால், எதிரி இருக்கிற கோட்டை அல்லது ராஜ்யத்துக்குச் சற்று முன்னாலேயே பாசறை அமைத்து, அங்கே சிறிது காலம் தங்குவார். இது எதற்கு என்றால், எதிரி அரசர் இவரது சைனியத்தைப் பார்த்து, அதன் பலத்தைத் தெரிந்துகொண்டால், ஒருவேளை யுத்தமே வேண்டாம் என்று முடிவுசெய்து சமாதானம் பண்ணிக்கொள்ளலாம்.

அந்தக் காலத்தில், போர் என்றால் நேரே போய் மோத மாட்டார்கள். ராமர் கூட இலங்கைக்குப் போனபோது, முதலில் பாசறை அமைத்துத் தங்கினார். ஒரு நாள் தங்கி, அங்கதனைத் தூது அனுப்பி, அப்புறம்தான் சண்டை ஆரம்பமாயிற்று.

வீரமகேந்திரபுரத்துக்குப் போன முருகப்

அளப்பரிய ஆனந்தம் அளிப்பவள்!

ஸ்ரீ லலிதா

தங்கள் பக்கத்துக்குப் பலம் சேர்த்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு சேர்த்துக் கொள்வார்கள்.

இதையெல்லாம் மஹாபாரதத்தில் பார்க்க லாம். கிருஷ்ணர் முதலில் ஸந்தி செய்து பார்த்தார். அது நடக்காது என்று தெரிந்து போயிற்று. எவ்வளவு ஸைன்ய பலம் இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காகத் தான் தூது போகிற மாதிரி போனார். துரி யோதனன் அதற்கும் மசியவில்லை. விச்வ ரூப தரிசனத்தைப் பார்த்த பிறகும் மசிய வில்லை!

ஸந்தி, யானம், ஆஸனம் எல்லாம் அடி பட்டுப் போயிற்று என்றதும் சுவாதீனம் என்ற யுத்தம்-நேருக்கு நேர் போர் தொடங் கும். அப்படித் தொடங்கும் முன் எவ் வளவு பேரைத் தங்கள் பக்கம் சேர்த்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு பேரையும் சேர்க்கும் முயற்சி. யுத்தம் அறிவிக் கப்பட்டுள்ளது; இன்ன தேதியில் தொடங்கும் என்பதைச் சொல்லி விட்டு, போரிடப் போகும் இரு மன் னர்களும் ஆளுக்கொரு பக்கமாகப் போய், தங்கள் கட்சிக்கு எவ்வளவு பலம் சேர்க்க முடியுமோ சேர்க்கப் பார்ப்பார்கள்.



பெருமானும் அங்கே பாசறை அமைத்துத் தங்கினார். இப்படி, வார்த்தையால் சைன்ய பலத்தைச் சொல்லாமல், ஒரு சமிக்ஞை மூலம் எதிராளிக்கு உணர்த்துவது ஆஸனம் என்ற நிலை- பாசறை அமைத்துத் தங்கும் நிலை.

பாரதம் உணர்த்தும் மேல்நிலைகள்

இதற்கும் அடுத்த நிலை, ஆஸனம் என் கிற நிலையில் உள்ள படைகளை அழைத் துக்கொண்டு நேரடியாகப் போருக்குச் செல் வது. இதைத் தவிர வேறு வழியில்லை என்கிற கட்டத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை. இந்த நடவடிக்கையை மேற் கொள்வதற்கு முன், எவ்வளவு தூரத்துக்குத்

துரியோதனன் புறப்பட்டுப் போனதும், அர்ஜுனன் புறப்பட்டுப் போனதும் அதற் காகத்தான். இப்படி பலம் சேர்க்கக்கூடிய தன்மைக்கு ஸமாச்ரயம் என்று பெயர். தங்கள் பக்கத்துக்குப் பலத்தை ஆச்ரயித்துக் கொள்ளுதல்.

இப்படியாக, ஸந்தி, யானம், யுத்தம், ஆஸனம், ஸமாச்ரயம், சுவாதீனம் என்ற ஆறுவிதமான ராஜாங்க குணங்கள் உண்டு என்றால், அந்த ஆறு ராஜாங்க குணங் களின் தன்மை நிறைந்தவளாக ஷடங்க தேவதா யுக்தாவாக அம்பாள் இருக்கிறாள்.

ஆறுவிதங்களில் ஆட்கொள்பவள்

இதற்கு என்ன அர்த்தம்...? சில பேரை

மூன்றாம் பாகம் சுதா சேஷய்யன் 7

சமாதானமாகத் தன் பக்கம் அழைத்துக் கொள்கிறாள் அம்பாள்; சில பக்தர்களுக்கு, ஒரு சைன்யம் அம்பாளிடம் இருக்கிறது என்று காண்பிக்கிறபோது, அந்த பயத்தில் தான் பக்தி வரும்! இன்னும் சில பேருக்கு, அம்பாள் ஆஸனத்தில் இருக்கிறபோது தான் உண்மை உணர்வு வரும். இன்னும் சில பேருடன் அவள் சண்டை போட்டு, தண்டனை கொடுத்துத்தான் தன் பக்கத்தில் சேர்த்துக்கொள்ள முடியும்! இப்படி- ஒவ்வொருவருக்கும் எது எது தேவையோ, அதன்படி அளித்து அம்பாள் அவர்களைத் தன் பக்கம் அழைத்துக்கொள்கிறாள். இவ்வாறு ஆறுவிதமான யுக்திகளை பக்தர்களிடம் காட்டி அருள்பவள் **ஷடங்க தேவதா யுக்தா**

அளப்பரிய ஆனந்தம் : நிருபமா - எந்தவிதமான உபமானமும் சொல்லமுடியாதவள். (நிர்-உபமா) அவளுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை.

நிர்வாண ஸுக தாயினி - நிர்வாணமாகிற ஸுகத்தைத் தரக்கூடியவள். நிர்வாண என்ற சொல்லுக்கு, 'வடிவமே இல்லாத' என்று அர்த்தம். வாணம் என்றால் வடிவம்; நிர்வாணம் - வடிவமற்றது.

அதனால்தான், புத்தர், மஹாவீரர் போன்றோர் ஞானத்தை அடைந்தனர் என்று சொல்கிறபோது, நிர்வாண ஞானம் அடைந்ததாகச் சொல்லப்படுகிறது. வடிவமே இல்லாத அந்த நிர்க்குண பிரம்மத்தோடு - பரபிரம்மத்தோடு சேர்தல் என்பதுதான் நிர்வாண ஞானம். 'இத்தகைய வடிவம்தான்' என்கிற சின்ன வட்டத்துக்குள் கட்டுப்படாமல், முழுக்க முழுக்கப் போய் பரமாத்மாவோடு சேருகிற தன்மை இருக்கிறதே, அதற்குத்தான் நிர்வாண ஞானம் என்று பெயர்.

நிர்வாண ஸுக தாயினி என்கிறபோது, எல்லையில்லாத, எந்த வடிவத்துக்குள்ளும் கட்டுப்படாத சுகம் - அந்த சுகம் - ஆனந்தம்-எவ்வளவு பெரியது, எப்படிப் பட்டது என்று விளக்கிச் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட எல்லையற்ற ஆனந்தத்தைத் தரக்கூடியவள் **நிர்வாண ஸுக தாயினி.**

அமுதமும் நஞ்சும் : ஸ்ரீ கண்டார்த சரீரிணி - ஸ்ரீ கண்டனாக இருக்கக்கூடிய பரமேசுவரனின் சரீரத்தில் ஒரு பாதியாகத் திகழ்பவள். ஈஸ்வரனுக்கு நீலகண்டன் என்றொரு பெயர். ஸ்ரீகண்டன் என்றாலும் நீலகண்டன் என்றாலும் ஒரே பொருள் தான். ஸ்ரீ என்கிற சம்ஸ்கிருத சொல்லுக்கு ஐச்வர்யம் என்று ஓர் அர்த்தம்; ஸ்ரீ என்றால் விஷம் என்று மற்றொரு அர்த்தம்! ரொம்ப அழகான சொல் இது. முற்றிலும் வேறான இரு பொருள்கள் கொண்டது. தமிழிலும் வடமொழியிலும் பாரதத்தின் பல்வேறு மொழிகளிலும் சரி - இதுபோன்ற பலவித மான அர்த்தங்கள் வரும் ஒரே சொற்கள்

திருவேதிக்குடி, ஸ்ரீ மங்கையர்க்கரசி அம்மன் கோயில், தஞ்சாவூர் – திருவையாறு சாலையில் திருசோற்றுத் துறைக்கு அருகில் உள்ளது.


அமைந்துள்ளன.

ஸ்ரீ என்ற சொல் மஹாலக்ஷ்மியையும் குறிக்கும். ஐச்வர்யத்தைத் தரக்கூடியவள் மஹாலக்ஷ்மிதானே. ஒரு பக்கத்தில் ஐச்வர்யம், இன்னொரு பக்கத்தில் விஷம் என்றால் நாம் புரிந்துகொள்ளலாம் - எது அதிகமானால் என்ன ஆகும் என்று! அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம் என்ற பழமொழிக்கு ஆதாரம் இதுதான்!

பாற்கடலைக் கடைந்தபோது, அமிர்த ஸ்வரூபிணியாகத் தோன்றினாள் மஹாலக்ஷ்மி. அதே பாற்கடலிலிருந்துதான் ஆலகால விஷம் தோன்றியது. அதற்கும் 'ஸ்ரீ' என்றுதான் பெயர்.

அந்த ஆலகால விஷத்தை உண்டவன் ஸ்ரீ கண்டன். அவனது அர்த்தசரீரத்தில் இடம் கொண்டவள் ஸ்ரீகண்டார்த்தசரீரிணி.

(வளரும்)


ஸ்ரீ மங்கையர்க்கரசி
அம்மன்
திருவேதிக்குடி

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.